www.padippakam.com

1-15 ஜூலை 92

ரூ.2.50

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

## பீடையின் பேயாட்சி



www.padippakam.com

## ஜூன் 16 பொது வேலை நிறுத்தம்:

# தேவை: அரசியல் வழி

இலட்சக்கணக்கான தொழிலாளர்களை வீதியில் வீசியெறியும் மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து, கடந்த ஜூன் 16 அன்று, தொழிலாளர்கள் நடத்திய நாடு தழுவிய பொது வேலை நிறுத்த - முழு அடைப்புப் போராட்டம் பீகார், கேரளம், மே.வங்க மாநிலங்களில் முழு அளவிலும், மற்ற மாநிலங்களில் பகுதியளவிலும் வெற்றி பெற்றுள்ளது. போராட்டத்தன்று வங்கித் துறையும், விமானப் போக்குவரத்தும் முற்றாக செயல்படாமல் முடங்கிப் போயின. முன்னணியாளர்களைப் பெருமளவில் கைது செய்தும், ஆயுதம் தாங்கிய போலீசு - துணை ராணுவப் படைகளைக் குவித்தும் போராட்டத்தை ஒடுக்கிய மத்திய - மாநில அரசுகள், புதிய பொருளாதாரக் கொள்கைக்கு நாட்டு மக்களிடம் பெருத்த ஆதரவு உள்ளதை இப்போராட்டத்தின் தோல்வி நிரூபித்துவிட்டது என்று எக்காளமிடுகின்றன.

உலக வங்கி, ஐ.எம்.எப்-இன் கட்டளைகளை ஏற்று நாட்டை முற்றாக மறு அடகு வைத்துவிட்ட நரசிம்மராவ் அரசு, ஏகாதிபத்தியங்கள் - தரகுப் பெருமுதலாளிகளின் நலனுக்காக புதிய பொருளாதாரக் கொள்கை எனும் மக்களைக் கொல்லும் கொள்கையைச் செயல்படுத்தி வருகிறது. நலிவடைந்த அரசுத் துறை ஆலைகளை மூடுவது, பிறவற்றைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது; தேவைக்கு அதிகமாக தொழிலாளர்கள் உள்ளதாகக்கூறி ஆட்குறைப்பு செய்து, வேலைப் பளுவை அதிகரிப்பது; தனியார் ஆலைத் தொழிலாளர்களை தானாகவே வெளியேறச் செய்யும் கொள்கையை (EXIT POLICY) செயல்படுத்துவது முதலானவை அதன் முக்கிய அம்சங்கள்.

இதன் விளைவாக, தேசிய பஞ்சாலைக் கழகம் (NTC) மூடப்பட்டு 75,000 பேர் வேலையிழக்கும் அபாயத்திலுள்ளனர். அரசுத் துறையில் 8 லட்சம் பேரும், வங்கித்துறையில் 3 லட்சம் பேரும் வீட்டுக்கு விரட்டப்பட உள்ளனர். இரயில்வேயில் 4 லட்சம் பேர் ஆட்குறைப்பு மூலம் வெளியேற்றப்பட உள்ளனர். மத்திய அரசுப் பணிகளில் புதிய பணியாளர் நியமனங்களுக்குத் தடைவிதித்துவிட்டு, பணிபுரிபவர்களில் 10% பேரை ஆட்குறைப்பு செய்ய அரசு தீர்மானித்திருக்கிறது. ஏற்கனவே உ.பி. சிமெண்ட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான 3 ஆலைகளை டால்மியா எனும் தரகுப் பெருமுதலாளிக்கு அரசு தாரைவார்த்துக் கொடுத்துவிட்டது.

இதன் காரணமாக மூண்டெழும் தொழிலாளர்களின் கோபம், மற்றும் குமுறலின் வெளிப்பாடாக அனைத்து இடதுசாரி மத்திய தொழிற்சங்கங்களும் அரசின் தொழிற் கொள்கையை எதிர்த்து ஜூன் 16 அன்று வேலை நிறுத்தம் - கடையடைப்புப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தன. வழக்கம்போலவே காங்கிரசின் துரோக தொழிற்சங்கமான ஐ.என்.டி.யு.சி.யும், பாரதீய ஜனதாவின் பி.எம்.எஸ். சங்கமும் இவ்வேலை நிறுத்தத்தில் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்தன.

புதிய தொழிற் கொள்கையின் பாதிப்புகளை உணர்த்த அடையாள வேலைநிறுத்தம் செய்வதைக்கூட சகித்துக் கொள்ளாத மத்திய அரசு, முன்னணியாளர்களைக் கைது செய்தும், பெருமளவில் துணை ராணுவப் படைகளைக் குவித்தும் அச்சுறுத்தியது. அதன் பங்காளியான பாசிச ஜெயா அரசு இன்னும் ஒருபடி மேலே சென்று தமிழகம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 25,000 பேரைக் கைது செய்தது. ஜூன் 16 அன்று ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தக்கூட தடைவிதித்தும், வேலைக்குச் செல்லுமாறு குண்டர்களை ஏவி தொழிலாளர்களை மிரட்டியும், குறிப்பாக போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு உணவும், சிறப்பு சன்மானமும் கொடுத்தும், ஆயுதமேந்திய போலீஸ் துணையுடன் பேருந்துகளை இயக்கியும் இப்போராட்டத்தை கடுமையாக அடக்கியது. சென்னை - அம்பத்தூர் அருகே நெடுஞ்சாலையில் ஒரு சரக்கு லாரிக்குத் தீவைக்க சிலர் முயற்சித்ததைச் சாக்கிட்டு அருகிலுள்ள மேனாம்பேடு, கருக்கு கிராமங்களுக்குப் படையெடுத்துச் சென்ற போலீசார், அம்மக்களின் அற்ப உடமைகளை நாசமாக்கி சூறையாடியதோடு பெண்கள் - குழந்தைகளைக்கூட மிருகத்தனமாக தாக்கியுள்ளனர்.

சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவது என்ற பெயரில் நடக்கும் இத்தகைய பாசிச அட்டூழியங்களை எதிர்கொண்டு முறியடிக்குமளவுக்கு தொழிலாளர் இயக்கம் இன்னமும் வளர்ச்சியடையவில்லை. கடந்த ஆண்டு நவம்பர் 29 அன்று புதிய தொழிற் கொள்கையை எதிர்த்து அடையாள வேலை நிறுத்தம் செய்த இத் தொழிற்சங்கங்கள், போராட்டத்தை அடுத்தகட்டத்திற்கு முன்னெடுத்துச் செல்லாமல் மீண்டும் அதே பாதையில்தான் செல்கின்றன.

பொது வேலை நிறுத்தத்தை ஆதரித்து சாலை மறியலில் ஈடுபட்ட பம்பாய் தொழிலாளர்கள் மீது தடியடி நடத்தி கைது செய்யும் போலீசு.



படிப்பகம்

இன்னும் சொல்லப் போனால், புதிய பொருளாதாரக் கொள்கை என்பது தொழிலாளிகளின் கழுத்தை இறுக்கும் சுருக்குக்கயிறு மட்டுமல்ல; விலையேற்றம், ரேஷன் கடை ஒழிப்பு, மானியங்கள் வெட்டு, விவசாயத்தை நாசமாக்கி ஏகாதிபத்தியங்களின் இரும்புப் பிடியில் தள்ளுவது என நாட்டையும் மக்களையும் சூறையாடும் கொள்கையாகும். இதனை நியாயப்படுத்தி காங்கிரசு, பாரதீய ஜனதா, அ.தி.மு.க, சமஜ்வாடி ஜனதா ஆகிய பிற்போக்கு கட்சிகள் ஒரே அணி வரிசையில் நிற்கின்றன. தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் பிரிவினைவாத பயங்கரவாத பீதியூட்டி, தொழிற்சங்க உரிமையையும், ஜனநாயக உரிமைகளையும் பறித்து பாசிச அடக்கு முறையை அரங்கேற்றத் துடிக்கின்றன. ஆனாலும், தற்போதைய தொழிலாளர் விரோதக் கொள்கைகளும் பெருகிவரும் கருப்புச் சட்டங்களும் பாசிசத் தாக்குதலுக்கான தயாரிப்பு என்பதை விளக்கி தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் அரசியல் ரீதியாக அணி திரட்டுவதை அறிந்தே இச்சங்கங்கள் புறக்கணிக்கின்றன.

முந்தைய பாசிச ராஜீவ் அரசு இதே கொள்கையை அறிவித்தபோது ''பொதுத்துறையைச் காப்போம்!'' என்று போராடிய போதும்; இப்போது ராவ் ஆட்சியில் போராடும் போதும் போலிக் கம்யூனிஸ்டுகளும் தேசிய முன்னணியும் அரசின் கொள்கையை - அதிலும் தொழிலாளருக்கு எதிரான பொருளாதார அம்சத்தை மட்டும்தான் எதிர்க்கின்றன. அரசின் மக்கள் விரோத, தேசவிரோத, பாசிசத் தன்மையை விளக்கி, அதை தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் அணிதிரண்டு வீழ்த்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதில்லை. அதற்கான அரசியல் போராட்டங்களும் நடத்துவதில்லை.

எனவே, தொழிலாளர் நலனை மட்டுமே முன்னிறுத்தாமல், தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் ஏகாதிபத்தியங்களுக்குப் பலியிடும் இன்றைய கேடுகெட்ட அரசுக்கும், அச்சுறுத்தும் பாசிச அபாயத்துக்கும் எதிராக அரசியல் போராட்டங்களையும், அரசியல் அதிகாரத்துக்கான கிளர்ச்சிகளையும் தொழிலாளி வர்க்கம் தலைமையேற்று நடத்த வேண்டும். ஓட்டுக் கட்சிகளின் தலைமையிலான பிழைப்புவாத சங்கங்களைப் புறக்கணித்து புரட்சிகர சங்கங்களைக் கட்டியமைத்து, ஏகாதிபத்திய எதிர்ப்பு பேரியக்கமாக போராட்டத்தை வளர்த்தெடுப்பதன் மூலமே இதைச் சாதிக்க முடியும்.

● மணி

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஏழாம் ஆண்டு

15 - 16

16 ஜூன் - 15 ஜூலை '92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 15

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# அரசுத் தலைவர் தேர்தல்: வினோதக் காட்சிகள்

நாட்டில் அரங்கேறிவரும் வினோதமான அரசியல் காட்சிகளில் ஒன்றாக ஒன்பதாவது அரசுத் தலைவர் தேர்தலில் அரசியல் கட்சிகளின் அணி சேர்க்கை அமைந்து விட்டது. அரசுத் துணைத் தலைவர் சங்கர் தயாள் சர்மா காங்கிரசு - அ.தி.மு.க - முசுலீம் லீக் கூட்டணியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். இவருக்கு சமாஜவாதி ஜனதா கட்சி (சந்திரசேகர் கும்பல்), போட்டி ஜனதா தளம் (அஜித் சிங் பிரிவு), போட்டி தெலுங்கு தேசம் (உபேந்திரா பிரிவு), அரியானா விகாசு மாஞ்சு (பான்சிலால் கும்பல்) ஆகிய சிறு கட்சிகள் சார்பாகவும் வேட்புமனு தாக்கலாகி ஆதரவு அளித்துள்ளன. இதைவிட முக்கியமாக தேசிய முன்னணியின் உறுப்புகளாகிய காங்கிரசு (சோசலிச) கட்சியும், மணிப்பூர் மக்கள் கட்சியும், இடதுசாரி கூட்டணியின் தலைமையான ''மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி'' யும் தமது அணிகளை முறித்துக் கொண்டு சர்மாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

எதிர்க் கட்சிகளின் ஆதரவுபெற்ற சுயேட்சை வேட்பாளராக பேராசிரியர் ஜி.ஜி.ஸ்வெல் நிறுத்தப்பட்டுள்ளார். எலியும் பூனையுமாக இருந்த பாரதீய ஜனதா கட்சியும், ஜனதா தளம் - தேசிய முன்னணியும் தனித்தனியே வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. தாழ்த்தப்பட்ட - பழங்குடியைச் சேர்ந்த ஒருவரை அரசுத் தலைவர் தேர்தலுக்கு நிறுத்த வேண்டும்; அந்த நோக்கத்தோடு மேகாலாயா பழங்குடியைச் சேர்ந்த ஜி.ஜி.ஸ்வெல்லைத் தாமே முன்மொழிந்ததாக ஜனதா தளம் - தேசிய முன்னணி கூறிக்கொள்கிறது. ஜி.ஜி.ஸ்வெல்லை நிறுத்துவது என்று இரண்டு மாதங்களுக்கு முன்பே தீர்மானித்து அவரது ஒப்புதலைப் பெற்றதோடு, தமது கொள்கைகளிலும் ஸ்வெல் உடன்படுவதாக பாரதீய ஜனதா கட்சி உரிமை பாராட்டிக் கொள்கிறது. ஆனால் காங்கிரசு வேட்பாளரைத் தான் ஆதரித்தால் அரசுத் துணைத் தலைவர் பதவியைத் தனது கட்சிக்கும் தரவேண்டும் என்பதற்காக பாரதீய ஜனதா நடத்திய பேரம் முறிந்து போனதால்தான் ஸ்வெல்லை ஆதரிப்பது என்று அது முடிவு செய்தது. இடதுசாரிக் கூட்டணியின் சில உறுப்புகள் ஸ்வெல்லை ஆதரிப்பது என்று முடிவு செய்துள்ளன.

அரசுத் தலைவர் தேர்தலுக்கான வாக்காளர் தொகுதியில் காங்கிரசும் அதன் கூட்டணி கட்சிகளும் சிறுபான்மையாகவே உள்ளன; இருந்தபோதும் பாரதீய ஜனதா மற்றும் தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணி ஆகிய இரண்டு அணியாக எதிர்த்தரப்பு பிரிந்துள்ளன; அவை இரண்டும் இணைந்து பொது வேட்பாளரை நிறுத்தவே முடியாது என்பதால் காங்கிரசு வேட்பாளர் வெற்றி பெறுவது நிச்சயம்தான் என்று அரசியல் விமர்சகர்கள் கருதினர். எதிர்க் கட்சிகளைப் பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடி, தனது சிறுபான்மை அரசைக் காத்துக் கொள்வதில் வெற்றி பெற்றுவந்த நரசிம்மராவ் நரித்தனம் இந்த அரசுத் தலைவர் தேர்தலின் மூலம் மேலும் உறுதிப்படுத்தி விட்டது. இரண்டு எதிர்த் தரப்புகளையும் மாறிமாறிச் சார்ந்து நிற்பதை, குறிப்பாக பாரதீய ஜனதா கட்சியுடன் கள்ளக்கூட்டுச் சேருவதால் மதச்சார்பற்ற, முற்போக்கு முகமூடி கலைவதை முடிவுக்குக் கொண்டுவர காங்கிரசு ஓராண்டாக முயன்று வந்தது. இதற்காக தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணி ஆகிய இரண்டுக்கும் இடையிலான கூட்டை உடைத்து இடதுசாரி கூட்டணியைத் தன்பக்கம் இழுத்துக் கொள்ளப் பலவாறு முயன்றது. ராஜீவ் காந்தி காலத்தில் இருந்தே இரகசிய பேரங்கள் நடத்திவந்த ஜோதிபாசு - சுர்ஜீத் சிங் கும்பல் தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது. இந்த அரசுத் தலைவர் தேர்தலை அதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது. ஆகவே, பல்வேறு அரசியல் சந்தர்ப்பவாத, பிழைப்புவாதக் கட்சி வேட்பாளரான சர்மாவின் வெற்றியைக் காங்கிரசு உறுதி செய்துவிட்டது. ஆனால் அதைவிட முக்கியமாகக் கவனிக்க வேண்டியது காங்கிரசு எப்படி இதைச் சாதித்தது; மற்றபிற அரசியல் கட்சிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் எப்படி இதற்குத் துணை போயின என்பதுதான்.

அடுத்த அரசுத் தலைவர் யார் என்பதற்கான விவாதங்களை அரசியல் கட்சிகள் துவங்குவதற்கு முன்பே ''நாடாளுமன்ற தாழ்த்தப்பட்ட, பழங்குடி உறுப்பினர்களின் பேரவை'' தமது சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த ஒருவராகத்தான் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்தது. ஜனதா தளத்துக்குள் வி.பி.சிங் - சரத் யாதவ் - ராம் விலாஸ் பஸ்வான் கோஷ்டியினர் இக் கோரிக்கைக்கு உறுதியான ஆதரவளித்தனர். கட்சிக்குள் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் முயன்று ஜனதா தளம் - தேசிய முன்னணி ஆகியவை இதை ஏற்கும்படி செய்தனர். இடதுசாரிக் கூட்டணிக்குள் ''இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி'' (இந்திரஜித் குப்தா பிரிவு) இக் கோரிக்கையை ஆதரித்தது. மற்றபடி இட ஒதுக்கீடு - மண்டல் பரிந்துரைகளை எதிர்த்த எல்லா அரசியல் கட்சிகளும் மறைமுகமாகவும், தமது பழைய பாணியிலும் எதிர்ப்புக் காட்டின. நாட்டின் மிக உயர்ந்த பதவிக்கு சாதி அடிப்படையில் பார்க்காது தகுதி - திறமை பார்த்துத் தெரிந்தெடுக்க வேண்டும் என்றன. சமீபத்திய திருப்பதி காங்கிரசு மாநாட்டில் கட்சி செயற்குழுவுக்கு ஒரு தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் கூடத் தெரிந்தெடுக்கப் படவில்லையே என்று அக்கறைப்பட்ட நரசிம்மராவ், இந்த விசயத்தில் தலித்துக்களின் கோரிக்கையைக் கண்டு கொள்ளாது, பொதுக் கருத்து அடிப்படையில் ஏற்புடையவரை தெரிந்தெடுக்க வேண்டும் என்றார். இதை ஆதரித்த ஜோதிபாசு - சுர்ஜித் சிங் கும்பலுடன் இரகசிய பேரம் நடத்தி '' பொதுக் கருத்து'' என்பதைக் கிடப்பில் போட்டுவிட்டு சர்மா பெயரை அறிவித்தார்.

பொதுக் கருத்து, தகுதி - திறமை என்பது எல்லாம் எதுவும் கிடையாது; சர்மா ஒரு காங்கிரசு விசுவாசியான பார்ப்பனர்; அதற்காகத்தான் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பதே உண்மை. தாழ்த்தப்பட்ட - பழங்குடி ஒருவரை அரசுத் தலைவராக்க வேண்டும் எனக் கோருவோரிடமும் உறுதி கிடையாது - இதுவும் நிரூபணமாகிவிட்டது. இடதுசாரி கூட்டணியுடன் உள்ள கூட்டை காப்பாற்றிக் கொள்வதற்காக ஸ்வெல்லுக்குத் துரோகமிழைப்பதற்கும் வி.பி.சிங் தயாராக இருந்தார். அரசுத் தலைவராக யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அடிப்படை மாற்றம் எதுவும் நடந்துவிடாது. என்றாலும் நாடாளுமன்ற தலித் உறுப்பினர்கள் 106 பேரும் கட்சிக் கட்டளையை மீறி உறுதியாக, மனசாட்சிப்படி வாக்களித்தால் ஸ்வெல் வெற்றி பெற்றுவிடவும் முடியும். ஆனால் அவ்வாறு செய்வதில்லை என்று ராம் விலாஸ் பஸ்வான் உட்பட தலித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். அரசியல்வாதிகள் அத்தனை பேரின் சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதம், துரோகத்தனம் இங்கே அம்மணமாகி நிற்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# மக்களை வதைக்கும் பீடையின் பேயாட்சி

**ஓராண்டு ஆட்சியில் மக்கள் கண்டதெல்லாம் விலையேற்றம், அடக்குமுறை, துப்பாக்கிச் சூடுகள், ஜெயாவின் ஊழல், அடாவடித்தனம், ஆடம்பர வக்கிர வாழ்வுதான்! இதற்கு வீரவரலாறு கூறும் மாநாடு ஒரு கேடா?**

மிருக பலமிக்க சட்டமன்றப் பெரும்பான்மையைக் கொண்டு ''என்னை யாரும் அசைக்க முடியாது'' என்று அதிகார போதை தலைக்கேறி ஆட்டம் போடுவதில் புதிய வரலாறு படைக்கும் பாசிச ஜெயா, அதையே வீரவரலாறு படைக்கும் ஓராண்டு சாதனையாக சித்தரித்து மதுரையில் மாநாடு கூட்டி கொட்டமடிக்கிறார். 150 அடி உயர கட் - அவுட்டுகள், பளபளப்பான சுவரொட்டிகள், ராட்சத பலூன்கள், இலவச ரயில் - போருந்து, இலவச விருந்து, குண்டு துளைக்காத மேடை, குளுகுளு ஓய்வறை, வெள்ளிச் சிம்மாசனம், அலங்கார வளைவுகள், நாளேடுகளில் பக்கம் பக்கமாக விளம்பரம், அலங்கார ரதம் என ஊர்ப்பணத்தைக் கொள்ளையடித்து வக்கிரமான விழா நடத்தி குதூகலிக்கிறார். இலட்சக்கணக்கில் மக்கள் திரளுவதைக் காட்டி, தனது அடக்குமுறை ஆட்சிக்கு நியாயம் கற்பிக்க முயலுகிறார். ஆனால் மேலோட்டமாகப் பார்த்தாலே அவரது ஓராண்டு ஆட்சியின் யோக்கியதை பாமரருக்கும் புரிந்துவிடும். அவரது ஓராண்டு ஆட்சியின் 'சாதனை'களைப் பார்ப்போமா?

### பார்ப்பன கும்பலின் பாசிச பேயாட்சி

ஆட்சிக்கு வந்ததும் ஆயிரம் கோரிக்கைகளோடு மக்கள் காத்திருந்த போது, அறிவிக்கப்பட்டதோ ஆலய பாதுகாப்பு நிதி. அம்மாவே காசுபோட்டு துவக்கி வைக்க ஆரம்பமானது வசூல் வேட்டை. கோயில் சொத்துக்களை மடாதிபதிகளும் பார்ப்பனர்களும் விழுங்க அரசு தலையீடற்ற ஆன்றோர் வாரியம், கோயில்களைப் பாதுகாக்க தனி போலீசுப் படை, வெண்கலச் சிலைகளுக்கு வியர்த்துப் போகும் என குளுகுளு வசதி, மூன்று வேளை பூசை, அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் என்று பார்ப்பன கும்பலின் மீட்சிக்கு புத்துயிர் அளித்தார் ஜெயா. வருணாசிரம தருமத்தை மீண்டும் நிலைநாட்ட வேதாகம கல்லூரி துவக்கியும், இந்தி மொழியைத் திணிக்கும் நவோதயா பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளித்தும் ''இது நம்மவாள் ஆட்சி'' என்று பிராமண சங்கமே பாராட்டும் அளவுக்கு பார்ப்பன கும்பலின் ஆட்சியை நிலைநாட்டியுள்ளார்.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து பிரிவினைவாத பயங்கரவாத பீதியூட்டுவதே ஜெயா கும்பலின் அரசியலாகிப் போனது. புலிகள் இயக்கத்தை தடை செய்தும், ஈழ விடுதலை ஆதரவு இயக்கங்களை பிரிவினைவாத அமைப்புகளாகக் கூறி ஒடுக்கியும், அரசியல் பழிவாங்கும் வெறியோடு எதிர்க் கட்சிகளை அடக்கியும் அதன் மூலம் தனது பார்ப்பன - பாசிச அடக்குமுறையை நியாயப்படுத்தியும் தமிழினத்துக்கு எதிராக போர் தொடுத்து வருகிறது ஜெயா கும்பல். ஈழ அகதிகளை மனிதத்தன்மையற்ற முறையில் நடத்தி அவர்களை கட்டாய வெளியேற்றம் செய்தது; தி.மு.க. பிரமுகர்களையும், புரட்சிகர இயக்கத்தினரையும் கொடிய ''தடா'' சட்டத்தின் கீழும், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் சிறையிலடைத்தது. பொதுக் கூட்டங்களுக்கும், மாநாடுகளுக்கும் தடை விதித்தது; சுவரெழுத்து எழுதினால்கூட பொய் வழக்குகள் போட்டு சிறையிலடைத்தது. தனது அட்டூழியங்களை வெளியில் தெரியாமல் இருக்க வேண்டுமென்றால் எதிர்க் கட்சிகளை மட்டுமின்றி, பத்திரிகைகளுக்கும் வாய்ப்பூட்டு போட வேண்டுமென்று பாய்ந்தார் பாசிச ஜெயா. உரிமை மீறல் என்கிற பெயரில் சட்டமன்ற சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி பத்திரிகையாளர்களைக் கூண்டிலேற்றியும், பொய் வழக்குகள் போட்டுள்ளதோடு குண்டர்களை ஏவி தாக்கியும் அடிப்படை உரிமைகளையெல்லாம் பறித்து பாசிச வெறியாட்டம் போடுகிறார். பாசிச ஜெயா கும்பலின் பாசறையாக தமிழக சட்டமன்றம் மாறிவிட்ட பிறகு, எதிர்த் தரப்பினரை எதற்கெடுத்தாலும் வாயடைப்பதும் எதிர்த்தால் தாக்குவது அல்லது வெளியே தூக்கி வீசுவதும்தான் அதன் நடவடிக்கையாக உள்ளது.

> **அறிவிப்பு**
>
> அன்பார்ந்த தோழர்களே,
>
> தவிர்க்கவியலாத காரணங்களால் ஜூன் 16-30 இதழை வெளியிட இயலவில்லை. இதனால் தங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம்.
>
> —ஆசிரியர் குழு

பாசிசத்தாய் எட்டடி பாய்ந்தால் மந்திரிகளும் எம்.எல்.ஏ.க்களும் பதினாறு அடி பாய்கின்றனர். அன்றாடம் செய்தித் தாள்களைப் புரட்டினால் எந்த எம்.எல்.ஏ. யாரை அடித்தார் என்பது வானிலை அறிக்கை போல தவறாமல் இடம் பெற்று விடுகிறது. கோடி கோடியாய் அவர்கள் அடிக்கும் கொள்ளையும், ஜெயாவுக்குத் தவறாமல் செலுத்தும் கப்பமும் கதைகதையாய் பத்திரிகைகளில் நிரம்பி வழிகிறது.

### விலையேற்றம் சாராய சதிராட்டம்

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்த ஜெயா கும்பலின் ஆட்சியில் விலைவாசி தாறுமாறாக உயர்ந்து விட்டது. அரிசி விலையோ ஆகாயத்தில் பறக்கிறது. இதுதவிர, பால் விலை, பேருந்துக் கட்டணம், மின்சாரக் கட்டணம் ஆகிய வற்றை ஜெயா அரசு உயர்த்திவிட்டது.

ரேஷன் கடைகளில் ஒரு குடும்பக் கார்டுக்கு வழங்கப்பட்ட 20 கிலோ அரிசி, ஜெயா ஆட்சியில் 12 கிலோவாகக் குறைக்கப்பட்டது. ரேஷன் கடைகளிலும் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை, கோதுமை, பாமாயில் ஆகியவற்றின் விலை உயர்ந்தது. முன்பு மாதம் ஒரு கிலோ வழங்கப்பட்ட பாமாயில் இப்போது ஆண்டுக்கு இரண்டரை கிலோவாக குறைக்கப்பட்டுள்ளது. ரேஷன் கடை கண்காணிப்புக் குழுக்களில் கூட அ.தி.மு.க. குண்டர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு சூறையாடுகின்றனர்.

குழந்தைகளுக்கான இலவச சத்துணவுத் திட்டத்தில் உணவு பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை ஜெயா ஆட்சியில் குறைக்கப்பட்டுவிட்டது. விலைவாசி பல மடங்கு உயர்ந்த போதிலும் ஒரு குழந்தைக்கு 13 பைசா என்ற விகிதத்தில்தான் தொகை ஒதுக்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்திற்கு அரசு நிறுவனமான 'டாப்கோ'விடமிருந்து முட்டைகள் பெறுவது நிறுத்தப்பட்டு, மந்திரிகளின் கொள்ளைக்காக ஆந்திராவிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து வாங்கப்படுகிறது.

பூரண மதுவிலக்கை உறுதியாக செயல்படுத்துவோம் என்று சவடால் அடித்த ஜெயா, ஒருபுறம் சாராயக் கடைகளை மூடிவிட்டு மறுபுறம் விஸ்கி - பிராந்திக் கடைகளைத் திறந்துவிட்டார். கூடவே, 'பார்' வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழக கிராமப் புறங்களில் கூட சீமைச் சாராயக் கடைகள் பெருகுமளவுக்கு புதிய வரலாற்றைப் படைத்துள்ளார் ஜெயா. இது மட்டுமின்றி உள்நாட்டில் தயாரிக்கப்படும் சீமைச் சாராயத்துக்கு ஆயத்தீர்வையைக் குறைத்து, சாராய முதலாளிகளுக்கு சலுகை காட்டியுள்ளார். ரூ.14 கோடி மதிப்புடைய அரசுக்குச் சொந்தமான பீர் தொழிற்சாலையை ரூ.10.5 கோடிக்கு டெண்டர் ஏதுமின்றி புருஷோத்தமன் என்ற சாராய முதலாளிக்கு ரகசிய பேரத்தின் மூலம் விற்று, ரூ.3.5 கோடியை சுருட்டிக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com

## ஜான்சி ராணியா?
## டான்சி ராணியா?

இதே போல 3.78 கோடி ரூபாய் மதிப்புடைய தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்துக்குச் (டான்சி) சொந்தமான 54 ஏக்கர் நிலத்தை, விதி முறைகளை மீறி 1.82 கோடிக்கு விற்பனை செய்ததாக கணக்கு காட்டி, தனது ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துக்கு வளைத்துப் போட்டுக் கொண்டு ஜான்சி ராணி ஜெயலலிதா டான்சி ராணியாக ஊழலில் சாதனை படைத்தார்.


தூத்துக்குடியிலுள்ள "ஸ்பிக்" உரத் தொழிற்சாலையில் முதன்மைப் பொறுப்பை அரசும், இரண்டாம் மட்ட பொறுப்பை முத்தையா செட்டியாரும் பெற்றிருந்த நிலையை மாற்றி, அதை முத்தையா செட்டியார் குடும்பத்துக்கே ஜெயா தாரைவார்த்துக் கொடுத்தார். இதன்மூலம் ஸ்பிக் நிறுவனமும், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும் கூட்டு சேர்ந்து துவங்கவுள்ள 2,000 கோடி ஆரோமேடிக்ஸ் தொழிற்சாலையில் அரசின் பங்கு குறைந்து தனியாரின் ஆதிக்கம் வலுப்பெற வழிவகை செய்தார்.

இதேபோல, சென்னை மூர் மார்க்கெட் அருகிலுள்ள 40 கோடி ரூபாய் மதிப்புடைய அரசுக்குச் சொந்தமான அல்லிகுளம் நிலத்தை பழனி பெரியசாமி என்ற பல்லவா ஓட்டல்ஸ் முதலாளிக்கு ஐந்து நட்சத்திர விடுதி கட்ட ரூ. 2 கோடிக்கு விற்றார். இதுதவிர சாலைகளை தனியார் பராமரிப்பில் ஒப்படைக்க முடிவு செய்துள்ளார்.

## ஜெயா கும்பலின் ஆடம்பர
## வக்கிர வாழ்வு

இப்படி ஒருபக்கம் தனியார் முதலாளிகளுக்கு வசதி செய்து தரும் ஜெயா, தனக்கும் தனது அந்தப்புர தோழி சசிகலாவின் குடும்பத்துக்கும் வசதியைப் பெருக்கிக் கொள்ளத் தவறவில்லை. ஐதராபாத்தில் பதினெட்டு ஏக்கரில் திராட்சைத் தோட்டம், அதன் நடுவே ஆடம்பர பங்களா, ஊட்டியில் எஸ்டேட், இதயம் பேசுகிறது வாரப் பத்திரிகைக்கு சொந்தமான நிலம் - கட்டிடத்தை வாங்கியது என்று பட்டியல் நீளுகிறது. மலேசியா, சிங்கப்பூரில் சொத்துக்கள் வாங்கியுள்ளதாகவும் அமெரிக்க வங்கிகளில் கருப்புப் பணத்தைக் குவித்துள்ளதாகவும் செய்திகள் கசிந்துள்ளன. சசிகலாவின் அண்ணன் டாக்டர் வினோதகன் தஞ்சையில் ஒரு தனியார் மருத்துவமனையைக் கட்டியுள்ளார். திருத்துறைப்பூண்டியில் கோடிக் கணக்கில் செலவிட்டு திருமண மண்டபம் கட்டுகிறார் சசிகலா. தஞ்சை மாவட்டத்தின் பல பகுதிகளில் நிலங்கள், பங்களாக்கள் என சசிகலா குடும்பம் வாங்கிக் குவிக்கிறது.

ஆட்சிக்கு வந்த ஓராண்டிற்குள்ளேயே தமிழகத்தை மொட்டை அடித்து ஊழல் கொள்ளையில் சாதனை படைக்கும் ஜெயா கும்பல், ஊதாரித்தனத்திலும் உல்லாசத்திலும் மூழ்கி வக்கிரமாக ஆட்டம் போடுகிறது. தமிழகத்தில் 13 மாவட்டங்கள் வறட்சியால் பீடிக்கப்பட்டு, குடிநீருக்கே வழியின்றி மக்கள் பரிதவிக்கும்போது, பர்கூர், காங்கேயம், விழுப்புரம் என திக்விஜயம் புறப்பட்ட அல்லிராணி ஜெயா, ஆயிரம் கார்களுடன் உல்லாச பவனி வந்தார். வழி நெடுக கட் அவுட்டுகள், மலர்ப் பாதை, விமானம் மூலம் மலர் தூவுவது, குளுகுளு கழிப்பறை என அவரை அண்டிப் பிழைக்கும் கூட்டம் கோடிக்கணக்கில பணத்தை வாரியிறைத்து கொட்டமடித்தது. அதே சமயம் போடி - தேனி பகுதியில் குடி தண்ணீருக்காகப் போராடிய மக்கள் மீது ஜெயாவின் போலீசு தடியடி நடத்தி 20 பேரின் மண்டையைப் பிளந்தது.



பாசிஸ்ட் ஜெயாவுக்கு அ:தி.மு.க. குண்டர்களின் அணிவகுப்பு மரியாதை.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஆளும் ராணிக்குரிய ஏகபோகத்துடன் மகாமகக் குளத்தில் நீராடச் சென்ற ஜெயா, தனது பாவம் தீர நூற்றுக்கும் மேற்பட்டோரை நர பலி கொடுத்தார் மகாமகச் சாவுகளுக்கு உரிய நிவாரணம், விசாரணை கோரிப் போராடக்கூட எதிர்க் கட்சிகளுக்கும், கட்சி சாராத அமைப்புகளுக்கும் உரிமை மறுக்கப் பட்டது.

## ஓராண்டிற்குள் ஒன்பது
## துப்பாக்கிச் சூடுகள்

காவிரி நீர் வென்ற புரட்சித் தலைவியாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் ஜெயா, காங்கிரசோடு சேர்ந்து துரோகமிழைத்ததைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை. கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்படுவதை எதிர்த்துப் போராடிய மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி 3 பேரை பலி வாங்கினார் பாசிச ஜெயா. கர்நாடகத்திலிருந்து அகதிகளாக ஓடி வந்த தமிழர்களுக்கு எந்த நிவாரணமுமின்றி பரிதவிக்கவிட்டார். பரமக்குடியில் அம்பேத்கார் சிலை திறப்பு நிகழ்ச்சியில் மேல் சாதியினர் நடத்திய கலவரத்தையொட்டி போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 தாழ்த்தப்பட்டோர் கொல்லப் பட்டனர். குமரி மாவட்டத்தில் மீனவர்களுக்கு எதிராக உயர் சாதி இந்துக்கள் நடத்திய கலவரத்தின்போது போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தி மீனவர் ஒருவரைக் கொன்றனர். இவ்வாறு ஆட்சிக்கு வந்த ஓராண்டிற்குள் 9 இடங்களில் துப்பாக்கிச் சூடுகள் நடத்தி அடக்குமுறையில் புதிய சாதனை படைத்துள்ளார்.

## ஆணவச் செருக்கு
## அடக்குமுறை ஆட்சி

சத்துணவுப் பணியாளர்களை அரசு ஊழியர்களாக நிரந்தரம் செய்வதாக வாக்களித்த ஜெயா, கோட்டை நோக்கி கொளுத்தும் வெயிலில் கைக்குழந்தைகளுடன் அவர்கள் ஊர்வலமாகச் சென்றபோது என்னால் முடியாது என்று கையை விரித்தார். மேலும் சத்துணவுப் பொருட்களைத் திருடுவதாக அவர்களை இழிவுபடுத்தினார். பத்தாண்டுகளுக்கும் மேலாக பல்லாயிரக் கணக்கில் தற்காலிக ஊழியர்களாக உள்ள தட்டச்சர்கள், சுருக்கெழுத்தாளர்களின் போராட்டத்தை ஒடுக்கியதோடு, அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய போது "அவர்கள் இன்னமும் சாகாமல்தான் இருக்கிறார்கள்" என்று ஆணவத்தோடு கேலி செய்தார் பாசிச ஜெயா.

தொழிலாளர்களைக் குறைத்துவிட்டு, நலிவடைந்த பின்னிமில்லைத் திறந்து வைத்த ஜெயா, "எனக்கு வேலை நிறுத்தமோ, போராட்டமோ பிடிக்காத விஷயம்" என்று தமிழக தொழிலாளர்களையே எச்சரித்தார். அதன் பிறகு கடந்த ஜூன் 16 அன்று நடைபெற்ற அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை கைது செய்து சிறையிலடைத்தார். போலீசாரின் துணையோடு கருங்காலிகளைக் கொண்டு பேருந்துகளை இயக்கி

படிப்பகம்

www.padippakam.com

யதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளர்கள் மீது தடியடி நடத்தப்பட்டது.

கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் வாங்கிய கடனை ரத்து செய்ததைப் பற்றி வெறும் கண்துடைப்பு என்று கேலி செய்த ஜெயா, என்னால் கடன்களை ரத்து செய்ய முடியாது என்று விவசாயிகளுக்கு பட்டை நாமம் போட்டார். விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை நிறுத்திய ஜெயா, அதற்கெதிராக எதிர்க் கட்சிகள் போராடிய போது அடக்கி ஒடுக்கி விட்டு, இப்போது இந்த உத்திரவை ரத்து செய்துள்ளார்.

''பொதுச் சொத்துகளுக்கு நாசம் விளைவிக்கும் வகையில் மாணவர்கள் நடந்து கொண்டால், இந்த அரசு பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது'' என்று 2.9.'91 அன்று தொலைக் காட்சியில் தோன்றி எச்சரித்த ஜெயா, திண்டிவனத்தில் கல்லூரிக்கு சாலை வசதி கோரி மறியலில் ஈடுபட்ட மாணவர்கள் மீது போலீசை ஏவி அடக்கினார். மதுரை சட்டக் கல்லூரி மாணவர் போராட்டத்தை அடக்க, போலீசை ஏவி மாணவர்களை மிருகத்தனமாக தாக்கி சிறையிலடைத்தார். பேருந்துக் கட்டண உயர்வை எதிர்த்து தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டதில் குதித்ததும் போலீசைக் கொண்டு காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி, பள்ளி - கல்லூரிகளை மூடி போராட்டத்தை அடக்கினார்.

ஜெயா ஆட்சியின் ஓராண்டு நிறைவை யொட்டி அண்மையில் சில பத்திரிகைகள் நடத்திய கருத்துக் கணிப்பின்படி ஆகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் ஜெயா கும்பலின் மீது வெறுப்பை உமிழ்கின்றனர். ''இவர் எம்.ஜி.ஆரைப் போல இல்லை. தன்னையே பிரதானப்படுத்தி எம்.ஜி.ஆர். புகழை மறைத்துவிடப் பார்க்கிறார். கட்சித் தொண்டர்களுக்கும் அவருக்கும் நெருக்கமான உறவு இல்லை. அவருக்காக பல ஆண்டுகளாக உழைத்த எங்களை அவர் கண்டு கொள்ளவில்லை. திடீரென வந்து அவரை துதிபாடிய சிலர் இன்று உயர் பதவிகளைப் பெற்றுவிட்டனர்'' என்று புலம்புகிறார் செங்கை மாவட்ட அ.தி.மு.க. தொண்டர் செல்வராஜ். ஒரு சிறைக் கைதியைப் போல கருப்புப் பூனைகளின் பாதுகாப்பில் மந்திரிகளேகூட நெருங்க முடியாமல் தமிழகத்தை ஆளும் ஜெயாவுக்கு கட்சித் தொண்டர்கள் மட்டுமல்ல; உழைக்கும் மக்களைப் பற்றிகூட ஒன்றும் தெரியாது. இத்தகைய கேடுகெட்ட ஆட்சி உழைக்கும் மக்களுக்கும் தமிழினத்துக்கும் எதிரானது. இந்த பார்ப்பன - பாசிச ஆட்சி இனியும் நீடிக்கக் கூடாது; நீடிக்க தார்மீக அடிப்படையும் கிடையாது. அதன் ஓராண்டுகால வேதனையால் குமுறிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களை பார்ப்பன - பாசிசத்துக்கு எதிரான மாபெரும் எழுச்சிக்கு அரசியல் ரீதியாக அணிதிரட்ட வேண்டும். தமது தோள்களில் சுமத்தப்பட்டுள்ள இம்மகத்தான கடமையை நிறைவேற்ற புரட்சிகர - ஜனநாயக சக்திகள் முனைப்புடன் செயலாற்றிட வேண்டும்.

○ மனோகரன்

## போலீசு - கிரிமினல் - அரசியல்வாதி

# சமூக விரோத கூட்டு!

**அப்பாவிகள் மீதான போலீசு மற்றும் ரௌடிகளின் தாக்குதல்கள் அதிகரித்ததற்கு ஜெயலலிதா கொடுத்த ஊக்குவிப்பே காரணம்.**

சிதம்பரம் அண்ணாமலை நகர் போலீசு நிலையத்தில் ஓர் அப்பாவி கொல்லப்பட்டதும் ஓர் அபலைப் பெண் கற்பழிக்கப்பட்டதும் அண்மையில் தமிழகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய செய்தி! அண்ணாமலை நகர் போலீசு, கடந்த 29.5.92 அன்று ஒரு திருட்டு வழக்கில் கூலித் தொழிலாளி நந்தகோபாலை (தாழ்த்தப்பட்டவர்) தொடர்புபடுத்தி இழுத்துச் சென்றது. விசாரணை என்ற பெயரில் செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொல்லி சித்திரவதை செய்தனர். குண்டாந்தடியாலும், பூட்சுக் காலாலும், துப்பாக்கி கட்டையாலும் காட்டுமிராண்டித்தனமாக தாக்கி நந்தகோபாலைக் கொன்றது, போலீசு கும்பல். நந்தகோபாலின் மனைவி பத்மினியையும் போலீசு நிலையம் கொண்டு வந்த போலீசு மிருகங்கள் அவரை நிர்வாணப்படுத்தி ரசித்ததோடு கும்பலாக கற்பழிக்கவும் செய்தன. நந்தகோபால் தற்கொலை செய்து கொண்டதுபோல் ஜோடித்தும், பத்மினியை வெளியே சொன்னால் கொன்று விடுவோம் என மிரட்டியும் கூட உண்மை அம்பலத்திற்கு வந்துவிட்டது.

இக் கொலை, கற்பழிப்பைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் எதிர்க் கட்சியினரும், பெண்கள் அமைப்புகளும் பலத்த எதிர்ப்பு குரல் கொடுத்ததும் தவிர்க்க முடியாமல் ஜெயலலிதா நீதி விசாரணைக்கு உத்தரவிட்டார். கொலைவெறி, காமவெறி பிடித்த போலீசு மிருகங்கள் தற்காலிக வேலை நீக்கம் மட்டுமே செய்யப்பட்டனர்.

சில மாதங்களுக்கு முன்பு பாண்டியம்மாள் வழக்கிலேயே தமிழக போலீசின் முகத்திரை நன்கு கிழிந்தது. பாண்டியம்மாள் என்ற பெண் காணாமல் போய் தேடிக் கொண்டிருந்த போலீசு யாரோ ஒரு பெண் முகம் சிதைந்து செத்துக் கிடந்ததை பாண்டியம்மாள்தான் என முடிவு செய்து அவரது கணவரை கைது செய்தது. அவரை சித்திரவதை செய்து பொய் வாக்குமூலம் வாங்கி பொய் சாட்சிகளும் தயாரித்து குற்றவாளியாக்கி தண்டனை வாங்கிக் கொடுக்க எத்தனித்தது. ஆனால் வழக்கு நடந்து கொண்டிருந்த பொழுது பாண்டியம்மாளே உயிருடன் வந்து தனது கணவரை நிரபராதி என நிரூபித்து மீட்டுச் சென்றார்.

**கொட்டடிக் கொலை, கற்பழிப்புக் குப் பதிலடி. அண்ணாமலை நகர் காவல் நிலையம் குண்டு வைத்து தகர்ப்பு.**



இவ்வழக்கில் போலீசு பொய் வாக்குமூலமும், பொய் சாட்சிகளும் தயாரித்தது நிரூபணமாகியதைத் தொடர்ந்து போலீசின் நடவடிக்கை, அதிகார வரம்பு, சட்ட விதிமுறைகள், தண்டனைகள் முதலியவை மிகுந்த சர்ச்சைக்குள்ளானது. பத்திரிகைகள், அரசியல்வாதிகள், பல்வேறு அமைப்பினர் அனைவரும் அவரவர் கண்ணோட்டத்தில் அலசி ஆய்வுகள் நடத்தி அறிக்கை வெளியிட்டார்கள். தற்போது அண்ணாமலை நகர் போலீசு நிலைய சம்பவத்திற்குப் பின்னும் இதே சர்ச்சைகள் மேலெழுந்துள்ளன.

1984-ல் திருநெல்வேலி - நாங்குநேரியில் சுப்புலட்சுமி என்ற பெண்ணை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மங்களதன்ராஜ் என்பவன் பலாத்காரம் செய்த வழக்கிலும், 1988-ல் தர்மபுரி - தளியில் கல்பனா சுமதி என்ற ஆசிரியை போலீசு கும்பலால் கற்பழிக்கப்பட்ட வழக்கிலும் இதுவரை நியாயம் கிடைக்கவில்லை. குற்றமிழைக்கும் போலீசை தற்காலிக வேலை நீக்கம், 'இட மாற்றம்' என்ற முறையிலேயே 'தண்டிக்கிறார்கள்'. நீதி விசாரணை என்பதும் காலம் கடத்தும் - கண்துடைப்பு வேலையே. போலீசு தப்பித்துக் கொள்வதுதான் நடக்கிறது. — என்று எதிர்க் கட்சியினரும் பெண்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளும் கூறுவது உண்மைதான். ஆனால் இதற்கு அவர்கள் கூறும் தீர்வு சீர்திருத்த அடிப்படையிலானதே! பிரச்சினைக்குரிய நிரந்தர தீர்வு அல்ல.

போலீசுக்கு தண்டனைகளை விரைவாக்கவும் கடுமையாக்கவும் சொல்கிறார்கள். குற்றமிழைத்த போலீசை உடனே கைது செய்து குற்ற வழக்குப் போட்டு தண்டிக்க கோருகிறார்கள். போலீசை விசாரிப்பதும் தண்டனை வழங்குவதையும் மக்கள் முன்னிலையில் செய்ய வேண்டும்; அப்பாவிகள் - நிரபராதிகள் தண்டிக்கப் படாமல் இருக்க உள்ளூர் தலைவர்களும் சமூக நல அமைப்புகளும் முக்கிய சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் ஒப்புதலுக்குப் பின்னே எவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்

www.padippakam.com

டும் — இவை எதிர்த் தரப்பினரது கோரிக்கைகள்!

''போலீசு இவ்வளவு கடுமையாக நடக்கும் பொழுதே குற்றங்கள் குறையவில்லை; திருடனை அடிக்காமல் உதைக்காமல் பூவால் தடவி விசாரித்தால் குற்றத்தை ஒப்புக் கொள்வானா? அல்லது தானாக வந்து திருடியவன் குற்றத்தை ஒப்புக் கொள்வானா? இருக்கும் சட்ட விதிமுறைகள்படி 'கண்ணியமாக'வெல்லாம் விசாரித்தால் ஒரு 'பிக்பாக்கெட்' கேஸை கூட போலீசால் நிருபிக்க முடியாது. விசாரணையில் சில சமயம் அசம்பாவிதம் நிகழ்வது இயற்கையே. சில போலீசாரும் கட்டுப்பாடில்லாமல் தவறிழைத்து விடுகிறார்கள் என்பதும் உண்மையே. அதற்காக ஒட்டுமொத்த போலீசையே குற்றவாளியாக்குவதும் அவர்களுக்கு கடுந்தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதும் உண்மையில் குற்றவாளிகளுக்கு - சமூக விரோதிகளுக்கு பலம் சேர்க்கும். மனோரீதியாக போலீசு மீதான பயம் குறையும். குற்றவாளிகள் ஊக்கம் பெற்று சமூகத்தில் குற்றங்கள் பெருகவே செய்யும் — இவை போலீசு மற்றும் ஆளுங்கும்பலின் வாதம்.

பாண்டியம்மாள் கொலைவழக்கு பிரச்சினையின் போது பாசிச 'சோ' பகிரங்கமாகவே போலீசுக்கு மேற்கண்டவாறு வக்காலத்து வாங்கினார். இன்னும் ஒருபடி மேலே போய், ''இவர்கள் (எதிர் தரப்பாளர்கள்) போலீசின் அத்துமீறல், போலீசுக்கு கடுந் தண்டனை என ஓயாது கூச்சல் போடுவதால் போலீசு அஞ்சி அஞ்சி செயல்பட்டு குற்றவாளிகளைத் தப்பிக்க விட்டுவிடுகிறார்கள்'' என்று வக்காலத்து வாங்கினார்கள் பாசிச ஊதுகுழல்கள்!

போலீசு துறை என்பது அவசியம்தான்; அது இல்லாவிட்டால் சமூக விரோதிகள் பெருகி மக்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்பதில் இருவருக்கும் கருத்து மாறுபாடு இல்லை. போலீசு துறையில் குற்றமிழைக்கப்படும் தனிநபர்களுக்குரிய தண்டனையில் - அவற்றை நடைமுறைப்படுத்தும் அளவில்தான் மாறுபடுகிறார்கள். ஆளுங்கும்பல் மற்றும் அவர்களது ஊது குழல்கள் போலீசு துறையின் மீது மக்களை நம்பிக்கை கொள்ள வைக்க நேர்மறையில் முயற்சிக்கிறார்கள்; எதிர்த் தரப்பினரோ எதிர்மறையில் அதையே செய்கிறார்கள், அவ்வளவுதான்!

ஒன்று திரட்டப்பட்டு, பயிற்சியளித்த, முறைபடுத்தப்பட்ட சட்டபூர்வ கிரிமினல் கும்பல்தான் போலீசு. சமூக அவலங்களுக்கும் சுரண்டல் கொடுமைகளுக்கும் காரணமான கேடுகெட்ட ஆளுங்கும்பலை பாதுகாக்கும் அரசு எந்திரத்தின் ஒரு பகுதிதான் போலீசு. மக்களை மந்தைகளாக, கிள்ளுக்கீரையாக, குற்றவாளிகளாக ஏன் சமூக விரோதிகளாக, கிரிமினல்களாக சித்தரித்து அவர்களை அடக்கி ஒடுக்குவதற்குத்தான் போலீசு துறை — என்றே போலீசுக்கு போதிக்கப்படுகிறது. போலீசுக்கு கொடுக்கப்படும் எல்லா வகை பயிற்சிகளும் இத்தகையதே! உழைப்பாளி வீட்டுப் பிள்ளைகள், போலீசில் சேர்ந்ததும் அவனை போலீசின் பயிற்சிகளும் போதனைகளும் மிருகமாக்கி மக்களுக்கு எதிராக நிறுத்திவிடுகிறது. இதுவன்றி பதவி வெறி, பணவெறி, அதிகாரவெறி பிடித்தவர்களும் கிரிமினல்களும் சமூக விரோதிகளும் போலீசு வேலைக்கும், பதவிக்கும் வருகிறார்கள்.

தலையிலே தொப்பி வைக்கப்பட்டதுமே அதிகார கிரீடம் சூட்டப்பட்டது போல் போலீசுக்கு தலைக்கனம் பிடித்துவிடுகிறது. 'கான்ஸ்டபிள்' முதல் உயர் மட்ட அதிகாரிகள் வரை அதிகாரத் திமிர் ஏறி பதவிக்கு ஏற்ப ஆட்டம் போடுகிறார்கள். அதிகாரத் திமிர் பிடித்த அவர்களது மூளையில் ஏழைகள் என்பவர்கள் கேள்வி கேட்பாரற்ற அனாதை நாய்கள் என்றுதான் ஒட்டிக் கொண்டிருக்கும்.

'அனாதை நாய்கள்' போலீசு சொல்லும் குற்றத்தை ஒத்துக் கொண்டால் பிழைத்து கொள்வார்கள். இல்லையெனில்.



ரௌடிகளை பிடிக்கவந்து நாடகமாடும் கிரிமினல் தேவாரத்தை வழிமறிக்கும் சென்னை காசிமேடு மக்கள்.

ஆண்களாக இருந்தால் சித்திரவதை செய்து கொல்லப்படுவர்; பெண்களாக இருந்தால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவர். இதுதான் அவர்கள் அகராதியில் சட்டம் - ஒழுங்கு!

• • •

ஆட்சிக்கு வந்த பின் சில மாதங்களிலேயே ''தமிழகத்தில் பரவியிருந்த ஆயுதக் கலாச்சாரத்தை ஒழித்து அமைதி பூங்காவாக்கிவிட்டோம்'', ''சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்திவிட்டோம்'' என்று கூச்சல் போட்டார் ஜெயலலிதா! ஜெயலலிதா கூறும் சட்டம் - ஒழுங்கின் உண்மையான அர்த்தம் வேறு.

பாண்டியம்மாள் வழக்கு, பத்மினி கற்பழிப்பு விவகாரம் மட்டுமல்ல கடந்த ஓராண்டில் தமிழக போலீசு கொட்டடிக் கொலைகள், பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள் ஏராளம். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சில:

● சென்னை - பேசின் பிரிட்ஜ் பகுதி ரௌடி பிரகாசு செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ள மறுத்ததால் அடித்தே கொல்லப்பட்டான். பிரகாசின் பிணத்தை பாலத்துக்கடியில் போட்டு தற்கொலை செய்து கொண்டதாக போலீசு கதைகட்டியது. ஆனால் உண்மையறிந்த பகுதி மக்கள் போலீசு கும்பலை தாக்கியும், போலீசு நிலையத்திலிருந்த ஆவணங்கள் மற்றும் பொருட்களை தீவைத்தும் தம் கோபத்தை வெளிக் காட்டினர். அப்பொழுது போலீசு கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி மேலும் இரண்டு உயிர்களை கொன்றுதான் தம்மை பாதுகாத்துக் கொண்டது. ஒரு வாரம் அந்த வட்டாரமே ஊரடங்கு உத்திரவு போடப்பட்ட நிலையில் வைக்கப்பட்டது.

● பழைய இரும்பு வியாபாரியான ராவுத்தரை, சைக்கிள் திருட்டு வழக்கில் சந்தேகப்பட்டு இழுத்துச் சென்ற குமரி மாவட்டம், தக்கலை போலீசு சித்திரவதை செய்தே கொன்றது. அவர் 'கைலி'யில் தூக்கு மாட்டிக் கொண்டதாக ஜோடித்தது. மருத்துவர் ஒருவரை நிர்பந்தித்து தற்கொலை சான்றிதழ் கேட்டபோதே அம்மருத்துவர் மூலம் செய்தி வெளியுலகுக்கு வந்தது. ஆனாலும் வேறு மருத்துவரிடம் போலிச் சான்றிதழ் பெற்று பிணத்தையும் தாமே அவசர அவசரமாக புதைத்து விட்டது.

● ஒட்டன் சத்திரத்தில் ஒரு நிலச்சுவான்தார் வீட்டு நகை களவு போனது தொடர்பாக தோட்டக்காரர் முத்துச்சாமியை சந்தேகப்பட்டு அடித்து சித்திரவதை செய்தது போலீசு. முத்துச்சாமியின் மனைவி செல்லம்மாள், மகள் பழனியம்மாள் மற்றும் அவரது தந்தையையும் கொண்டு வந்து நிர்வாணப்படுத்தி நிறுத்தி சித்திரவதை செய்து குற்றத்தை ஒப்புக் கொள்ளச் சொன்னது. செய்யாத குற்றத்தை ஒப்புக் கொள்ள மாட்டேன் என முத்துச்சாமி உறுதியாக மறுத்ததால் பலத்த தாக்குதலுக்குப்பின் மரணமடைந்தார். முத்துச்சாமி வயிற்று வலியால் இறந்து போனதாக பதிவு செய்து வழக்கை மூடிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com

போலீசு! இது நடந்தது கடந்த ஜனவரி மாதம்.

● மேட்டூர் அணை மதுவிலக்குப் பிரிவில் இருக்கும் சப் - இன்ஸ்பெக்டர் சுருளிவேல் ஒரு காமவெறியன். ஊர் ஊருக்கு வைப்பாட்டி வைத்திருக்கும் இவன், தான் குடியிருந்த வீட்டுச் சொந்தக்காரர் மனைவியிடமும் தகாத உறவு வைத்திருந்தான். வீட்டுச் சொந்தக்காரர் பெருமாள் (பள்ளி ஆசிரியர்) இதைக் கண்டித்தார். வீட்டை காலி பண்ணச் சொல்லி நிர்பந்தித்தார். பொய் வழக்கு போடுவேன், வேலையையே காலி பண்ணி விடுவேன் என மிரட்டியும் மசியாததால் வீட்டில் பெருமாள் தனியாக இருந்த நேரம் பார்த்து தாக்கி கொன்று போட்டான், சுருளிவேல். பெருமாள் தற்கொலை செய்து கொண்டதுபோல ஏற்பாடு செய்யப்பட்டு கிடந்தார்.

● செங்கம் வட்டம் சாத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த சேட்டு என்பவர் தனது அண்ணன் மகள் மீது சைக்கிளை ஏற்றியதோடு மட்டுமல்லாமல் அண்ணனையும் நடு ரோட்டில் அடித்துப் போட்ட ரிசர்வ் போலீசுகாரர் பூமிநாதனை தட்டிக் கேட்டார். இதனால் சேட்டு போலீசு நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டார். வாயிலும் மூக்கிலும் ரத்தம் ஒழுக எந்த உறுப்பும் செயல்படாத நிலையில் குப்பையாய் தூக்கியெறியப்பட்ட சேட்டு மருத்துவமனையில் உயிர் விட்டார்.

இப்படி போலீசின் கொட்டடிக் கொலையில் தமிழகம் இந்தியாவில் நான்காவது இடத்தில் உள்ளது. விரைவில் முதலிடத்தை பிடித்து விடுமளவிற்கு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருகிறது.

மேலும் கிரிமினல்கள் - சமூக விரோதிகளுக்கு பாதுகாப்பளிப்பதும், ஊக்குவித்து வளர்ப்பதும் போலீசு துறையே! சமூக விரோதிகளுடன் போலீசு கூடிக்குலாவுவது ஊரறிந்த ரகசியம்தான். காலங்காலமாகத் தொடர்வதும்தான். ஆனால் பாசிச - பார்ப்பன ஜெயா ஆட்சிக்கு வந்ததற்குப் பின் அதனளவு அதிகரித்துள்ளது. போலீசு சமூக விரோத செயல்கள் பெருகியுள்ளன. போலீசு மற்றும் ஆட்சியாளர்கள் உதவியோடு சமூக விரோதிகள், மாஃபியா கும்பல்களாக வளர்ந்துள்ளார்கள். போலீசுக்கே தலைவலியாக - சிம்ம சொப்பனமாக பல மர்ம கொள்ளையர்களும், பல 'ஆட்டோ சங்கர்களும், பல சந்தன கட்டை வீரப்பன்களும் உருவாகிவிட்டார்கள். ஜெயாவின் பாதுகாப்புக்கே போலீசு குவிக்கப்படுவதால் நகரங்களில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வழிப்பறி, திருட்டுகளும் பெருகி விட்டது என்பதும் பகுதியளவு உண்மையே!

சென்னை புறநகர் பகுதியை கலக்கிய முக மூடிக் கொள்ளையன் சிவய்யா கும்பலை கைது செய்து கைப்பற்றிய 200 சவரண் நகைகள் போலீசாரால் ஏப்பம் விடப்பட்டன. சிவய்யாவையும் 'லாக் - அப்'பிலிருந்து வழியனுப்பி வைத்துவிட்டு தப்பிவிட்டான் என கதையளந்தது.

## "மக்களிடமிருந்து தனிமைப்பட்டுள்ள ஜெயா கும்பலுக்கு போலீசும் ரௌடியிசமும்தான் பாதுகாப்பு அரண்களாக உள்ளன"

நெல்லை மாவட்டம் களகாடு மலையில் கிடைத்த வைரம் - வைடூரியங்களை அரசுக்கு தகவல் தெரிவிக்காமலேயே வனத்துறை அதிகாரி சின்னத்துரை உள்ளூர் கடத்தல் கும்பலுடன் கடத்திவந்த செய்தி அண்மையில் வெளிவந்தது. ஆனாலும் சின்னத்துரை பதவி இறக்கம் செய்யப்பட்டு புதிய அதிகாரிகளுடன் அதே வகை கடத்தல் தொடர்கிறது. சென்னை துணை ஆணையாளர் இளங்கோவனின் ஆசியில் பட்டுக்கோட்டை, தஞ்சை, திட்டக்குடி, விருத்தாசலம் பகுதிகளின் பிரபல கொள்ளையன் ராஜாவும் கேடி பரமசிவமும் தைரியமாக தமது கைவரிசையை காட்டுகிறார்கள். உண்டியல் உடைப்பு, சிலை கடத்தல், தங்கம் கடத்தல் இவர்களது தொழில்! மேலும் சென்னை - கிண்டி சரகத்தின் உதவி போலீசு கமிசனர் ரெத்தின வேலு, விபச்சாரத் தரகி ஷோபா சந்தானத்துடன் சேர்ந்து நீலப்படம் எடுப்பதும்; ஐ.ஜி.தேவாரம் உதவியுடன் விபச்சாரத் தரகி தங்கம் என்கிற மேரிக்குட்டி சென்னையில் உலாவருவதும் அண்மையில் சந்திக்கு வந்தன.

### போராட்டத்தைத் தூண்டிய போஸ்டர் தோழர்கள் கைது

ஜூன் 16-ல் நடந்த நாடு தழுவிய வேலை நிறுத்தத்தை வெற்றி பெறச் செய்யக் கோரியும், நாட்டை அடகு வைக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையையும் அமெரிக்க மேலாதிக்கத்தையும் முறியடிக்க மக்களை அறைகூவியழைத்தும் பட்டுக்கோட்டையில் வி.வி.மு. தோழர்கள் சுவரொட்டி ஒட்டினர். அப்பொழுது தோழர்கள் ஏ.வி. அண்ணாதுரை, ராஜன் ஆகியோரை கைது செய்த போலீசு, 151, 7(1)ஏ ஆகிய பிரிவுகள் கீழ் வழக்கு போட்டு சிறையிலடைத்தது.

திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்ட இத்தோழர்களை 'கியூ' பிரிவு மற்றும் பல உளவுத் துறையை சேர்ந்த போலீசார் விசாரித்ததோடு தோழர்களை நிர்பந்தித்து 'படம்' பிடித்தும் கொண்டது. ஆறு நாட்களுக்குப் பிறகு தோழர்கள் ஜாமீனில் வெளிவந்துள்ளனர்.

மற்றவர்கள் எல்லாம் சுவரொட்டி ஒட்டும் போது எங்களை மட்டும் ஏன் கைது செய்கிறீர்கள் என்று கேட்ட தோழர்களிடம், வி.வி.மு.-வின் சுவரொட்டிதான் மக்களை போராட்டத்திற்கு தூண்டும் என்று கூறி கைது செய்துள்ளது போலீசு.

கன்யாகுமரி குலசேகரப்பட்டினத்தில் மரத்தை கடத்தும் 'மின்னல்' தங்கமணி ஒரு குட்டி வீரப்பனாகவே திகழ்கின்றான். உள்ளூர் போலீசு மற்றும் பல போலீசு அதிகாரிகள், அரியல்வாதிகள் செல்வாக்குடன் பல முறை கைதாகியும் தப்பித்துவிட்டான். இவனை ஒடுக்குவதற்காக வரும் காட்டிலாக அதிகாரிகள்தான் குட்டுப்பட்டும் வெட்டுப்பட்டும் மாற்றலாகிப் போகிறார்கள்.

இதேபோல் கேரள - தமிழக எல்லையில் கொடைக்கானலைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் கஞ்சா பயிரிட்டு கடத்தும் தொழிலை அமோகமாக நடத்தி வருகிறான் வீர.ராமதாசு. இந்திய மாஃபியா கும்பலுடனும் சர்வதேச கடத்தல் மன்னர்களுடனும் வலைப்பின்னலை கொண்ட முக்கிய புள்ளி இவன். தமிழக, கேரள போலீசு மாறிமாறி படையெடுத்தும் இவனது கைத்தடிகளைக் கூட பிடிக்கமுடியவில்லை. வீரப்பனைப் போலவே இவனது அங்க அடையாளங்களும் யாருக்கும் தெரியாது. அடுத்து கோவை - சாராய மன்னன் ஈசுவரமூர்த்தியையும் போலீசால் கட்டுப்படுத்த முடியவில்லை. அண்மையில் கைதான இவன் பிணையில் வெளிவந்ததோடு 'ஸ்பிரிட்' கடத்தலை புதிய முன்னேற்றத்துடன் நடத்துகிறான். கேரளாவிற்கு 'ஸ்பிரிட்'டை லாரியில் கடத்துவதற்காக கேரளா - சித்தூர் தாலுகாவில் பல விவசாய பண்ணைகளையும் வயல் காடுகளையும் வாங்கி சொந்தமாக சாலையே போட்டுள்ளான்.

கோவில் நிதி வாரியமெல்லாம் அமைத்து பார்ப்பன கும்பலுக்கு சலுகைகளை வாரிவழங்கும் ஜெயலலிதாவால் கோவில் நகை கொள்ளையையும், சிலையுடைப்புகளையும் தடுக்க முடியவில்லை. இக்கொள்ளைகளில் அ.தி.மு.க. மற்றும் காங்கிரசு பிரமுகர் சம்பந்தப்பட்டுள்ள செய்தியும் வெளிவந்துள்ளது.

கோவை - கலெக்டர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே இரு பெண்கள் கொலை செய்யப்பட்டார்கள். சென்னை - ஸ்டான்லி மருத்துவமனையிலும் ஓட ஓட விரட்டி பலர் கொல்லப்பட்டனர். மதுரையில் நீதி மன்றத்திற்கு போலீசால் அழைத்து வரப்பட்ட கைதியே நடுரோட்டில் வெட்டப்பட்டார். மதுரை சென்ட்ரல் பஸ் நிலையத்தில் ஆட்டம் போடும் ரௌடி கோஷ்டிகள் இதுவரை மாயக்காள், சிங்காரம், அன்புப் பாண்டி, சேது என மாறிமாறி பழிவாங்கிக் கொண்டதோடு மதுரை சட்டம் - ஒழுங்கு துணை கமிஷனர் சோலை முத்தையா உட்பட பல போலீசு அதிகாரிகள் துணையோடு கொலைவெறிபிடித்து அலைகின்றன. சென்னையில் 'வேந்தா' வாசு, 'பாக்சர்' வடிவேலு, மாலைக்கண் செல்வம் ஆகிய மாஃபியாக்கள் தலைமையில் செயல்படும் கும்பல்கள் வட சென்னையையே தம்கைக்குள் வைத்துக் கொண்டு ஆட்டம் போடுகின்றன. அ.தி.மு.க. அமைச்சர்கள் ஜெயக்குமார், மதுசூதனன், எஸ்.டி.எஸ். ஆகியோர் இவற்றுக்கு பக்கபலமாக இருக்கிறார்கள்.

"நீங்க நல்லா இருக்கணும்" என்ற

படிப்பகம்

www.padippakam.com

ஜெயாவின் மது ஒழிப்பு பிரச்சாரப் படத்தை பார்த்து நீங்கள் யாராவது குடிப்பழக்கத்தை விட்டால், ''ஏன் குடிப்பதை விட்டாய்?'' என போலீசு உங்களை உதைக்கும்! நகைச் சுவை அல்ல! நடந்த உண்மை! செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம், பொன்னேரி அருகிலுள்ள பெரும்பேடு, காணியம்பாக்கம், சின்னக்காவனம் ஆகிய கிராம மக்கள் ஊரில் சாராயம் விற்க எதிர்ப்பு தெரிவித்து ஊர்க் கட்டுப்பாடும் போட்டார்கள். இதனால் மாமூல் பாதித்த ஆத்திரத்தில் கிராமத்திற்குள் புகுந்து கண்மூடித்தனமாக தாக்கிய போலீசு பல இளைஞர்களையும் ஊர்த் தலைவர்களையும் கைது செய்து கொண்டு போய் சித்திரவதை செய்தது. ஊர்மக்கள் போலீசு நிலையத்தை முற்றுகையிட்ட பின்னரே விடுவித்தனர். மேலும் பழனியருகே மேல்கரைப்பட்டி கிராமத்தில் சாராயம் காய்ச்ச மறுத்த சில குறவர் குடும்பத்தினரின் வீடுகளும் போலீசால் தாக்கப்பட்டன.

இதுதவிர அண்மையில் கோட்டைக்கு ஜெயலலிதாவை சந்தித்து மனு கொடுப்பதற்காக வந்த பால் வியாபாரிகள் அ.தி.மு.க. காலிகளால் தாக்கப்பட்ட கொடுமையும் நடந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஜெயலலிதா ஆட்சியில் அப்பாவிகள் மீதான போலீசின் தாக்குதல்கள் அதிகரித்ததற்கும்; போலீசு, சமூக விரோதிகளின் வளர்ச்சிக்கும் காரணம் இல்லாமல் இல்லை. போலீசையும், ரௌடியிசத்தையும் தமது சுயநலத்திற்காக பாசிச ஜெயலலிதா ஊக்குவித்ததே காரணம்! போலீசு நிலையத்திலேயே அ.தி.மு.க ரௌடிகளும் பிரமுகர்களும் தமது எதிரிகளை சுட்டுக் கொல்லுமளவிற்கும், போலீசு உயர் அதிகாரி தேவாரம் அமைச்சரைப் போல் அரசு நடவடிக்கை தொடர்பாக அறிக்கை வெளியிடுமளவிற்கும் போலீசு துறையோடு ஒன்றற கலந்து ஆட்சி செய்த பெருமை ஜெயலலிதாவையே சாரும்.

அண்ணாமலை நகர் போலீசு நிலைய கொலை - கற்பழிப்பு செய்தியின் ஈரம் உலர்வதற்குள், 70% குற்றங்களை கண்டுபிடித்து எந்த போலீசும் செய்யாத சாதனையை தமிழகப் போலீசு செய்துள்ளதாக தமது ஓராண்டு மலரில் புளுகியிருக்கிறார் ஜெயலலிதா. கடந்த ஓராண்டு காலமாக இவ்வாறே போலீசு துறையை பலவாறு ஊக்குவித்தார். மத்திய அரசிடமிருந்து 9 கோடி ரூபாயை தமிழக போலீசிற்கு பெற்று கொடுத்தார். போலீசுக்கு சம்பளம், ஊக்கப்படிகளை உயர்த்தினார். போலீசுக்கு சிறப்பு பயிற்சி, கூடுதல் பிரிவு, நவீன வசதி போன்றவற்றிற்கே முக்கிய கவனம் கொடுத்து உதவினார். விளையாட்டு போட்டியில் வெற்றியடைந்த தமிழக போலீசாருக்கும், புலிகளை மற்றும் ''ரௌடிகளை'' மடக்கி பிடித்த போலீசாருக்கும் தமது சொந்த நிதியிலிருந்து பரிசளித்தும் நிவாரணம் கொடுத்தும் ஊக்குவித்தார்.

போலீசும் சமூக விரோத குற்றங்கள் தவிர நன்றி விசுவாசத்தோடு வாலாட்டி ஜெயலலிதாவிற்கு ஊழியம் செய்வதே தமது பணி என்று செயல்படுகிறது. ஜெயலலிதா இடும் கட்டளையை சிரமேற்கொண்டு, மாற்று கட்சியினரையும், அமைப்பினரையும், பத்திரிகைகளையும் பாய்ந்து குதறுகிறது. புலிகளை அடக்கி ஒடுக்கி சாதனை படைத்து ஜெயாவை மகிழ்வித்தும், புலி பீதியூட்டியே ஜெயாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து மக்களை தொல்லைக்குட்படுத்தியும் கொஞ்சமும் பிசகாமல் சேவகம் புரிகிறது. ஜெயலலிதாவின் கட் - அவுட்டிற்குக் கூட நாள் கணக்கில் காவல் இருக்கிறது போலீசு!

தனக்கு பாதுகாப்பு கிடைத்த வரைக்கும் சரி, தனக்கு வாலாட்டும் வரைக்கும் சரி; போலீசு மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்காவிட்டால் எனக்கென்ன அல்லது மக்கள் மீது பாய்ந்து குதறினால் எனக்கென்ன? - என்ற முறையில்தான் ஜெயலலிதாவின் ஆட்சி நடக்கிறது. போலீசின் கொட்டடிக் கொலைகள், கற்பழிப்புகள், சித்திரவதைகள், சமூக விரோத செயல்களை ஜெயலலிதா துளியும் கண்டு கொள்வதில்லை. இதேபோல் தன் கட்சி எம்.எல்.ஏக்கள், அமைச்சர்கள் அப்பாவிகள் மீது தொடுக்கும் தாக்குதல்கள், ரௌடித்தனங்கள், அதிகாரிகள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக சர்ச்சை கிளம்பியும் ஜெயலலிதா கண்டு கொள்வதில்லை. ஏனெனில் எதிர்த் தரப்பினரை தாக்கவும் தமது அடிவருடிகளே துள்ளும்போது அடக்கி வைக்கவும், ஜெயலலிதாவிற்கு கட்சிக்காரர்களின் ரௌடித்தனமும், சமூக விரோதிகளுடனான தொடர்பும்தான் கைகொடுக்கிறது. மக்களிடமிருந்து தனிமைப்பட்டுள்ள ஜெயலலிதாவின் ஆட்சிக்கு இன்று போலீசும், ரௌடித்தனமும்தான் பாதுகாப்பு அரண்களாக உள்ளன.

ஆக புலிகளை அடக்கி ஒடுக்கி - தடை செய்ததும், புலி பீதியூட்டி ஜெயாவின் பாதுகாப்பை பலப்படுத்தியது மட்டுமே ஜெயா கும்பலின் அகராதியில் சட்டம் ஒழுங்காகும்! புலிகளை ஒடுக்க இக்கும்பல் எந்த அளவிற்கு கவனம் செலுத்தியதோ அதைவிட பன்மடங்கு தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு மோசமாகி அதன் கோரப் பற்களுக்கிடையில் தமிழக மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

● ராசு

# பொதுக்கூட்டம் நடத்தத் தடை கடலூர் போலீசின் அட்டூழியம்

ஏழு மாத காலமாக கொடிய 'தடா' சட்டத்தின்கீழ் சிறையிடப்பட்ட செந்தில்குமார், ரமேஷ், பாலு, கிருஷ்ணா, அருள்மணி ஆகிய ஐந்து தோழர்களும் கடந்த 15.5.'92 அன்று பிணையில் விடுவிக்கப்பட்டதை ஒட்டி 25.4.'92 அன்று நெய்வேலியிலும் 26.5.'92 அன்று கடலூரிலும் பொதுக் கூட்டம் நடத்த தொழிலாளர் பிரச்சாரக் குழு மற்றும் மக்கள் கலை இலக்கியக் கழகத் தோழர்களால் திட்டமிடப்பட்டது. பொதுக் கூட்டத்திற்காக இரு பகுதிகளிலும் முன்கூட்டியே காவல் துறையினரிடம் விண்ணப்பித்தும்கூட, கடைசி நேரத்தில் சட்டம் - ஒழுங்கு நிலைமையைக் காரணம் காட்டி போலீசார் அனுமதி மறுத்தனர். அதையும் கூட எழுத்து பூர்வமாக தரமறுத்தனர்.

பொதுக்கூட்ட அனுமதி மறுப்பைக் கண்டித்தும், கும்பகோணம் குண்டுவெடிப்பைக் காரணம் காட்டி தஞ்சை ம.க.இ.க. தோழர்களை விசாரணைக்கு இழுத்துச் சென்றதைக் கண்டித்தும் கடலூரில் சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. மே.30-ந் தேதியன்று தோழர்கள் அருள்மணியும் செந்தில்குமாரும் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்தபோது ஒரு போலீசுக்காரன் பின்னாலேயே அவற்றைக் கிழித்துக் கொண்டு வந்தான். ஏன் கிழிக்கிறாய்? என்று கேட்டதற்கு, ஐயா கூப்பிடுறார், வாங்க என்று தோழர்களை போலீசு நிலையத்துக்கு கூட்டிச் சென்றான். அங்கு சப்-இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் ''ஏண்டா போஸ்டர் ஒட்டுறீங்க? யாரைக் கேட்டு ஒட்டுறீங்க! இவனுங்கள லாக்-அப்பிலே தள்ளுங்கடா!'' என்று உத்திரவிட்டான்.


மே.30,31 ஆகிய இரு நாட்களும் சட்டவிரோதமாக கொட்டடியில் தோழர்கள் அடைத்து வைக்கப்பட்டனர். தோழர்கள் கோர்ட்டுக்கு கொண்டுவரப்பட்டதும், தாங்கள் சட்ட விரோதமாக அடைத்துவைக்கப்பட்டதை நீதிபதியிடம் முறையிட்டனர். அவரோ எதுவும் பேசாதீங்க என்று திமிராக உத்திரவிட்டார். பின்னர் முதல் தகவல் அறிக்கையைப் (FIR) படிக்க அனுமதி தரவேண்டும் என்று தோழர்கள் கோரிய போது, ''இவனுங்கள முதல்ல வெளியே இழுத்துக்கிட்டுப் போங்கய்யா'' என்று வெறிநாயாக உறுமினார்.

தோழர்கள் இருவரும் தெருவில் ஆபாசமாகப் பேசி கலாட்டா செய்ததாக 75-வது குற்றவியல் சட்டப்படி பொய்வழக்கு சோடிக்கப்பட்டுள்ளது. தோழர்கள் பிணையில் வெளிவந்த பிறகு, ''தடாவுல உள்ளே போய்விட்டு வந்தோம்னு துளிர்விட்டு அலையாதீங்க. போலீசைப் பத்தி ஏதாவது பேசினா, எழுதுனா திரும்பவும் தடாவிலே போட்டு விடுவோம்'' என்று இன்ஸ்பெக்டர் பாண்டியன் எச்சரித்துள்ளான்.

பாசிச ஜெயா கும்பலின் ஆட்சியில் அரசை விமர்சித்தால் அது சட்டம் - ஒழுங்கைச் சீர்குலைக்கும் நடவடிக்கை. ஜனநாயகம் என்றால் அது போலீசாருக்குத்தான் என்பதை இச்சம்பவம் மீண்டும் நிரூபித்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

புத்தர் அவதரித்த நாளாகக் கருதப்படும் புத்த பூர்ணிமா தினத்தன்று பீகாரிலுள்ள புத்தகயா - மகாபூதி வழிபாட்டுத் தலத்துக்கு வந்த தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் திடீரென ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். இப்புத்தர் கோயிலிலுள்ள சிவலிங்கத்தையும், பஞ்ச பாண்டவர் உருவச் சிலைகளையும் அகற்ற வேண்டும்; இந்த வழிபாட்டுத் தலத்தை புத்த மதத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர். இந்த வழிபாட்டுத் தலத்தின் பொறுப்பிலுள்ள இந்துப் பண்டாரங்களோ, கடவுள் கிருஷ்ணனின் 11-வது அவதாரம்தான் புத்தர் என்றும், புத்த மதம் இந்து மதத்தின் கிளை மதம்தான் என்றும் வாதிடுகின்றனர். பாபர் மசூதிக்குள் திருட்டுத்தனமாக ராமன் சிலையை வைத்து அது ராமன் பிறந்த இடம் என்று கலவரத்தில் இறங்கும் இந்து வெறியர்கள், இதே போல புத்தர் கோயிலையும் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து வரும் புத்த மதத்தைச் சேர்ந்த தலித் சிறுத்தை இயக்கத்தினர் இம்மாத இறுதிக்குள் இந்து வெறியர்களின் பிடியிலிருந்து இந்த வழிபாட்டுத் தலத்தை மீட்கப் போவதாக அறிவித்துள்ளனர். இந்து வெறியர்களின் சூழ்ச்சி - ஆதிக்கத்துக்கு எதிராக தலித்துகள் நடத்துவது பொருத்தமான போராட்டம்தான்.

குஜராத்தின் முதல்வர் சிமன்பாய் பட்டேல் தலைமையில் ஜனதா தள(ஜி) கட்சி கூண்டோடு கட்சிமாறி காங்கிரசில் சேர்ந்துவிட்டது. அதற்குப் பரிசாக கோடிக் கணக்கில் பணமும், காங்கிரசு சட்டமன்றத் தலைவர் பதவியும் முதல்வர் சிமன்பாய் பட்டேல் பெற்றுள்ளார். பதவிக்காக எதையும் செய்யத் தயங்காத பட்டேல் கட்சித் தாவும் கலையில் கொட்டைபோட்ட பழம் பெருச்சாளி. 1975-ல் தீவிரமடைந்த மாணவர் போராட்டத்தால் முதல்வர் பதவியை இழந்து காங்கிரசிலிருந்து விலகிய அவர், விவசாயத் தொழிலாளர் கட்சியைத் (KMLP) தொடங்கி கட்சி மாறிகளுடன் சேர்ந்து ஆட்சியைப் பிடித்தார். அது கவிழ்க்கப்பட்டதும் சரண்சிங்கின் லோக்தளக் கட்சியில் சேர்ந்தார். அதன் பிறகு வி.பி.சிங்கின் ஜனதா தளத்திற்கும் பின்னர் சந்திரசேகரின் சமாஜ்வாடி ஜனதா கட்சிக்கும் தாவி முதல்வர் பதவியைப் பிடித்த அவர், காங்கிரசின் ஆட்சிக் கவிழ்ப்பு அபாயத்தினால் குஜராத் ஜனதா தளம் என்ற கட்சியைத் தொடங்கி கட்சி மாறிகளுடன் சேர்ந்து பதவியில் நீடித்தார். இப்போது காங்கிரசுடன் பேரம் நடத்தி தாய்க் கட்சியில் சேர்ந்துவிட்டார். இந்த அரசியல் விபச்சாரியைத்தான் சிறந்த ராஜதந்திரி என்று முதலாளித்துவ அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.

அயோத்தி அருகிலுள்ள அக்தியார்பூர் கிராமத்தைச் சேர்ந்த 13 வயதான குசும் மிஸ்ரா எனும் சிறுமி, அதே கிராமத்தைச் சேர்ந்த 4 குண்டர்களால் கடந்த பிப்ரவரி மாத இறுதியில் கடத்திச் சென்று கறபழிக்கப்பட்டாள். அச்சிறுமியை குண்டர்கள் கடத்திச் சென்றதைப் பற்றி அவளது சகோதரர் போலீசில் புகார் செய்ததும், அக்குண்டர்கள் தமது தலைவனாகிய வினய் கத்தியாரிடம் அடைக்கலம் புகுந்தனர். அவனும் அச்சிறுமியை இரு நாட்கள் அடைத்துவைத்து அனுபவித்துவிட்டு, இந்த விவகாரத்தை மறைப்பதற்காக கே.பி.சிங் என்ற சப் இன்ஸ்பெக்டருக்கும் அவளை விருந்தாக்கினான். மூன்று மாதங்களுக்குப் பிறகு குசும் மிஸ்ராவை அவளது பெற்றோரிடம் ஒப்படைத்த போலீசார், குண்டர்களை கோர்ட்டில் சரணடைய வைத்து அற்ப தண்டனையளித்தனர். பாதிக்கப்பட்ட சிறுமி கோர்ட்டில் வழக்கு தொடர்ந்த பிறகே இந்த விவகாரம் இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது. வினய் கத்தியார் வேறு யாருமல்ல; அயோத்தியை உள்ளடக்கிய பைசாபாத் தொகுதியின் பாரதீய ஜனதா எம்.பி; பஜ்ராங்தளம் என்ற இந்து வெறி குண்டர் படைத் தளபதி! எப்படியிருக்கிறது இந்து வெறியர்களின் யோக்கியதை?

காஷ்மீரின் லடாக் பிராந்தியத்தைச் சேர்ந்த மக்கள் சுயாட்சி உரிமை கோரி போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். "காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து தரும் 370-வது சட்டப் பிரிவு எங்களுக்கு ஒரு மண்ணும் செய்யவில்லை. பனிமூடிய எல்லையில் இருப்பதைக் காட்டி இந்திய அரசு எந்த வளர்ச்சி திட்டத்தையும் நிறைவேற்றவில்லை. 1989-ல் பேச்சுவார்த்தை நடத்திய மத்திய அரசு, இன்றுவரை அதை நடைமுறைப் படுத்தவில்லை. தொடர்ந்து புறக்கணிக்கப்படும் நாங்கள் எதற்காக இந்தியாவுக்கு விசுவாசமாக நடக்க வேண்டும்? கூர்க்கா மக்களுக்கு டார்ஜிலிங் மலை மாவட்டக் கவுன்சில் உருவாக்கியதைப் போல லடாக் மக்களுக்கு சுயாட்சி உரிமை தரப்பட வேண்டும். இல்லையேல் லடாக்கில் உள்ள இந்திய ராணுவத்தைத் தாக்குமளவுக்கு எங்கள் போராட்டம் தொடரும்" என்று லடாக்கியர்கள் எச்சரித்துள்ளனர். காஷ்மீரின் தேசிய இன உரிமைப் போரை அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்கிவரும் இந்திய அரசு, இப்போது புதிதாக லடாக்கியர்களும் போராட்டத்தில் இறங்கிவிட்டதைக் கண்டு அலறுகிறது.

கடந்த ஜூன் 8-ம் தேதியன்று இரு நாடாளுமன்றத் தொகுதியிலும், 19 சட்டமன்றத் தொகுதிகளிலும் நடைபெற்ற இடைத் தேர்தல் வரலாறு காணாத வன்முறைத் தேர்தலாக நடந்து முடிந்துள்ளது. மே. வங்கத்தின் பாலிகஞ்ச் தொகுதியில் நடந்த வன்முறை காரணமாக போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வழிப் போக்கர் ஒருவர் பலியானார். பீகாரின் தானாப்பூர் தொகுதில் நடந்த தில்லுமுல்லுகள் காரணமாக 409 வாக்குச் சாவடிகளில் மறுவாக்குப் பதிவு நடந்தது. கர்நாடகாவில் குன்னிகல் தொகுதில் காங்கிரசு மந்திரி ரமேஷ், சமஜ்வாடி ஜனதா கட்சி ஊழியர் ஒருவரை சுட்டுக் கொன்றார். ஆந்திராவில் ஹிமாயத்நகர் தொகுதியில் போட்டியிட்ட பிரதமரின் நண்பரான ஜெகன்னாதராவ் வெற்றிக்காக தேர்தல் கமிஷனரே தில்லுமுல்லுகள் செய்து வாக்கு எண்ணுவதை நிறுத்தி வைத்தார். பின்னர் எதிர்கட்சிகள் போராடிய பிறகு பாரதீய ஜனதா வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஓட்டு முறை அல்ல; வேட்டு முறைதான் தீர்மானிக்கிறது என்பதை இந்த இடைத்தேர்தல் மீண்டுமொருமுறை நிரூபித்துள்ளது.

தென்னாப்பிரிக்காவில் "ஜூலு இங்கதா" என்ற கருப்பின கருங்காலி கும்பலுடன் வெள்ளை நிறவெறியர்கள் கள்ளக் கூட்டு சேர்ந்து கொண்டு, நெல்சன் மாண்டேலாவின் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு ஆதரவாளர்கள் அதிகமாக வாழும் பொய்படாங் கிராமத்தில் ஜூன் 17 அன்று பெண்கள் - குழந்தைகள் உட்பட 40 பேரை கோரமாக வெட்டிக் கொன்றுள்ளனர். அதைத் தொடர்ந்து சுவெடோ, ஜோகன்னஸ்பர்க் ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக 78 பேர் கொல்லப்பட்டனர். ஆத்திரமடைந்த கருப்பின மக்கள், பொய்ப்படாங் கிராமத்துக்கு ஆறுதல் கூறவந்த வெள்ளை அதிபர் டிகிளார்க்கை கெரோ செய்து விரட்டியடித்தனர். அப்போது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் 3 கருப்பர்கள் கொல்லப்பட்டனர். இந்த அரசு மீது நாங்கள் நம்பிக்கை இழந்து விட்டோம் என்று கூறிஜனநாயக மாற்றங்களுக்காக அரசுடன் நடத்தி வந்த பேச்சுவார்த்தையை மாண்டேலா முறித்துக் கொண்டுள்ளார். அளப்பரிய தியாகத்துக்குப் பிறகு கருப்பின மக்கள் போராடிப் பெற்ற உரிமைகளைக்கூட பறித்துக் கொள்ளும் நோக்கத்தோடு மீண்டும் நிறவெறியர்கள் கிளம்பியுள்ளதையே தென்னாப்பிரிக்காவில் படுகொலைகள் நிரூபித்து வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# வங்கி – பங்கு மோசடி மறைந்துள்ள இரகசியங்கள்

**நாட்டின் தொழில் மற்றும் நிதித்துறைகளை மட்டுமல்ல. மத்தியில் ஆளும் பார்ப்பன - பனியா, பாசிச காங்கிரசு கும்பலையே கதிகலங்கச் செய்து வருகிறது, வங்கி மற்றும் பங்குச் சந்தை ஊழல் விசாரணை. தோண்டத் தோண்ட பல்வேறுவிதமான மோசடி, பித்தலாட்டம், அதிகார முறைகேடுகள், கையாடல்கள் நடந்துள்ளதாகத் தெரியவருகின்றது. இன்னும் என்னென்ன வகையில், எவ்வளவு கோடி ரூபாய்கள் கொள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன? யார், யார் நேரடியாக மறைமுகமாகச் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள்? இவை போன்ற விவரங்கள் முழுமையாகத் தெரியவில்லை. அதற்குள்ளாகவே உண்மைகள் முற்றிலுமாக வெளிவராமல் மூடிமறைப்பதற்கான முயற்சிகள் மும்முரமாக நடக்கின்றன. அர்சத் மேத்தாவும் அவனது கூட்டாளிகளும் ஏதோ தில்லுமுல்லுகள் செய்து வங்கிப் பணத்தைக் கோடிக் கணக்கில் கையாடல் செய்து விட்டார்கள் என்பது வரைக்கும்தான் படித்த நடுத்தர வர்க்கத்தினரே புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் நாட்டின் தொழில் மற்றும் நிதித்துறை முழுவதுமே பெரும் தரகு அதிகார முதலாளிகள், பங்குச் சந்தை வர்த்தகச் சூதாடிகள், நிதி மற்றும் வங்கி அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் பகற்கொள்ளை, தில்லுமுல்லுகளுக்கு ஏற்ற வகையில்தான் ஒழுங்கமைக்கப் பட்டிருக்கின்றன. இதைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கே தேவையான ஆரம்ப விளங்கங்கள் இங்கே தரப்படுகின்றன. அவற்றைத் தொடர்ந்து இப்போது நாட்டையே குலுக்கும் வங்கி மற்றும் பங்குச் சந்தை மோசடியின் உண்மைகளைப் பார்ப்போம்.**

டாடா, பிர்லா, அம்பாணி, இந்துஜா, டி.வி.எஸ் போன்றவர்கள் நாட்டின் மிகப் பெரும் தரகு அதிகார முதலாளிகள் என்பது பலருக்கும் தெரியும். இந்தத் தொழில் குடும்பம் ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான தொழில் நிறுவனங்களை வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு தொழில் குடும்பமும் இந்த நிறுவனங்களின் மூலம் 2000 முதல் 5000 கோடி ரூபாய் வரை சொத்துக்களைக் கொண்டுள்ளன. இதைப் போலப் பத்து மடங்கு ஒவ்வொரு தொழில் குடும்பமும் ஆண்டுக்கு வரவு செலவு செய்கின்றன. இதனால் ஆண்டுக்குக் குறைந்தது 1000 கோடி ரூபாயாவது லாபம் காண்கின்றன. இவை அந்தந்தத் தொழில் குடும்பங்களே அரசுக்குக் கொடுத்த புள்ளி விவரங்களின் அடிப்படையிலானவை.

இவ்வளவு பெருந் தொகையைக் கொண்ட தொழில் நிறுவனங்கள் இந்தக் குடும்பங்களுக்கு எப்படி வந்தன? இவர்களது மூதாதையர்கள் பரம்பரை பரம்பரையாகப் பாடுபட்டு ஈட்டித் தமது வாரிசுகளுக்குத் தந்த சொத்துக்களா? அல்லது இவர்களாகவே தமது அரும் முயற்சியினால் சம்பாதித்தவையா?

இதன் இரகசியம் பெரும்பாலான மக்களுக்குத் தெரியாது. இந்த முதலாளிகள் தமது திறமையினாலும் உழைப்பாலும் சேர்த்துவைத்த சொத்தைக் கொண்டு தாமே மூலதனமிட்டுத் தொழில் சம்பாதிப்பது நியாயமானது என்றும், நட்டமடைந்தாலும் அவர்கள் தானே அதைத் தாங்கிக் கொள்கிறார்கள் என்றும் நியாயம் பேசப்படுவதை பெரும்பாலான மக்கள் கேட்கிறார்கள்; இப்போதைக்கு அதை நம்பவும் செய்கிறார்கள்.

ஆனால் அந்தத் தொழில் நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் கால் பங்கு சொத்துக் கூட அதை நிர்வகிக்கும் தொழில் குடும்பங்களுக்குச் சொந்தமானவை அல்ல. உண்மையில் ஊராரின் சொத்தையே அவர்கள் கொள்ளைப்புற வழியில் அபகரித்துக் கொண்டு ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். முதலாளித்துவப் பொருளாதாரம் கற்ற அனைவருக்கும் இந்த இரகசியம் தெரியும். இதைத் தவறாக அவர்களில் பலர் கருதவில்லை. மூலதனத்தைச் சேர்க்கவும், தொழில்களை வளர்க்கவும், நிர்வகிக்கவும் இதுதான் சிறந்த வழி என அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இத்தரகு பெருமுதலாளிகள் அவர்களுக்குச் சொந்தமல்லாத மூலதனத்தை வைத்துத் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுவதோடு, அதற்கான மூலதனத்தைத் தரும் பங்குதாரர்களையும், இந்தச் சமுதாயத்தையுமே பல வழிகளில் மோசடி செய்து கொள்ளையடிக்கிறார்கள்.

முதலாளிகள் தமது சொந்த, குடும்ப மூலதனத்தைக் கொண்டோ, அல்லது தமக்குத் தெரிந்த நெருங்கிய ஒரு சிலரைப் பங்குதாரர்களாகக் கொண்டோ, தொழில்கள் துவங்கி நடத்துவது மிகப் பழைய முறையாகும். ஒவ்வொரு தொழிலும் பூதாகரமாக வளர்ந்தபோதும், ஒவ்வொரு தொழிலிலும் ஏகபோக ஆதிக்கம் பெறவும் இம்மாதிரிச் சேர்க்கப்படும் மூலதனம் போதிய அளவினதாக இருக்கவில்லை. மேலும் ஒரு முதலாளியோ, அவனது குடும்பமோ, நெருங்கிய பங்காளிகளோ, தமது மூலதனம் முழுவதையும் ஒரு தொழிலிலேயே போட்டு முடக்கி விடுவது அதிகபட்ச லாபம் தருவதாக இருக்காது. எனவே முதலாளிகளும், முதலாளித்துவ தொழில், பொருளாதார நிபுணர்களும் ஒரு புதிய உத்தியைக் கண்டு பிடித்தார்கள். முதலாளிகள் தம்மிடம் உள்ள ஒரு பகுதி மூலதனத்தைக் காட்டி, கண்ணுக்குத் தெரியாத ஆயிரக்கணக்கான சேமிப்பாளர்களை ஈர்த்து, அவர்கள் தமது கம்பெனிகளில் தமது சேமிப்புகளை முதலீடு செய்தால் அதை வைத்துத் தொழில் நடத்தி முதலீட்டிற்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட அளவு லாபம் ஈட்டித் தருவதாகக்கூறி பங்கு தாரர்களாக்குவது அந்த உத்தியின் முதல் பகுதி. இப்படியே பல தொழில் நிறுவனங்களின் நிர்வாகங்களையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது இன்னொரு பகுதி. இப்படி நடத்தப்படும் தொழில் நிறுவனங்களை கூட்டுப் பங்குக் கம்பெனிகள் (Joint Stock Companies) மற்றும் தொழில் கழகங்கள் (Corporate Companies) என்று அழைக்கப்படுகின்றன.

ஒரு முதலாளி தனித்தோ, சில கூட்டாளிகளுடன் சேர்ந்தோ ஒரு தொழில் நிறுவனம் துவங்குவதாகத் தீர்மானிக்கிறான். அதற்குரிய திட்டங்களை வரைந்து, அரசிடம் இருந்து தேவையான உரிமங்களைப் பெறுகிறான். அந்தத் திட்டத்துக்குரிய முதலீடு 100 கோடி ரூபாய் என்றால் அந்தத் தொகை முழுவதும் ஆரம்பத்திலேயே அவன் திரட்டியிருக்க வேண்டிய அவசியமோ, கட்டாயமோ இல்லை. ஆரம்பகாலப் பணிகளுக்கான சில லட்சம் ரூபாய்கள் இருந்தாலே போதும். தனக்குள்ள அரசியல் மற்றும்பிற செல்வாக்கைப் பயன்படுத்தி அரசு முன்னுரிமை தரும் திட்டங்களையோ, துவங்குவதற்கு சகல ஆதரவும் தர எண்ணியுள்ள திட்டங்களையோ தெரிவு செய்கிறான்; அல்லது பின் தங்கிய பகுதியில் துவங்குவது, புதிய தொழில் நுட்பம், சுயசார்பு என்று ஏதாவது ஒரு காரணத்தை வைத்து

படிப்பகம்

www.padippakam.com

அரசு நிதியில் இருந்தே ஆரம்ப முதலீட்டிற்கு ஏற்பாடு செய்கிறான் முடியாவிட்டால் தானே குறைந்தபட்சமாக 10 அல்லது 15 சதவீத மூலதனம் போடுகிறான்; அதுவும் கூட ஏற்கனவே தனது கட்டுப்பாட்டில் உள்ள வேறொரு கூட்டுப் பங்குக் கம்பெனி அல்லது தொழில் கழகத்தில் இருந்து ஒதுக்கிக் கொண்டு வருகிறான்.

தொடங்க இருக்கும் தொழில் நிறுவனத்தின் மொத்த மூலதனத்தை ரூ.10, 25, 50 அல்லது ரூ.100 என்று சமபங்குகளாகவும் (Equity Shares) மாற்றமுடியாத அல்லது மாற்றக் கூடிய கடன் பத்திரங்களாகவும் (Convertibile or non convertible Debentures ) பிரிக்கிறான். மிகச் சிறிய அளவு மூலதனம், சேமிப்பு வைத்திருப்பவர்கள் யாராக இருந்தாலும் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் வாங்கலாம்; பங்குகளுக்கு லாப ஈட்டுத் தொகையும் Dividend கடன் பத்திரங்களுக்கு நல்ல வட்டியும் தரப்படும் என்று அறிவிக்கிறான். பெருமளவு லாபம் ஈட்டக்கூடிய தொழில்தான் என்றும் பொறுப்பாளர்கள் தொழில் நுட்ப அறிவும், நிர்வாகத் திறனும், தொழிலில் நல்ல பெயர் எடுத்தவர்கள்; ஆகவே நம்பி முதலீடு செய்யலாம் என்றும் விளம்பரம் செய்கிறான்.

ஆனால் சம பங்குகளும், கடன் பத்திரங்களும் முழுமையாக விற்கப்பட்டு, மூலதனம் மொத்தமாகத் திரட்டப்படும்வரை தொழில் துவங்காமல் அந்த முதலாளி காத்திருக்க வேண்டியதில்லை. முதலில் சொன்னவாறு பல்வேறு காரணங்களை முன் வைத்து மத்திய, மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகங்கள் போன்ற அரசு நிதி நிறுவனங்களே நேரடியாக கணிசமான அளவு சமபங்குகளையும் கடன் பத்திரங்களையும் வாங்கும்படி செய்து ஆரம்ப மூலதனத்தைத் திரட்டிக் கொள்கிறான். எஞ்சிய சமபங்குகளையும், கடன் பத்திரங்களையும்கூட ஆயுள் காப்பீட்டுக் கழகம், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் போன்ற அரசு நிதி நிறுவனங்களிடம் அடகு வைத்தோ, விற்பனை முகமை கொடுத்தோ உடனடியாகவே ரொக்கமாக்கிக் கொள்கிறான்.

இவ்வாறு திரட்டப்பட்ட மூலதனத்தை வைத்து முதலாளியும், நிர்வாகிகளும் தொழில் தொடங்கி நடத்த ஆரம்பித்து விடுகிறார்கள். அதே சமயம் அவர்களால் புழக்கத்திற்கு விடப்பட்ட சமபங்குகளும், கடன் பத்திரங்களும் பங்குச் சந்தைக்குப் போய்விடுகின்றன. அவற்றை வாங்குவது, விற்பது என்கிற ஒரு வர்த்தகம் தனியே நடக்கிறது. அதன் கதையைப் பிறகு பார்ப்போம்.

மேற்கண்டவாறு துவங்கி நடத்தப்படும் தொழில் நிறுவனங்கள் கூட்டுப் பங்கு கம்பெனிகள் அல்லது தொழில் கழகங்கள் என்றும் இவற்றை மொத்தமாக தொழில் கழகங்களின் துறை (corporate sector) என்றும் அழைக்கப்படுகிறது. இதைத் தொழில் கழக ஜனநாயகம் என்றும் சொல்கிறார்கள். அதாவது பங்குதாரர்களால் ஜனநாயகபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளால் தொழில் கழகங்கள் நடத்தப்படுகின்றன என்கிறார்கள். நாட்டிலுள்ள 80 கோடி மக்கள் தொகையில் ஒன்னரைக் கோடி பேர்களே இத்தகைய பங்குகளை வாங்கக்கூடிய சக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள்; இவர்களும் மேட்டுக்குடித் தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் அதற்கு மேல் தட்டுக்களை சேர்ந்தவர்கள்தாம். மொத்த மக்கட் தொகையில் இவர்கள் இரண்டு சதவீதத்திற்கும் குறைவானர்கள்தாம். ஆக மிக மிக சிறுபான்மையினருக்குரிய இந்த வசதியைத்தான் ஜனநாயகம் என்கிறார்கள்.

ஆனால் இதிலும் பங்குதாரர்களின் ஜனநாயகம் என்பது உண்மையில் பித்தலாட்டமாகும். ஏனென்றால் ஒரு பங்குக்கு ஒரு வோட்டு என்கிற முறையில் பாதிக்கு மேலான பங்குகள் அரசு நிதி நிறுவனங்களுக்கும் ஏற்கனவே அத் தொழில் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் தொழில் குடும்பத்திற்கும் நிர்வாகிகளுக்கும் சொந்தமானவையாகும். அரசு நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் என்கிற முறையில் சில இயக்குனர்கள் குறிப்பிட்ட தொழில் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இந்த இயக்குனர்களும் அரசு நிதி நிறுவன அதிகாரிகளுமே அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பங்குகளுக்காக வோட்டளிக்கும் உரிமை உடையவர்கள். இவர்களுக்கு லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கிவிடுவதோடு, ஏற்கனவே அத்தொழில் கழகத்தைக் கட்டுப்படுத்தும் தொழில் குடும்பத்தினர் 10 அல்லது 15 சதவிகித அளவு பங்குகளை வைத்திருந்தாலே போதும்; தாமே அதன் இயக்குனர்களாகவும், நிர்வாக இயக்குனர் மற்றும் தலைவராகவும் வந்துவிடமுடியும். இதெல்லாம் இரகசிய பேரங்கள் மூலம் நடந்து முடிந்தபிறகு தான் தொழில் கழகத்தின் பொதுக் குழுவும், தேர்தலும் நடக்கின்றன. இப்படித்தான் 12 சதவிதம் பங்கு மட்டுமே வைத்திருக்கும் சிதம்பரம் செட்டியார் குடும்பம் தூத்துக்குடி "ஸ்பிக்" கம்பெனியின் கட்டுப்பாட்டை வைத்துக் கொண்டுள்ளது. 12 சதவீத பங்குகளையே வாங்கிய சாராய (ராமசாமி) உடையார் "பின்னி"யையும், 15 சதவீத பங்குகளையே வாங்கிய இந்துஜா "அசோக் லேலான்டு" கம்பெனியையும் கைப்பற்றினர். பல லட்சக்கணக்கில் பங்குகளை வைத்துள்ள - அதுவும் சந்தையில் கைமாறிக் கொண்டிருப்பதாலும், நாட்டின் பல பாகங்களிலும் சிதறிக் கிடப்பதாலும் முகம் தெரியாத பல ஆயிரம் பங்குதாரர்கள் ஒரு அணியாகத் திரள முடியாது. ஏற்கனவே அத்தொழில் நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் தொழில் குடும்பம் என்னதான் மோசடிகளில் ஈடுபட்டிருந்தாலும் அதை அகற்றவோ, மாற்றவோ முடியாது. எனவே மிக மிகச் சிறுபான்மையினரான பங்குதாரர்களே கலந்துகொள்ளும் பொதுக்குழுவில் விருந்துண்டு, நிர்வாகத்தினரது தீர்மானங்களுக்கெல்லாம் கைதூக்குவதுதான் நடக்கிறது.

ஆனால் ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தைத் தற்போது கட்டுப்படுத்தும் தொழில் குடும்பத்திடம் இருந்து இன்னொரு தொழில் குடும்பம் பங்குகளைப் பெரும் எண்ணிக்கையில் விலைக்கு வாங்க முடியும். இதன் மூலம் அந்நிறுவனத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்கவோ, உதவவோ அரசு நிதி நிறுவனங்கள் மற்றும் பங்கு, வங்கி கட்டுப்பாட்டு அதிகாரிகள் செய்ய முடியும். பங்குச் சந்தையை நெறிப்படுத்துவதற்காக உள்ள பத்திர பறிமாற்ற வாரியம் (SEBI) மற்றும் கடன் - முதலீட்டு கட்டுப்பாட்டாளர் (CCI) ஆகிய அமைப்புகளின் அனுமதியோடு இது நடக்கிறது. இதெல்லாம் குறிப்பிட்ட தொழில் குடும்பங்களின் அரசியல் மற்றும் பிற செல்வாக்குகளைப் பொருத்தே நடக்கிறது. இப்படித்தான் எஸ்கார்ட்ஸ் மற்றும் டி.சி.எம். ஆகியவற்றை லண்டன் வாழ் இந்தியப் பெருமுதலாளி சுவராஜ் பாலும், "மாத்துருபூமி"யை ஜெயின் குடும்பமும்

சரிவுக்கு முன்: பம்பாய் பங்குச் சந்தை தொடர்பகத்தில் பொங்கி வழியும் உற்சாகம்.



படிப்பகம்

www.padippakam.com

கைப்பற்றுவது தடுக்கப்பட்டது. ''எல். அண்டு டி''யின் பங்குகளை வாங்கி, விற்றதன் மூலம் எல்.ஐ.சி.யும், பரோடா வங்கியும் அந்நிறுவனத்தை பெரும் முதலீடு போடாமலேயே அம்பாணி கைப்பற்ற உதவின. மற்றபடி இவ்வாறு நடப்பதெல்லாம் பொதுவில் உள்ள பாமரப் ''பங்குதாரர்களின் ஜனநாயக உரிமை''ப்படி அல்ல.

ஆகவே சொற்ப அளவே முதலீடு போட்டுள்ள தொழில் குடும்பம் அந்தத் தொழில் நிறுவனம் முழுவதும் மீதும் ஆதிபத்திய உரிமை பாராட்டி ஆண்டு அனுபவிக்கிறது. அரசு நிதி நிறுவனங்களையும் பங்குதாரர்களையும் ஏய்த்துப் பல வழிகளில் கொள்ளை லாபம் அடிக்கிறது; ஒரு தொழில் கழகத்தை வைத்தே இன்னொன்றைக் கைப்பற்றுவது அல்லது துவங்குவதன் மூலம் ஒரு சங்கிலித் தொடரையே ஏற்படுத்திக் கொள்கிறது. ஆக, ஊரார் வீட்டுச் சொத்துக்களை ஒன்று குவிப்பதன் மூலம் ஒரு சிலரது கொள்ளைக்குச் செய்யப்படும் ஏற்பாடுதான் கூட்டுப்பங்கு அல்லது தொழிற் கழக ஜனநாயகம். இதையே தனிப்பட்ட முதலாளிகளிடம் ஒப்படைப்பதற்குப் பதில் தேசியமயமாக்கி அரசு அதிகாரிகளின் கொள்ளைக்கு வைக்கும் ஏற்பாடுதான் சி.பி.ஐ, சி.பி.எம். மற்றும் இந்திரா - நேரு வகை சோசலிசம்.

தொழிலாளர்களின் உபரி உழைப்பாலும் அரசு நிதி நிறுவனங்களாலும், ''பாமரப் பங்குதாரர்களின்'' சேமிப்பாலும் குவிக்கப்படும் மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அனைத்துத் தொழில் அமைப்புகளையுமே அரசுடமையாக்கி, அந்தந்த அமைப்புகளில் உள்ள தொழிலாளர்களுக்குள்ளேயே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளைக் கொண்டே இயக்க வேண்டும் என்பது மார்க்சிய - லெனினிய சோசலிசம். ஆகவேதான் தொழிலகங்கள் பெரும் தொழில் குடும்பங்களுக்கோ, அரசு அதிகாரிகளுக்கோ சொந்தமானவையாக இருக்கக் கூடாது தொழிலாளர்களுக்குச் சொந்தமானவையாக இருக்க வேண்டும் என்கிறோம்.

கூட்டுப் பங்குத் தொழில் கழக அடிப்படையில் இப்போது உற்பத்தி ஆலைகள், வர்த்தகங்கள் மட்டும் நடப்பதில்லை. ஓட்டல்கள், சினிமா, தபால் - செய்தி, மருத்துவமனை, பள்ளி - கல்லூரிகள், விவசாயப் பெரும்பண்ணைத் தொழில்கள் கூட கூட்டுப்பங்குக் கழக அடிப்படையில் நடத்தப்படுகின்றன. எல்லாம் ''நீ அரிசி கொண்டு வா! நான் உமி கொண்டு வருகிறேன்; கலந்து இரண்டுபேரும் ஊதி ஊதி உண்போம்'' என்கிற ரீதியிலேதான் நடக்கின்றன.

இவ்வாறு தொழில் கழகங்களுக்கு நிதி திரட்டுவதற்காக பங்குகளும், கடன் பத்திரங்களும் புழக்கத்தில் விடப்படுவதால் அவற்றை விற்கவும் வாங்கவும் ஏற்பட்ட வர்த்தகச் சந்தைதான் பங்குச் சந்தை. இதுவே கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்கான தனித் தொழிலாகவும் சூதாட்டமாகவும் நடைபெறுகிறது. அதாவது நேரடி சரக்கு உற்பத்தி மற்றும் பரிமாற்றம் எதுவும் இல்லாமலேயே பங்குகளையும் கடன் பத்திரங்களையும் விற்பது, வாங்குவதன் மூலம் லாபம் சம்பாதிக்கும் ஒரு கூட்டம் இருக்கிறது. சூதாட்டத்தை வேடிக்கைப் பார்ப்பவர்கள் பந்தயம் கட்டுவதைப்போல இதிலும் நடக்கிறது.

பங்குகள், கடன் பத்திரங்களை வாங்கி, விற்பதற்கு என்றே தரகர்கள் பலர் உள்ளனர். இவர்களின் கூட்டமைப்புதான் ''ஸ்டாக் எக்சேஞ்ச்'' எனப்படும் பங்குச் சந்தை தொடர்பகம். 1857 ஆம் ஆண்டே பம்பாயில் முதல் பங்குச் சந்தைத் தொடர்பகம் துவங்கப்பட்டது. கடைசியாக கோவை, மீரட் ஆகிய நகரங்களில் துவங்கப்பட்டவை உட்பட நாட்டில் 21 பங்குச் சந்தைத் தொடர்பகங்கள் உள்ளன.

சரிவுக்குப் பின்: பம்பாய் பங்குச் சந்தை தொடர்பகத்தில் நிலவும் பதட்டமும் பீதியும்.



இந்தத் தொடர்பகங்கள் எல்லாம் அரசு அங்கீகாரம் பெற்ற அதிகாரபூர்வமான, சுயக் கட்டுப்பாடுள்ள, தன்னாட்சி அமைப்புகளாகும். ''தனி நபர்கள், கம்பெனிகள் ஆகியவர்களை உறுப்பினராகக் கொண்டு, பங்கு பத்திரங்களை வாங்குதல், விற்றல், பேரம் செய்தல் ஆகியவற்றிற்கு உதவி செய்து ஒழுங்குபடுத்தி, வரைமுறைப்படுத்தும் ஓர் கூட்டமைப்பாகும்'' என்று கூறும் 1956 ஆம் ஆண்டு பங்கு பத்திர ஒப்பந்த நிர்வாக வரன்முறை சட்டம் இந்தத் தொடர்பகங்களை நெறிப்படுத்துகிறது.

நாடு முழுவதும் உள்ள பங்குச் சந்தைத் தொடர்பகங்களில் மொத்தம் 6500 கம்பெனிகளின் பங்குகள் அதிகாரபூர்வமாக வர்த்தகம் செய்யப்படுகின்றன. கழிவு (கமிசன்) தொகை பெற்றுக் கொண்டு பங்குகளைப் பங்குதாரர்கள் விற்கவும் வாங்கவும் உதவுவது என்கிற பெயரில் ஏற்பட்ட தரகர்களும், துணைத் தரகர்களும், தரகுக் கம்பெனிகளும் பின்னர் பங்குச் சந்தையையே ஆட்டுவிக்கும் பலம் பெற்றார்கள். பெரும் தொழில் கழகங்களை நிர்வகிக்கும் பெரும் முதலாளிகளே தரகுக் கம்பெனிகள் வைத்துக் கொண்டு பங்குச் சந்தையில் சூதாடுகின்றனர்; இன்னும் பல தரகர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு ஏகபோக முதலாளிகள், அரசியல்வாதிகள் அரசு அதிகாரிகளின் பினாமிகளாக பங்குச் சந்தைச் சூதாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10, 25, 50, 100, 500 என்று வேறுபட்டிருந்தாலும் இப்போது வசதிக்காகவும், அதிகபட்சம் மக்களிடம் இருந்து மூலதனத்தைத் திரட்டுவதற்காகவும் 10 ரூபாய்க்குப் பங்குத் தொகை நிர்ணயித்து வெளியிடுவது வழக்கமாகி வருகிறது. ஒரு பங்கின் நிர்ணயிக்கப்படும் முகமதிப்பு எதுவாக இருந்தாலும் அதன் சந்தை மதிப்பு மாறிக் கொண்டே இருக்கிறது. பொதுச் சந்தையில் அந்தக் கம்பெனிச் சரக்குக்கு உள்ள மதிப்பு, கம்பெனியின் உற்பத்தி, வர்த்தக, தொழில், நிர்வாகத்திறன், பிரபல தொழிலதிபர்களும் நிர்வாகிகளும் அதன் இயக்குனர்களாக இருப்பது பங்கின் சந்தை மதிப்பைக் கூட்டுகிறது. ஆனால் இவை எதற்குமே சம்பந்தமில்லாதவாறு பங்குச் சந்தையில் தில்லுமுல்லுகள் செய்து கொள்ளையடிப்பது நடக்கிறது.

கிரிமினல் மஃபியா கும்பல்களைப் போல ஒரு சில தரகர்கள், முதலாளிகள் கூட்டணி அமைத்துக் கொண்டு சில கம்பெனிகளின் பங்கு மதிப்பை செயற்கையாக உயர்த்துவார்கள்; அதற்காக பல்வேறு வழிகளில் திரட்டப்பட்ட கள்ள, கருப்புப் பணத்தை பங்குச் சந்தையில் குவிப்பார்கள்; குறிப்பிட்ட சில கம்பெனிகளின் பங்குகளை மொத்தமாக வாங்கி முடக்கிக் கொள்கிறார்கள். அவற்றிற்கு செயறகையான கிராக்கியை உருவாக்குகிறார்கள். இதனால் அந்த பங்குகளின் சந்தை மதிப்பு கூடிவிட்டதாகக் கருதி

படிப்பகம்

www.padippakam.com

"பாமர பங்குதாரர்கள்" கூடுதலான விலை கொடுத்து அடித்துப் பிடித்துக் கொண்டு வாங்குகிறார்கள். இப்படி பங்கு விலை மள மளவென்று உயர்ந்து கொண்டே போகும். பங்கு விலை உயர்வு ஒரு குறிப்பிட்ட கட்டத்தை எட்டியதும் தரகர் - முதலாளி கூட்டணி திடீரென்று பங்குகளை விற்று ரொக்கமாக்கிக் கொண்டு விடுவார்கள். இதனால் பங்கு விலை கிடுகிடுவென்று சரிந்துவிடும். பாமரப் பங்குதாரர்களுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டு திவாலாகிவிடுவதும் உண்டு. எந்த எந்தக் கம்பெனிகளின் பங்குகள் எப்படிப்பட்ட மாறுதலுக்கு உள்ளாகும் என்பதை ஊகம் செய்து அதற்குப் பந்தயம் கட்டி சூதாடுவதும் உண்டு.

வங்கிகள், அரசுடமையாக்கபட்ட வங்கிகள் போன்ற அரசு நிதி நிறுவனங்களும் அவற்றின் சார்பாக அதிகாரிகளும் கூட இந்தப் பங்குச் சந்தைச் சூதாட்டத்தில் பங்கேற்கின்றனர்.

நாட்டிலுள்ள 21 பங்குச் சந்தைத் தொடர்பகங்களின் மூலம் 6500 கம்பெனிகளில் ஏறக்குறைய ஒன்னரைக் கோடிப் பங்குதாரர்கள் இந்தச் சூதாட்டத்தில் ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். தற்போது' வங்கி - பங்குச் சந்தை மோசடியில் சிக்கியிருக்கும் அர்சத் மேத்தா, பூபேன் தலால் போன்ற தரகர்களும் மார்க்கபந்து, கேமாணி போன்ற வங்கி அதிகாரிகளும் அடங்கிய கும்பல் இந்த ஒன்னரைக் கோடி பங்குதாரர்களிடம் சூதாட்ட விதிகளை எல்லாம் மீறி பித்தலாட்டங்கள் செய்து பல ஆயிரம் கோடி ரூபாய்கள் கொள்ளையடித்துள்ளனர். இதனால் பல லட்சம் பங்குதாரர்கள் ஏமாற்றப்பட்டு போண்டியாகிப் போனார்கள். இந்த பங்குச் சந்தை மோசடிக்கான முதலீட்டிற்குக்கூட அவர்கள் தமது சொந்தப் பணத்தைப் பயன்படுத்தவில்லை. வங்கிப் பணத்தை எடுத்துச் சூதாடி மோசடி நடத்தியிருக்கிறார்கள். ஆனால் வங்கி - பங்குச் சந்தை மோசடியின் இந்த அம்சங்கள் குறித்து இப்போது விசாரணையோ, தண்டனையோ கிடையாது.

இதில் வேறு ஒரு வகை மோசடி நடந்துள்ளது. வங்கிகளுக்கிடையில் அரசுக் கடன் பத்திரங்களைப் விற்பது - வாங்குவதற்கான வசதிகள் உள்ளன. போலி ஆவணங்கள் மூலம் இந்த வசதியைக் கேடாகப் பயன்படுத்தி வங்கி அதிகாரிகளும் தரகர்களும் வங்கிகளுக்கு, குறிப்பாக அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு 3079 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுத்தியிருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதை மீட்பதற்கான முயற்சியாகத்தான் இப்போது மத்திய புலனாய்வுக் குழு (சி.பி.ஐ) விசாரணையும் வழக்குகளும் நடக்கின்றன.

நடந்துள்ள வங்கி - பங்குச் சந்தை மோசடிகளை முழுமையாக, விரிவாகப் பார்க்கும் போதுதான் சமூக மதிப்புடன் வாழும் எத்தகைய கிரிமினல் கும்பல்களின் இரும்புப் பிடிக்குள் நாட்டின் தொழில் மற்றும் நிதித்துறை சிக்கியிருக்கிறது என்பதை அறிய முடியும். அவற்றை அடுத்த இதழில் பார்ப்போம்.

***சுற்றுச் சூழலும் உயிரியல் சூழலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, மனித குலமே அழியும் அபாயத்திலுள்ள நிலையில், கடந்த ஜூன் 4 முதல் 14-ந் தேதி வரை பிரேசில் நாட்டின் தலைநகரான ரியோடி ஜெனிரோவில் ஐ.நா.மன்றத்தின் ஏற்பாட்டின்படி 178 நாடுகளும் 25,000 பிரதிநிதிகளும் பங்கேற்ற புவி பாதுகாப்பு உச்சி மாநாடு நடைபெற்றது. 1990-ல் மிக மோசமாக சுற்றுச் சூழலைப் பாதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கோகோ கோலா, ஜெராக்ஸ், 3 எம், அட்லாண்டிக் ரிச்பீல்டு ஆயில் முதலான பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் அளித்த தாராள நன்கொடையைக் கொண்டு நடத்தப்பட்ட இம் மிகப்பெரிய மாநாடு, கடைசியில் எந்த முடிவுமின்றி தோல்வி அடைந்துவிட்டது. சுற்றுச் சூழல் பாதிப்படைய காரணம் என்ன? அது மனித குலத்துக்கு எந்த வகையில் தீங்கானது? இதற்கு யார் பொறுப்பு?***

"ஐயோ! என்ன வெயில்! வெளியில் தலைகாட்டவே முடியவில்லை. என் வாழ்நாளில் இப்படியொரு கோடையை நான் பார்த்ததேயில்லை" என்று வழியும் வியர்வையைத் துடைத்தபடியே கூறினார் அந்த தமிழக விவசாயி. கங்கை ஆற்றின் கரையில் வாழும் உத்திரப்பிரதேச விவசாயிக்கோ வேறொரு பிரச்சினை. சென்ற முறை மழைக் காலத்தின் போது பெருவெள்ளம் ஏற்பட்டு அவரது நிலமே மூழ்கிப் போனது. இன்னமும் தண்ணீர் வடியவில்லை என்று கண்ணீர் சிந்துகிறார் அவர். இவை ஏதோ ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை நடக்கும் இயற்கையின் சீற்றமாக இல்லை. இப்போது ஆண்டுதோறும் - ஒவ்வொரு பருவந்தோறும் நடப்பது வழக்கமாகி விட்டது.

இந்தியா மட்டுமல்ல; அண்டை நாடான வங்க தேசத்தில் ஆண்டுதோறும் வெள்ளமும் புயலும் தாக்குவதும் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டுபோவதும் வாடிக்கையாகிவிட்டது. அந்நாட்டின் 30 லட்சம் ஏக்கர் பயிர் நிலங்கள் இன்னமும் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கிறது. இதே போல மாலத்தீவு நாட்டின் சில சிறிய தீவுகள் கடலில் மூழ்கி விட்டன. ஐரோப்பிய கண்டத்தில் கடல் மட்டத்தைவிடத் தாழ்வான நாடாகிய ஹாலந்து நாட்டை கடல் அலைகள் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆப்பிரிக்க கண்டத்திலுள்ள எத்தியோப்பியாவைக் கவ்விய வறட்சியும் பட்டினிச்சாவுகளும் இப்போது மொசாம்பிக் நாட்டுக்கும் பரவிவிட்டது. ஆப்பிரிக்க பாலைவனப் பகுதி முன்னைவிட விரிவடைந்து கொண்டே போகிறது. நைஜீரியா, கினியா - பிசாவ் நாடுகளில் எதையுமே பயிரிட முடியாமல் நிலமே நஞ்சாகிப் போய்விட்டது. இந்தியாவின் தென் கிழக்கேயுள்ள பிலிப்பைன்ஸ் நாட்டில் கடலில் அடிக்கடி கூட்டம் கூட்டமாக மீன்கள் செத்து மிதக்கின்றன. தென் அமெரிக்க கண்டத்திலுள்ள சிலி, பிரேசில், அர்ஜெண்டினா நாடுகளில் இனம் புரியாத கொடிய நோய் தாக்கி கொத்துக் கொத்தாக மக்கள் மடிந்து போகிறார்கள். அமெரிக்காவில் தோல் புற்று நோயால் 6 லட்சம் பேர் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது? இவற்றுக்குக் காரணம் என்ன? இவை பூமியின் சுற்றுச் சூழல், உயிரியல் சூழல் பாதிக்கப்படுவதால் ஏற்படும் கோரமான விளைவுகள் என்கிறார்கள் விஞ்ஞானிகள். சுற்றுச் சூழல் என்பது நிலம், நீர், காற்று ஆகியவற்றையும், உயிரியல் சூழல் என்பது காடுகள், இயற்கைத் தாவரங்கள், பிராணிகள் - பறவைகள் மற்றும் பிற உயிரினங்களைக் குறிப்பதாகும். இவற்றை மாசுபடுத்தி நச்சுப்படுத்துவதாலும், வரைமுறையின்றி மனித இனம் பயன்படுத்தி அழிப்பதாலும் பூமிக்கும் மனித இனத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டு வருவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

தொழிற் புரட்சிக்குப் பிறகு உலகில் தொடர்ந்து அதிகரித்து வரும் வாகனப் பெருக்கம் - அதனால் 'கார்பன் டை ஆக்சைடு' எனப்படும் கரியமில வாயு காற்று மண்டலத்தில் தொடர்ந்து அதிகரித்திருப்பது; உலகம் மேலும் மேலும் தொழில் மயமாவதால் ஆலைகள் பெருகுவதும் அவை வெளியேற்றும் நச்சுப் புகை காற்று மண்டலத்தை ஆக்கிரமிப்பதன் காரணமாக உலகம் மேலும் மேலும் வெப்பமடைந்துகொண்டே போகிறது. சூரிய மண்டலத்திலிருந்து வெளிப்படும் கடுமையான வெப்பத்தையும் புற ஊதாக் கதிர்களையும் பூமியைத் தாக்காமல் தடுத்து, பூமியின் மேல் குடைபோல அமைந்துள்ள 'ஓசோன்' வாயு மண்டலம் இதனால் தொடர்ந்து பாதிக்கப்படுகிறது. இவை தவிர குளிர்சாதனப் பெட்டிகளிலிருந்து வெளிப்ப



படிப்பகம்

www.padippakam.com

# ச் சூழல் - உயிரியல் மாநாடு

# கள் மீது பழிபோடும் நரிகள்

டும் குளோரோ.ஃப்ளோரோ கார்பன்களும், நவீனரக நெல் பயிரிடப்படும் வயல்களிலிருந்து வெளிப்படும் மீதேன் வாயுவும் தொடர்ந்து ஓசோன் மண்டலத்தை ஓட்டையாக்கி வருகின்றன.

உயிரியல் சூழலையும் சுற்றுச் சூழலையும் காக்கும் முக்கிய உறுப்பாக, பூமியின் நுரையீரலாக இயங்குவது காடுகள் ஆகும். கார்பன் டை ஆக்சைடை'யும், இதர கேடு விளைவிக்கும் வாயுக்களையும் உறிஞ்சி காற்று மண்டலத்தைச் சுத்திகரிப்பவை காடுகள்தான். ஆனால் கடந்த 50 ஆண்டுகளில் உலகின் மொத்த காடுகளின் பரப்பளவு 25% குறைந்துவிட்டது. விறகுக்காக மக்கள் காடுகளை வெட்டி அழித்து வருவதாக அரசும், பத்திரிகைகளும் ஓயாமல் பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் ஏகாதிபத்தியங்கள் - தரகுப் பெருமுதலாளிகளின் செயற்கை இழை ஆலைகளுக்காகவும், காகித உற்பத்திக்காகவும் பெருமளவில் காடுகள் அழிக்கப்பட்டு அங்கு பணப்பயிராக ரப்பர் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இதேபோல காபி-டீ எஸ்டேட்டுகளுக்காகவும் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள வெப்ப மண்டலக் காடுகள்தான் உலகில் பெரியதும் வளமிக்கதும் ஆகும். உலகில் பருவந் தவறாமல் மழை பெய்யவும், காற்றினால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்கவும் முக்கிய ஆதாரமாக இருப்பவை இக் காடுகள்தான். வேப்ப மரம் போன்ற இயற்கையான கிருமி நாசினிகளையும், பயிர்களுக்கு எதிரியான புழு, பூச்சிகளை அழிக்கக்கூடிய அரிய பறவையினங்களையும் கொண்டவை இக்காடுகள்தான். ஆனால் வரைமுறையின்றி இக்காடுகள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருவதால் உயிரியல் சூழல் நாசமாக்கப்படுகிறது.

மேலும், இயற்கை உரங்களுக்குப் பதிலாக செயற்கை உரங்களை அதிக அளவில் பயன்படுத்துவதால் நிலம் படிப்படியாக நஞ்சாவதோடு, அதனால் புதிய வகை பூச்சிகளும் நோய்களும் பரவி சுற்றுச் சூழலைப் பாதிக்கின்றன. குறுகிய கால சாகுபடியில் பயிரிடப்படும் சிலவகை நெல் விளைநிலங்கள் மீதேன் எனும் நச்சு வாயுவை அதிக அளவில் வெளிப்படுத்துகின்றன. தானிய உற்பத்திக்காக அல்லாமல் பணப்பயிர் உற்பத்திக்காக விவசாயம் மாற்றப்பட்டு வருவதால், இத்தகைய நவீன வகை விவசாயத்திற்காக நிலத்தடி நீர் வரைமுறையின்றி உறிஞ்சப்பட்டு அதனால் குடிநீர் பஞ்சமும், வறட்சியும் பெருகி மக்களும் சுற்றுச் சூழலும் பாதிக்கப்படுகிறது.

பின் விளைவுகளைப் பற்றி ஆராயாமல், லாப வெறிக்காகவும் போர் வெறிக்காகவும் உற்பத்தி செய்யப்படும் பலவித பொருட்களால் சுற்றுச் சூழலும் உயிரியல் சூழலும் கடுமையாக பாதிக்கப்படுகிறது. உதாரணமாக, அணு உலைக் கழிவுகளையும், சில ரசாயனக் கழிவுகளையும் அவற்றின் நச்சுத் தன்மையைப் போக்கி முற்றாக அழித்துவிட முடியாது. இக் கழிவுகளின் நச்சுத் தன்மையைப் போக்க கோடிக்கணக்கில் செலவிட வேண்டியிருப்பதால், பல நிறுவனங்கள் இவற்றை ரகசியமாகக் கடலில் கொட்டுவதாலும், பூமியில் புதைப்பதாலும் சுற்றுச் சூழலே நஞ்சாகிப் போவதோடு, இனம் புரியாத பல கொடிய நோய்கள் தாக்கி மனித இனமும் பயிர்களும் மீன்களும் அழிகின்றன.



சிமெண்ட் ஆலைகளிலிருந்து வெளியேறும் நச்சுப் புகையை நீர் உருளைகளின் ஊடே செலுத்தி சில ரசாயன மாற்றங்களுக்குப் பிறகு அதன் நச்சுத் தன்மையைப் போக்கிய பின்னரே வெளியேற்ற வேண்டும். இதற்குச் சில லட்சங்களே செலவிட வேண்டியிருந்தும், எந்த சிமெண்ட ஆலையும் இவ்வாறு செய்வதில்லை. இதனால் சிமெண்ட் ஆலை அமைந்துள்ள பகுதியில், தூசு படிந்து பயிர்கள் பாழாகின்றன. குடிநீர் நஞ்சாகிறது. இப்பகுதிவாழ் மக்களை காசநோயும், புற்று நோயும் தொற்றிக் கொள்கிறது. இதே போல தோல் பதனிடும் ஆலைகளிலிருந்து வெளியேறும் நச்சுக் கழிவு நீரினால், நிலமும் நீரும் நஞ்சாகி, இப்பகுதியில் வாழும் மக்களை தோல் வியாதிகளும் புற்று நோயும் தாக்குகிறது. தமிழகத்தின் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூர், வாணியம்பாடி மக்கள் நீண்ட காலமாக இக்கொடுமையை அனுபவித்து வருகிறார்கள்.

இன்று பெருமளவில் உற்பத்தி செய்து குவிக்கப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மனித இனத்துக்கும் சுற்றுச் சூழலுக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறிவிட்டது. அணுக் கழிவுகளைப் போல பிளாஸ்டிக் பொருட்களை முற்றாக அழித்துவிட முடியாது. மறு உருவாக்கம்தான் செய்ய முடியும். வேறு பொருளாக மாற்றவும் முடியாது. மண்ணில் புதைத்தாலும் பல ஆண்டுகளானாலும் மக்கி அழிந்து அதன் தன்மை மாறாது. நிலத்தையும் நஞ்சாக்கிவிடும். எரித்தாலும் முற்றாக அழியாது. காற்று மண்டலத்தையே நஞ்சாக்கிவிடும்.

1971-ம் ஆண்டு சந்திரனுக்கு "அப்போலோ" விண்கலத்தில் சென்ற எட்கர் மிச்செல் என்ற அமெரிக்க விண்வெளி வீரர், அங்கிருந்து பூமியைப் பார்த்தபோது அது ஒளிரும் ரத்தினக் கல்லைப் போல அழகாகக் காட்சியளித்தது: அதன் மேற்பரப்பில் வெண்மேகம் போல மெல்லிய திரை (ஓசோன் வாயு மண்டலம்) தெரிந்தது என்றார். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மிச்செல் விண்கலத்தில் சென்று பூமியைப் பார்த்தால் அது வேறு விதமாகத்தான் தெரியும். ஒளிரும் ரத்தினக் கல்லாக இருந்த பூமியின் சுற்றுச் சூழல் இன்று அவருக்கு இருண்ட புகை மண்டலமாகத்தான் தோற்றமளிக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அச்சுறுத்தும் அணு ஆயுதப் போர்கள், போதை மருந்து வியாபாரம், எயிட்ஸ், மா.ஃபியா கும்பல்களின் கள்ள ஆயுத வியாபாரம், உலக வங்கியின் கடன் சுமை, பஞ்சம் - பசி - பட்டினிச் சாவுகள் — இவை எல்லா

படிப்பகம்

www.padippakam.com



ஆலைகளில் காற்று மண்டலம் நஞ்சாக்கப்படுவதை சித்தரிக்கும் ஆஸதிரிய நாட்டு மான்ஃபிரெட் பில்லிக் வரைந்த ஓவியம். புது டில்லியில் நடந்த போட்டியில் ஆண்டுப் பரிசு பெற்றது.

வற்றையும் விஞ்சும் வண்ணம் சுற்றுச் சூழல் பாதிப்பு எனும் பேரபாயம் இன்று உலகைக் கவ்விக் கொண்டுள்ளது. நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அதிர்ச்சியும் பீதியும் ஊட்டக்கூடியதாக அதன் விளைவுகள் கோரமானதாக உள்ளது.

கடந்த 150 ஆண்டுகளைவிட 1980-ம் ஆண்டுகளின் இறுதியில் கோடைக்கால வெப்பம் மிகக் கடுமையாக இருந்தது. கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் கார்பன் டை ஆக்சைடின் அளவு 26% உயர்ந்ததே இதற்குக் காரணம். இதன் விளைவாக இமய மலையின் பனி உருகுவது அதிகரித்து வெள்ளம் பெருகி இந்தியாவையும் வங்க தேசத்தையும் ஆண்டுதோறும் தாக்கிவருகிறது. கடந்த 25 ஆண்டுகளுக்குள் பூமியின் வெப்பம் 2 டிகிரி உயர்ந்துள்ளதன் காரணமாக கடல் நீர்மட்டம் உயர்வதும், அலைகளின் சீற்றம் அதிகரித்தும் உலகின் பல நாடுகளை புயல் தாக்கி அழிப்பதும் வாடிக்கையாகிவிட்டது. பூமியின் வெப்பம் அதிகரிப்பதன் விளைவாக,

★ வட அமெரிக்கா மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள பாசனப் பகுதிகள் இன்னும் 20 ஆண்டுகளில் பாலைவனமாகிவிடும்.
★ மாலத் தீவு நாட்டின் பெரிய நிலப் பகுதி இன்னும் 10 ஆண்டுகளில் கடலால் விழுங்கப்பட்டுவிடும்.
★ இந்தியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதி முழுவதும் வருமாண்டுகளில் புயலும் வெள்ளமும் தாக்கி பயிரிடும் நிலங்களை மணல் மூடிவிடும்.
★ இன்னும் 20 ஆண்டுகளில் ஆப்பிரிக்க கண்டமே பாலைவனப் பகுதியாகிவிடும்.
★ இனம் புரியாத புதிய வகை பூச்சிகளும், நோய்களும் ஏழை நாடுகளின் மக்களையும் பயிர்களையும் இன்னும் 10 ஆண்டுகளில் தாக்கி அழிக்கும்.
★ பூமியின் வெப்பம் அதிகரித்து உலகின் பல பகுதிகளில் - குறிப்பாக ஜப்பானில் எரிமலைகள் வெடித்துக் கிளம்பும்.

— இப்படிப் பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை சுற்றுச் சூழல் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். பஞ்சம், பட்டினி, வறட்சி - வெள்ளம் முதலானவை சுற்றுச் சூழல் பாதிப்பின் ஒரு அம்சம்தான்; அதைவிட கொடூரமாக இனம் புரியாத நோய்கள் தாக்குவதும், விவசாயமே நாசமாகி, மனித குலமே அழிந்து போவதும்தான் மிக முக்கியமானவை என்று அவர்கள் எச்சரிக்கிறார்கள். இத்தகைய கோரமான விளைவுகளை ஏற்படுத்தும் சுற்றுச் சூழல் பாதிப்புக்கு யார் காரணம்?

உலகின் மொத்த மக்கட் தொகையில் 4.73% கொண்ட அமெரிக்கா, 26% கார்பன் டை ஆக்சைடையும், 20% மீதேன் வாயுவையும் நச்சுக் கழிவாக வெளியேற்றுகிறது. இரண்டாவது மூன்றாவது இடத்தில் ரஷிய ஒன்றியமும், பிற ஐரோப்பிய நாடுகளும் உள்ளன. குளோரோஃப்ளோரோ கார்பன் நச்சுக்கழிவுக்குக் காரணமான குளிர்சாதனப் பெட்டிகளில் 35%ஐ அமெரிக்கா மட்டுமே பயன்படுத்துகிறது. ஐரோப்பிய நாடுகள் மொத்த குளிர்சாதனப் பெட்டிகளில் 38%ஐப் பயன்படுத்துகின்றன. உலக மக்கட் தொகையில் 24%ஐக் கொண்ட தொழில் வளர்ச்சியடைந்த நாடுகள் 70-லிருந்து 90% உற்பத்திப் பொருட்களைப் பாவிக்கின்றன. மொத்த எரிசக்தியில் 75%ஐ உறிஞ்சும் இந் நாடுகளிலிருந்துதான் 75% கார்பன் டை ஆக்சைடு வெளியாகிறது. ஆனால் இந்தியா போன்ற ஏழை நாடுகள் சுற்றுச் சூழலைப் பாதிப்பதில் கடைசி வரிசையில்தான் இருக்கின்றன. இன்னமும் ஏழை நாடுகள் இயற்கையைச் சார்ந்த விவசாய உற்பத்தி முறையைக் கொண்டவையாகவே உள்ளன. இந்நாடுகளின் தொழில் வளர்ச்சி ஆண்டுக்கு 5%ஐக்கூட தாண்ட முடியாமல் தடுமாறி நிற்கின்றன.

*பின் விளைவுகளைப் பற்றி ஆராயாமல் லாப வெறிக்காகவும் போர் வெறிக்காகவும் ஏகாதிபத்தியங்களால் உற்பத்தி செய்யப்படும் பலவித நச்சுப் பொருட்களால் சுற்றுச் சூழலும் உயிரியல் சூழலும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. ஆனால், அதன் பாதிப்பைத் தாங்கிக் கொண்ட ஏழை நாடுகள்தான் அதைச் சரிசெய்வதற்கான பொருளாதார சுமைகளையும் ஏற்கவேண்டுமென ஏகாதிபத்தியங்கள் நிர்ப்பந்திக்கின்றன.*

வெளியுலகுக்குத் தெரிந்த இத்தகைய பேரழிவுகளை ஏகாதிபத்திய நாடுகள் செய்துவரும் அதே சமயம், இரகசியமான முறையில் இரசாயனக் கழிவுகளையும், அணு உலைக் கழிவுகளையும் உலகின் பல பகுதிகளில் கொட்டிப் பேரழிவை ஏற்படுத்தி வருகின்றன. பல ஆப்பிரிக்க ஏழை நாடுகளில் கொட்டப்பட்ட ரசாயனக் கழிவுகளால் அந் நாடுகளின் விளை விலங்கள் பாழ்பட்டுப் போனதோடு, கொடிய நோய்கள் தாக்கி ஆயிரக்கணக்கில் மக்கள் மடிந்து வருகிறார்கள். இந்துமாக் கடலில் கொட்டப்படும் நச்சுக் கழிவுகளால் கடல்.நீரே நஞ்சாகி கூட்டம் கூட்டமாக மீன்கள் செத்து மிதக்கின்றன. இத்தகைய நச்சுக் கழிவுகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களைப் பின் தொடர்ந்து சென்று அம்பலப்படுத்தியதற்காக பசுமை அமைதி இயக்கத்தின் படகுகள் மீதே குண்டுவீசித் தாக்குமளவுக்கு ஏகாதிபத்திய மாஃபியா கும்பலின் அட்டூழியம் பெருகிவிட்டது.

இருப்பினும், ஏழை நாடுகள்தான் சுற்றுச் சூழலை கடுமையாக அழித்து வருவதாக ஏகாதிபத்திய நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. தமது நாட்டில் சுற்றுச் சூழல் பாதிப்பு இருந்தாலும், கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கி மாற்று ஏற்பாடுகள் மூலம் அதனை சரிசெய்து வருவதாகவும், ஆனால் ஏழை நாடுகள் பொறுப்பின்றி நடந்து கொண்டு சுற்றுச் சூழலைப் பாதித்து வருவதாகவும் பழியைப் போடுகின்றன. உலகை அச்சுறுத்தும் அபாயமாக வளர்ந்துவிட்ட சுற்றுச் சூழல் பாதிப்பை சீரமைக்க ஏழை நாடுகள் கணிசமான நிதி ஒதுக்க வேண்டும் என்றும் கோருகின்றன. சாப்பாடு எனக்கு; மலம் உனக்கு என இதுநாள்வரை ஏகாதிபத்தியங்களால் ஏற்பட்ட சுற்றுச் சூழல் பாதிப்பை ஏழை நாடுகள் தாங்கிக் கொண்டது போதாது என்று இப்போது அதன் பொருளாதாரச் சுமையையும் தாங்க வேண்டும் என ஏகாதிபத்தியங்கள் நிதியையும் கோருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், அண்மையில் நடந்து முடிந்துள்ள புவி பாதுகாப்பு உச்சி மாநாட்டின் முடிவுகள் என்ன? சுற்றுச் சூழலை அழிப்பதில் இந்தியாவின் பங்கு என்ன? சுற்றுச் சூழல் பாதுகாப்பு பற்றிய நமது கண்ணோட்டம் என்ன? முதலானவற்றைப் பற்றி வருமிதழில் பார்ப்போம்.

www.padippakam.com

# ஜெயா அதிகார போதை அடக்குமுறை வெல்லாது

அரசின் கொள்கைகள் - திட்டங்களுக்கு எதிரான - மாறான கருத்துக்களைத் தெரிவித்து, மக்களின் அதிருப்திக்கு வடிகாலாக எதிர்க் கட்சிகளைச் செயல்பட அனுமதிப்பதுதான் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சிறப்பு என்கிறார்கள் ஆளும் வர்க்க அறிவு ஜீவிகள். ஆனால் ஜனநாயகம் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் ஜெயா கும்பல், வரம்புக்குட்பட்ட இந்த ஜனநாயக உரிமையைக்கூட மறுத்து சர்வாதிகார சதிராட்டம் போடுகிறது. சட்ட மன்றத்தில் அதிகாரபூர்வ எதிர்க் கட்சியான காங்கிரசு, கொத்தடிமையாகிவிட்ட நிலையில் எஞ்சியிருக்கும் இதர எதிர்க் கட்சியினர் ஏழுபேர் தான். அவர்களையும் எதையும் பேசவிடாமல் வாயடைத்தும், மீறினால் தாக்குவது அல்லது வெளியே தூக்கி வீசுவதும்தான் அதன் நடவடிக்கையாக உள்ளது.

ஜெயா அரசு, அண்மையில் விவசாய பம்பு செட்டுகளுக்கு கருணாநிதி ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட இலவச மின்சாரத்தை ரத்து செய்தது. இத்திட்டத்தின் மூலம் பணக்கார விவசாயிகள் ஆதாயமடைவதாகவும் இதனால் அரசுக்கு ஆண்டுக்கு 55 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும் நியாய வாதங்களைக் கூறியது. ஏற்கனவே விலைவாசி ஏற்றத்தாலும், மத்திய அரசின் உரவிலை உயர்வு, மானியக் குறைப்பினாலும், காவிரியில் நீரின்றியும் தவிக்கும் விவசாயிகள் ஜெயா அரசின் அறிவிப்பைக் கண்டு ஆத்திரமடைந்தனர். விவசாயிக்கு விரோதமான இம்முடிவை ரத்து செய்யக்கோரி தி.மு.க.வினர் மாட்டு வண்டி, டிராக்டர் பேரணியும், பா.ம.க.வினர் தாலுகா அலுவலகம் முன்பு தூக்கு கயிறு மாட்டிக் கொண்டு ஆர்ப்பாட்டமும் நடத்தப் போவதாக அறிவித்தனர்.

ஆத்திரமடைந்த ஜெயா அரசு, ஜூன் 13 அன்று மாட்டு வண்டி பேரணி நடத்த முற்பட்ட தி.மு.க. வினரைக் கைது செய்து சிறையிலடைத்தது. திருச்சியில் பேரணி நடத்த போலீசார் அனுமதியளிக்க மறுத்ததை எதிர்த்து மறியல் செய்த தி.மு.க.வினர் மீது தடியடி நடத்தியது. அதைத் தொடர்ந்து ஜூன் 15 அன்று பா.ம.க.வினர் ஏர் - கலப்பையுடன் கழுத்தில் தூக்குக் கயிறு மாட்டிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டபோது, பா.ம.க தலைவர் உட்பட தமிழகம் முழுவதும் ஏழாயிரம் பேர் கைது செய்யப்பட்டு 15 நாட்கள் காவலில் வைக்க உத்திரவிடப்பட்டனர். கழுத்தில் தூக்குக் கயிறு மாட்டிக் கொண்டு அவர்கள் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்ததால் கைது செய்து சிறையிலடைத்ததாக போலீசு விளக்கமளித்தது.

எதிர்க் கட்சிகளின் போராட்டத்தை ஒட்டி ஆயிரக்கணக்கானோரைக் கைது செய்ததோடு, ஜூன் 16 அன்று நடைபெற்ற தொழிற்சங்கங்களின் நாடுதழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தை ஒட்டி ஏறத்தாழ 25,000 பேரைப் போலீசு கைது செய்து சிறையிலடைத்தது: இதனால் சென்னை முதல் பாளையங்கோட்டை வரை சிறைச்சாலைகள் பிதுங்கி வழிந்தன. கைது செய்யப்பட்டோரை அடைத்து வைக்க இடமின்றி கொளுத்தும் வெயிலில், வெட்ட வெளியில் அவர்களை வாட்டிய அரசு, உணவும் நீரும் கூட கொடுக்காமல் வதைத்தது. இக் கொடுமையை எதிர்த்து சேலம், வேலூர் சிறைகளில் போராடியோர் மீது போலீசார் ஜெயிலர்களையும் 'கன்விக்ட்' வார்டர்களையும் ஏவி மிருகத்தனமான தாக்குதல் நடத்திப் பலரது மண்டையைப் பிளந்தனர்.

அரசியல் கைதிகளுக்கே இந்த கதி என்றால், 'தடா' கைதிகளின் கதியைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. அரசியல் பழிவாங்கும் வெறியோடு, பத்மநாபா கொலை வழக்கில் முடிச்சுப் போட்டு தடாவில் கைது செய்யப்பட்ட தி.மு.க. முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமியும் அவரது கணவரும் கிரிமினல்களைப் போல கைவிலங்கிடப்பட்டே கோர்ட்டுக்கு கொண்டு வரப்படுகின்றனர். ஜெகதீசனுக்கு உடல் நலக் குறைவு காரணமாக மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, சிகிக்சை முடிவதற்கு முன்னரே மீண்டும் அவர் சிறையிடப்பட்டார். மேலும், அரசியல் சட்டத்திற்கே எதிரான வகையில், தடா கைதிகளின் ரத்த உறவுடைய உறவினர்கள் தவிர மற்றவர்கள் சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதே 'தடா' சட்டத்தில் கைது செய்யப்பட்ட முன்னாள் உள்துறை செயலர் நாகராஜனுக்கு மருத்துவமனையில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டதோடு, உறவினர்கள் மட்டுமின்றி நண்பர்களும் ஏன் பத்திரிகையாளர்கள்கூட சந்தித்துப் பேட்டி காணவும் அனுமதிக்கப்பட்டது. காரணம், அவர் ஜெயா அரசுக்கு சாதகமாக அப்ரூவராகிவிட்டார் என்பதுதான். அதனால்தான் நாகராஜனுக்கு ஒரு சட்டம்; சுப்புலட்சுமி - ஜெகதீசனுக்கு ஒரு சட்டம் என்றும் ஆட்டம் போடுகிறது ஜெயா கும்பல்.

எதிர்த்தரப்பே கூடாது; தன்னை யாருமே விமர்சிக்கக்கூடாது என்று அதிகார போதை தலைக்கேறி சுவரொட்டி ஒட்டினால், தட்டி - போர்டுகள் வைத்தால் ஓராண்டு சிறைத் தண்டனையும் ரூ.5000 அபராதமும் விதிக்கும் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. கருத்துரிமை - எழுத்துரிமையைப் பறிக்கும் இத்தகைய கொடூர சட்டம் பிரிட்டிஷாரின் காலனியாதிக்க ஆட்சியிலோ, இந்திராவின் அவசர நிலை பாசிச ஆட்சியிலோகூட கொண்டுவரப்படாத கருப்புச் சட்டமாகும். நகரங்களின் அழகைக் காக்கவே இந்த அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளதாகக் கூறும் ஜெயா அரசு அதன் மூலம் எதிர்க் கட்சிகளின் பிரச்சாரத்தை முடக்கிவிடத் துடிக்கிறது.

விவசாயிகளுக்கு மீண்டும் இலவச மின்சாரம் வழங்காவிட்டால், ஜூன் இறுதியில் மதுரையில் நடைபெற உள்ள அ.தி.மு.க. மாநாட்டுக்கு எதிராக தமிழகம் முழுவதும் சாலை மறியல் போராட்டத்தில் இறங்கப் போவதாக, பா.ம.க. எச்சரித்ததாலும், அடுத்தகட்ட போராட்டத்துக்கு தி.மு.க ஆயத்தம் செய்ததாலும் பீதியடைந்த ஜெயா அரசு, விவசாய சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நாடகம் நடத்திவிட்டு மீண்டும் இலவச மின்சாரம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. சாதாரணமாகவே அகங்காரமும், வக்கிரமும், பேராசையும் கொண்ட ஜெயா கும்பலுக்கு, கொத்தடிமைக் கூடாரமாக சட்டமன்றமும், துதிபாடும் அதிகார வர்க்கப் பார்ப்பன கும்பலும், கட்சிக் குண்டர் படையும், பெரு முதலாளிகளின் ஆதரவும் பலமாக உள்ளதால் அது ஏற்றுக் கொண்டுள்ள நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கூட மதித்து நடக்காது. சட்டபூர்வ ஜனநாயக உரிமைகளைக்கூட காலில் போட்டு மிதித்து அராஜக ஆட்டம் போடும் ஜெயா கும்பலை சட்டபூர்வ, நாடாளுமன்ற ஜனநாயக வழிமுறைகளின் மூலம் மட்டும் வீழ்த்திட முடியாது. சட்டமன்ற வழிமுறைகளுக்கு அப்பாற்பட்ட, சக்திவாய்ந்த மக்கள்திரள் பரட்சிப் போராட்டங்களின் மூலமே அதனை வீழ்த்திட முடியும். குமுறிக் கொண்டிருக்கும் தமிழக மக்கள் புரட்சிகர அமைப்புகளில் திரண்டு எரிமலையாய் கிளர்ந்தெழுவதன் மூலமே இதனை சாதிக்க முடியும்.

● குணசேகரன்

பா.ம.க. நடத்திய தூக்குக் கயிறு போராட்டம்



www.padippakam.com

# தலித் தலைவர்களின் தப்புக் கணக்கு

புது டில்லியின் அதிகாரத் தாழ்வாரங்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் பெயராலான குரல் ஓங்கி ஒலிக்கத் துவங்கியிருக்கிறது.

காங்கிரசு, பாரதீய ஜனதா, ஜனதா தளம் உட்பட எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த தாழ்த்தப்பட்ட, பழங்குடிப் பிரிவு எம்.பி-க்கள் 106 பேர் இணைந்து ''நாடாளுமன்ற தாழ்த்தப்பட்ட, பழங்குடி எம்.பி-க்கள் பேரவை'' என்கிற ஓர் அமைப்பை நிறுவி ஊக்கமாகச் செயல்படுகின்றனர். போலிக் கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான 'இடதுசாரிகள்' மட்டும் இந்தப் பேரவையில் கலந்து கொள்ளவில்லை.

''சமூகத்தின் நலனுக்காகப் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலித் தலைவர்களும் ஐக்கியப்பட வேண்டும் என்று 40 ஆண்டுகளாகக் கூறி வருகிறேன். இப்போதாவது நடக்கிறதே'' என்று மகிழ்வோடு கூறுகிறார் காங்கிரசின் முன்னாள் மத்திய மந்திரி பி.பி. மௌரியா.

1960களில் அன்றைய மத்திய மந்திரி டி.சஞ்சீவையா, ''தாழ்த்தப்பட்ட, பழங்குடி எம்.பி.களின் பேரவை''யை அமைத்தார். ஆனால் அது செயலூக்கம் பெறாமலேயே இருந்தது.

கடந்த ஆண்டு பார்ப்பன அரசுத் தலைவர் வெங்கடராமன் தாழ்த்தப்பட்ட, பழங்குடி எம்.பி.களின் சுயமரியாதையையே அவமதிக்கும் வகையில் நடந்துகொண்ட சம்பவம் அவர்களது நியாயமான கோபத்தைத் தூண்டி, இப்பேரவைக்கு உயிரூட்டியது.

ஆந்திர மாநிலம் சுண்டூரில் தாழ்த்தப்பட்டோர் மீதான படுகொலை உட்பட பரவலாக நாடெங்கும் நடக்கும் கொடுமைகளைப் பற்றி தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கான தேசியக் கமிசன் அறிக்கை வெளியிட்டிருந்தது. அதன் அடிப்படையில் அக்கொடுமைகளை உடனே தடுத்து நிறுத்தும்படியும் நிலச் சீர்திருத்தத்தை அமலாக்கும்படியும் ஒரு கோரிக்கை மனு எழுதி, எடுத்துக் கொண்டு நூறுக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட, பழங்குடி எம்.பி.கள் அரசுத் தலைவர் மாளிகைக்கு பேரணியாகப் போனார்கள்.

மாதம் தவறாமல் அரசுச் செலவில் காஞ்சிக்குப் போய் சங்கராச்சாரி காலில் விழும் பார்ப்பன வெங்கடராமன் தாழ்த்தப்பட்ட, பழங்குடி எம்.பி.கள் அனைவரையும் சந்தித்து மனுவைப் பெறமுடியாது. அது அரசுத் தலைவர் மாளிகைப் பாதுகாப்பு விதிக்கு முரணானது; நான்கு பேரைக் கொண்ட பிரதிநிதிக் குழுவைத்தான் சந்திக்க முடியும் என்று கூறிவிட்டார்.

விழா, விருந்து என்று நூற்றுக்கணக்கானோர் அரசுத் தலைவர் மாளிகையிலேயே கூடி கூத்தடிக்கும்போது வராத ஆபத்து நூறு எம்.பி.களை அனுமதித்தால் மட்டும் வந்து விடுமா? சாதாரணமாக அரசுத் தலைவரே வெளியில் வந்து எதிர்கொண்டு அழைத்துப் போயிருக்க வேண்டும். ஜெயில்சிங் கூட இப்படிச் செய்துள்ளார். ஆனால் உச்சபட்ச பதவியை அடைந்துவிட்ட, நன்றிகொன்ற பார்ப்பனத் திமிர் காரணமாகத் தாழ்த்தப்பட்ட, பழங்குடி எம்.பி.களைப் பாதுகாப்பு, மரபு எனச் சாக்குவைத்து அவமதித்தார், வெங்கடராமன்.

''இதனால் நாங்கள் பெருமளவில் அதிருப்தி அடைந்தோம். அவர் எங்களிடம் அலட்சியமாகவும் அவமரியாதையாகவும் மட்டும் நடந்து கொள்ளவில்லை. நாங்கள் கீழானவர்கள் என்பதைக் காட்டுவதாகவே இருந்தது. அப்போதுதான் அடுத்த அரசுத் தலைவர் தேர்தல்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி வேட்பாளரை நிறுத்தும்படி நிர்பந்திப்பது என்று ஒருமனதாகத் தீர்மானித்தோம்,'' என்கிறார் முன்னாள் உள்துறை மந்திரி பூடாசிங்.

ஏப்ரல் 2-ந் தேதி கூடிய பேரவை, அரசுத் தலைவர் தேர்தலில் தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியைச் சேர்ந்தவரை நிறுத்த வேண்டும் என்று அரசியல் கட்சிகளைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தையும் நிறைவேற்றியது. அதற்கான பிரச்சாரத்திலும் தீவிரமாக இறங்கியது. நாட்டின் பல இடங்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதோடு உண்மை அறியும் குழுக்களையும் அனுப்புகிறது.

ஜூன் 16-17 தேதிகளில் அனைத்து மாநில, அனைத்துக் கட்சி முன்னாள், இன்னாள் எம்.பி, எம்.எல்.ஏ, எம்.எல்.சி.கள் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்றைப் புது டில்லியில் வெற்றிகரமாக நடத்தியது.

> *இந்தத் தலைவர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டாக இன்னொரு ஜெகஜீவன்ராமாகத்தான் செயல்படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் மிகப் பெரிய சீர்திருத்தவாதியாக இன்னொரு அம்பேத்காராகக்கூட இவர்களால் உருவாக முடியாது. ஏனென்றால் இவர்கள் சுயமரியாதையும் சுய சிந்தனையும் உடையவர்கள் அல்ல.*

சந்தை அடிப்படையிலான புதிய பொருளாதாரக் கொள்கை தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு எதிரானது; தனியாரிடம் ஒப்படைக்கப்படும் பொதுத்துறை ஆலைகளிலும் இட ஒதுக்கீடு வேண்டும்; இம்மக்களுக்கு எதிரான சமூகக் கொடுமைகளை உடனே நிறுத்த வேண்டும்; அவற்றை விசாரித்துக் குற்றவாளிகளைத் தண்டிக்க தனி சமூக நீதி மன்றங்கள் நிறுவ வேண்டும்; நிலச் சீர்திருத்தத்தை அமலாக்கிட வேண்டும்; அரசுத் தலைவர் பதவிக்கு ஒரு தாழ்த்தப்பட்டவரையோ, பழங்குடியினரையோ தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது போன்ற தீர்மானங்களை ஜூன் 16-17 மாநாடு நிறைவேற்றியுள்ளது.

தலித் எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்களிடையே வளர்ந்துவரும் ஒற்றுமையும், பலமும் காரணமாக அவர்களை எந்த அரசியல் கட்சியும் புறக்கணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பதவி ஆசை காட்டிப் பிழைப்புவாதிகளை முன்னிறுத்தித் தம் பக்கம் இழுப்பதற்கு காங்கிரசும், பாரதீய ஜனதாவும் முயலுகின்றன. திருப்பதி காங்கிரசு மாநாட்டில் நடந்த செயற்குழு தேர்தல்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் எவருமே தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று பிரதமர் அங்கலாய்த்துக் கொண்டது இந்த வகையிலானதுதான். ஜனதா தளமோ சமூக நீதி என்கிற ஆசைகாட்டித் தலித்களை இழுக்க முயலுகிறது. தலித்களின் ஏகபிரதிநிதி என உரிமை பாராட்டிக் கொள்ளும் பகுஜன் சமாஜ் கட்சிக்கு இந்தப் பேரவையில் அவ்வளவு நம்பிக்கை கிடையாது. ''வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த வேறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்டவர்களின் இந்தமாதிரியான பேரவை எப்படி வெற்றிகரமாக செயல்பட முடியும்? மேலும் இந்த எம்.பி.கள் தமது மேல்சாதித் தலைவர்களுக்கு எதிராக கலகம் செய்யத் துணிவார்களா?'' என்று கேட்கிறார், ப.ச.கட்சி எம்.பி. மாயாவதி.

''அரசியல் கட்சிகள் திடீரென்று இப்போது தலித் அரசுத் தலைவரைப் பற்றிப் பேசுகின்றன. ஐந்தாண்டுகளுக்கு முன்பு அம்பேத்கார் பெயரைச் சொல்லுவதற்குக் கூட இவர்கள் தயாராக இல்லை! ஏனென்றால் தலித் ஓட்டு வங்கி அப்போது காங்கிரசுக்குக் கட்டுப்பட்டு இருந்தது. இப்போது தலித்துக்கள் இந்த நாட்டின் பூர்வ குடிகள், இந்த நாட்டை ஆளும் உரிமை உடையவர்கள் என்பதை உணர்ந்து கொண்டார்கள். தலித்களது ஐக்கியம் தமது நலனைப் பாதிக்கும் என்பதால் அந்தக் கட்சிகள் அம்பேத்


படிப்பகம்

www.padippakam.com

கார் மீதும், அவரது கொள்கைகள் மீதும் அக்கறை காட்டுகின்றன'' என்று சாடுகிறார் மாயாவதி.

''சாதி அரசியலில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை, இந்து ராஷ்டிரத்தில் தலித்துக்களின் கனவு நிறைவேறும். பூடாசிங் போன்ற காங்கிரசுத் தலைவர்கள் மந்திரி பதவி பெறுவதற்காக அரசை நிர்பந்திக்கும் நோக்கத்தில் இந்தப் பேரவையில் அக்கறை காட்டுகின்றனர்'' - இப்படி எதிரான கருத்துச் சொன்னாலும் கல்காதாஸ், சர்வப் பிரிய கௌதம் போன்ற பாரதீய ஜனதா தலைவர்கள் தனிமைபட்டுப் போய்விடும் பயம் காரணமாக பேரவையில் பங்கேற்கின்றனர்.

ஆனால் தலித் ஓட்டு வங்கியை இழந்து விட்ட காங்கிரசு எம்.பி.கள் இதை மறுக்கின்றனர். ''இந்தப் பேரவையில் திரளுவதற்கு அரசியல் காரணம் எதுவுமே கிடையாது. பிரச்சினைகளின் அடிப்படையிலும் எங்கள் மக்கள் மீதுள்ள உண்மையான அக்கறையின் காரணமாகவும்தான் ஒரு குடையின் கீழ் இணைந்துள்ளோம்'' என்கிறார், காங்கிரசு எம்.பி.முகுல் வாசுனிக்.

''இந்தச் சமூகத்துக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், சமூகப் பொருளாதார அநீதிகள் என்று நாடாளுமன்றத்தில் எழுப்பப்படாத பிரச்சினைகளை இந்தப் பேரவை எழுப்பும்'' என்கிறார், அதன் அமைப்பாளரும் காங்கிரசு எம்.பி.யுமான அரவிந்த் நேதம்.

இவர்களுடன் இணைந்து இந்தப் பேரவையில் ஊக்கமுடன் செயல்படுபவர் ஜனதா தளத்தின் துணைத் தலைவர் ராம் விலாஸ் பஸ்வான். ஆனால் இவர்களிடமிருந்து மாறுபட்ட வகையில் நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் காரியமாற்றி வருவதாகத் தெரிகிறது.

''கல்வி மற்றும் ஒரு சமூக விழிப்புணர்வு ஆகியவை காரணமாக இன்றைய தலித்துக்களின் ஆதார உரிமைகளுக்கே அவசியமாகிய சமத்துவத்தை அவர்கள் அடைவதற்கு முயலுகிறார்கள். கடந்த காலத்தில் அவர்கள் தலைவிதியே என்று தமக்குத்தாமே சமாதானம், சமரசம் செய்து கொண்டதைப் போல இனிமேலும் எந்த மூடத்தனத்தையும் அவர்கள் ஏற்க விரும்பவில்லை'' என்று இந்த தலித் ''எழுச்சிக்கு'' விளக்கமளிக்கிறார், பஸ்வான்.

வி.பி.சிங், சரத்யாதவ் ஆகியோரின் கூட்டு, உதவி, கொள்கை வழிகாட்டுதலோடு தலித்துக்களின் தனிப்பெரும் தலைவராகுவதற்குத் திட்டமிட்டுச் செயல்படுபவர், பஸ்வான். நாடு முழுவதும் உள்ள 158 தலித் அமைப்புகளை ஒருங்கிணைத்து ''சமூக நீதிக்கான அனைத்திந்திய தலித் செயற்கமிட்டி'' என்கிற அமைப்பை நிறுவியுள்ளார். அம்பேத்கார் நூற்றாண்டு விழா வன்று, ஏப்ரல் 14 இல் ''நியாய தீபம்'' என்கிற பேரணி நடத்தி, அதிலேயே ஜூன் 15 முதல் சிறை நிரப்பும் போராட்டம் ஒன்றை அறிவித்துள்ளார்.

தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்டு இன்னும் நிறப்பாமல் இருக்கும் இடங்களுக்கு உடன் நியமனங்கள் செய்ய வேண்டும்; இட ஒதுக்கீடு விவகாரத்தில் குற்றமிழைக்கும் அதிகாரிகளைத் தண்டிக்கும் சட்டம் இயற்ற வேண்டும்; மனிதக் கழிவுகளைச் சுமக்கும், அகற்றும் வழக்கத்தை ஒழிக்க வேண்டும்; நிலச் சீர்திருத்தம் போன்ற மண்டல் கமிசன் பரிந்துரைகளை அமலாக்க வேண்டும் - இப்படிப் பல கோரிக்கைகளை வைத்து பஸ்வான் தலைமையிலான கூட்டமைப்பு போராடத் திட்டமிட்டுள்ளது. இந்தவகையில் மற்றபிற தலித் தலைவர்களைக் காட்டிலும் ராம் விலாஸ் பஸ்வான் ஒரடி முன்னணியில் உள்ளார் எனத் தெரிகிறது.

மொத்தத்தில் இந்தத் தலைவர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டாக இன்னொரு ஜெகஜீவன் ராமாகத் தான் செயல்படுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் மிகப் பெரிய சீர்திருத்தவாதியாகிய இன்னொரு அம்பேத்காரைக்கூட உருவாக்க முடியாது. ஏனென்றால் இவர்கள் சுயமரியாதையும், சுய சிந்தனையும் உடையவர்கள் அல்ல; தாமே தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் சமூகத்திடம் இருந்து அந்நியப்பட்ட, மேட்டுக்குடி வாழ்க்கை அமைத்துக் கொண்டதோடு அந்தந்த ஓட்டுக் கட்சியின் மேல்சாதித் தலைவர்களுக்குத்தான் விசுவாசமானவர்கள்; தமது சமூகத்தைவிட தனது சுயநலனை முன்னுக்கு நிறுத்துபவர்கள்.


இவை எல்லாவற்றையும்விட இந்த மாதிரியான அமைப்புகள், நபர்களின் இயக்கம் முக்கியமாக மேலிருந்து செய்யப்படும் மாற்றங்களால் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களது பிரச்சினைகளைத் தீர்த்துவிட முயலுகிறது. அதாவது மேல் மட்டத்திலும் அதன் மூலம் படிப்படியாகவும் பதவிகளைக் கைப்பற்றுவது, மேலிருந்து சீர்திருத்த சட்ட, திட்டங்களைப் போடுவது ஆகியவற்றின் மூலம் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் சமூகப், பொருளாதாரக் கொடுமைகள் அவலங்களை அகற்றிவிட முயலுவதாகும்.

அம்பேத்கார் காலத்துக்குச் சற்று முன்பிருந்தே மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தகைய முயற்சிகள் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களின் வாழ்க்கையில் புரட்சிகர மாற்றங்களையோ, சமூக விடுதலையையோ சாதிக்கவே இல்லை. இச் சமூகத்தில் இருந்து ஒரு பிரிவு நடுத்தர வர்க்கத்தினரையும், ஒரு சில பிழைப்புவாத, மேட்டுக் குடித் தலைவர்களையும் தோற்றுவித்து பராமரிப்பதற்கே இம் முயற்சிகள் பயன்பட்டுள்ளன.

மேல்மட்டப் பதவிகளில் பங்கீடும், சீர்திருத்த சட்ட, திட்டங்களும் இல்லையானால் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் கீழிருந்து அணிதிரண்டு அதிகாரத்தைக் கைப்பற்றும் புரட்சியில் இறங்கிவிடுவார்கள் என்று சொல்லியே, அதைக் காட்டியே இந்த பிழைப்புவாதிகள் தமது ஆதாயங்களைத் தேடிக் கொள்கின்றனர்.

● அஜித்

புது டில்லி ஜூன் 16-17 மாநாட்டில் மக்வானா, முகுல் வாசுனிக், ஷிண்டே, கே.ஆர். நாராயணன், ராம்விலாஸ் பஸ்வான்.



படிப்பகம்

www.padippakam.com




● *இன்றைய இந்தியச் சூழலில் மேல் நிலைப் பள்ளி, கல்லூரிகளில் பாலுறவுக் கல்வி தேவையா? தேவை இல்லை என்று நான் கருதுகிறேன். பிரபஞ்சன் போன்றவர்கள் இதை ஆதரிப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?*

*- கோ. அ.நசீம் இக்மத், கோவை.*

★ மேல்நிலைப் பள்ளி, கல்லூரிகளில் அறிவியல் மற்றும் மருத்துவ ரீதியிலான பாலியல் கல்வி அவசியந்தான்! இதனாலேயே இளைஞர்கள் சீரழிந்து போவார்கள் என்றோ, இன்றைய மோசமான இந்தியச் சூழலில் பாலியல் கல்வி இளைஞர்களின் சீரழிவுக்கு இன்னுமொரு காரணமாக இருந்துவிடும் என்றோ அஞ்சத் தேவையில்லை. இளைஞர்களை ஆக்கபூர்வமான பண்பாட்டு நெறிமுறையில் வழிநடத்திச் செல்லும் இயக்கங்கள், அமைப்புகளைவிட அவர்களைப் பல்வேறு வழிகளிலும் சீரழிப்பதற்கான - உடலையும் உள்ளத்தையும் மாசுபடுத்துவதற்கான நிறுவன அமைப்புகள் சக்திவாய்ந்தவையாக இருப்பது கண்டுதான் நாம் அக்கறைப்பட வேண்டும். இரகசியமாக விற்பனையாகும் பாலுறவு வக்கிரப் புத்தகங்கள், நீலத் திரைப்படங்கள்; எல்லாச் சிறு நகரங்கள், பெரு நகர்களின் புறநகர் திரையரங்குகளிலும் நீலத் திரைப்படத் துண்டுகள் ஆகியவை மலிந்துவிட்டன. பெரு நகரங்களில் ஸ்டார் டி.வி. குறிப்பாக எம்.டி.வி. நடுத்தர, மேட்டுக்குடி தொழிலாளர் வீடுகளுக்குள்ளேயே நீலத் திரைப்படக் காட்சிகளைக் கொண்டு வந்துவிட்டன. இவற்றுடன் போட்டி போட்டுக்கொண்டு பிரதான நீரோட்டத்தைச் சேர்ந்த பத்திரிகைகளும், சினிமாக்களும் பாலுறவு ஆபாசங்களை விற்பனை செய்கின்றன. கருத்தடை சாதனங்கள் வரை பல பொருட்களின் விளம்பரங்களும் இதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இவையெல்லாம் சீரழிப்பதைப் போல பாலியல் கல்வி ஒன்றும் செய்துவிடாது.

மாறாக இத்தனை சீரழிவுகளும், இவற்றோடு போலி சித்த வைத்திய வகையறாக்கள் ஏற்படுத்திவரும் பல மூடத்தனங்களும் கொடிய எயிட்ஸ் மற்றும் பல பாலுறவு நோய்களும் அதிவேகமாக பரவி வருவதும் பாலியல் கல்வியின் அவசியத்தையே வலியுறுத்துகின்றன.

வெளிநாட்டில் வாழும் ஈழத் தமிழ்த் தோழர் ஒருவர் சமீபத்தில் நமக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதில் ஒரு செய்தி: பல்வேறு நிர்பந்தங்களால் மேலை நாடுகளில் குடியேறியுள்ள ஈழத் தமிழரில் கணிசமான பேர்கள், அங்குள்ள வசதி வாய்ப்புகள், சூழல் காரணமாக பாலுறவுச் சீரழிவுகளுக்குப் பலியாகின்றனர். ஆனால் அவர்களில் பலர், வரைமுறையற்ற பாலுறவுக்கு மார்க்சிய சாயம் பூசி, வியாக்கியானம் செய்கிறார்கள். என்ன பொருத்தம்! இத்தகைய சிலரை இங்கேயும் நாம் பார்க்கிறோம்! ''சுதந்திர மார்க்சிய சிந்தனையாளர்கள்'' என்று பீற்றிக் கொள்ளும் ''நிறப்பிரிகை'' கும்பல் முதல் பிரபஞ்சன் வரை பலரும் தமது ''வரைமுறையற்ற பாலுறவுக் கொள்கை''க்கு முற்போக்கு - மார்க்சிய சாயம் பூச முயலுகின்றனர். ''நிறப்பிரிகை'' கும்பலின் கருத்துப்படி இன்றைய சமூக நெருக்கடிகளுக்குப் பாட்டாளி வர்க்க மணமுறை, குடும்ப வாழ்க்கைகூட தீர்வாகாது; இணை வாழ்க்கைப் பரிசோதனைதான் தீர்வாகும் என்று அவர்கள் வரைமுறையற்ற பாலுறவுக்கு நியாயம் கற்பிக்கின்றனர். இதையும், விடலைக் காதலையும் (infatuation) புனிதமாக்கி பிரபஞ்சன் எழுதுகிறார். இதற்கெல்லாம் உச்ச கட்டமாக மதுரையில் சமீபத்தில் நடந்த ''நிஜ நாடக'' இயக்க விழாவில் வரைமுறையற்ற பாலுறவை ஆதரித்து ஒரு நாடகமே போடப்பட்டது. ஆகவே இத்தகையவர்கள் பாலியல் கல்வியை ஆதரிப்பது என்பது அவர்கள் இப்போது நடத்தும் ''பாலுறவுப் புரட்சி''யின் ஒரு அங்கமாகத்தான்!

● *இந்திய மக்கள் முன்னணி பற்றித் தங்களின் சரியான விளக்கம் என்ன? அவர்கள் தன்னார்வக் குழுக்களின் மூலம் பணம் பெற்றும் தன்னார்வக் குழுக்களில் இருந்து செயல்படுகிறார்கள் என்றும் மேலும் நேரடியாகவே வெளிநாட்டுப் பணம் பெற்று செயல்படுகிறார்கள் என்றும் கூறப்படுகிறதே அது உண்மையா? அப்படியிருந்தால் ஆதாரத்துடன் விளக்க முடியுமா?*

*- ராஜமோகன், திண்டுக்கல்.*

★ உண்மைதான். தன்னார்வக் குழுக்களுக்கும் இந்திய மக்கள் முன்னணிக்கும் உள்ள தொடர்பு பற்றி பலமுறை எழுதியுள்ளோம். குறிப்பாக நமது தோழமை ஏடான புதிய கலாச்சாரம் ஆதாரத்துடன் தொடர்ச்சியாக எழுதி வந்துள்ளது. ''நிரூபிக்க முடியுமா?'' என்று இ.ம.மு.-வினர் சவால் விட்டனர். அதிலும் தலைமையினர் கையாடல் செய்துவிட்டதையும் ஒப்புக் கொள்ளும் ''வினோத் மிஸ்ரா குழு'' -வின் சுற்றறிக்கையையே வெளியிட்டபிறகு வாயடைத்துப் போனார்கள். அது மட்டுமல்ல. இ.ம.மு.-வின் சகோதர அமைப்பான ''ஏ.ஐ.சி.சி.டி.யு'' என்ற தொழிற்சங்க மாநாடு சமீபத்தில் சென்னையில் நடந்தது. அந்த மாநாட்டு அரங்கத்துக்குள்ளாகவே தன்னார்வக் குழுக்களின் பணத்தைச் சுருட்டிக் கொண்டதற்காக தலைமையின் இரு கும்பல்களுக்கிடையே குடுமிப்பிடிச் சண்டையே நடந்தது; நாற்காலிகள் பறந்தன. ஆகவே இ.ம.மு. மற்றும் தன்னார்வக் குழுக்களுக்கிடையிலான உறவு இப்போது ரகசியமான ஒன்றல்ல. பகிரங்கமாகவே நடப்பதுதான்.

● *கோமல் சுவாமிநாதனை ஆசிரியராகக் கொண்டு நடத்தப்படும் 'சுபமங்களா' மாதப் பத்திரிகை ஓர் இடதுசாரி இலக்கியப் பத்திரிகையா? விளக்கம் தருக.*

*- வே.பாஸ்கரன், நாகமலைப் புதுக்கோட்டை.*

★ இல்லை. 'இடதுசாரி' வேடங்கட்டிக் கொண்டுள்ள பார்ப்பனீயப் பத்திரிகை. பல்வேறு பிற்போக்குப் பண்பாட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள ''ஸ்ரீராம் சிட்பண்ட்ஸ்'' என்கிற பார்ப்பன முதலாளிய நிறுவனத்துக்குச் சொந்தமானதுதான் ''சுபமங்களா''. பெரும்பான்மையான தமிழ் மக்களிடம் இருந்து, குறிப்பாக உழைக்கும் மக்களிடம் இருந்து பார்ப்பன சாதி தனிமைப்பட்டுப் போய்விடாது ஒரு தொடர்பு வைத்துக் கொள்வது; புரட்சிகர இயக்கத்துக்குள் ஊடுருவி அதை உள்ளிருந்து மாசுபடுத்துவது ஆகிய நோக்கத்துக்காக முற்போக்கு, ஜனநாயக வேடங்கட்டிக் கொண்டு சில பார்ப்பன அறிவுஜீவிகள் செயல்படுகிறார்கள். இதற்காக் முன்னாள் புரட்சிகர அறிவுஜீவிகளும் இன்னாள் ''புதிய இடது''களுமாகிய சில நபர்களுடன் கூடிக் குலாவுகின்றனர்; தமது கட்டுப்பாட்டில் உள்ள கணையாழி, தினமணி, சுபமங்களா போன்ற பார்ப்பன ஏடுகளில் அவர்களைப் பிரபலப்படுத்தி மேடை அமைத்துக் கொடுக்கின்றனர். இதன் மூலம் புரட்சிகர இயக்கத்தை சித்தாந்தபூர்வமாகப் பலவீனப்படுத்த முயலுகின்றனர். இதுதான் ''சுபமங்களா'' - ஒரு இடதுசாரி போல தெரிவதற்குக் காரணம். மற்றபடி அதிகாரபூர்வ போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளைப் போலவே இந்த ஏடு ஆளும் கூட்டணியை, குறிப்பாக பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலை மறைமுகமாக ஆதரித்து நடத்தப்படுவதுதான்.

● *லியான் ட்ராட்ஸ்கி நாடு கடத்தப்பட்டது; 1934-ல் சர்வாதிகார ஆட்சியைக் கொணர்ந்த*



படிப்பகம்

www.padippakam.com

*போது எதிர்த்ததற்காக, லெனின்கிரேடு கட்சித் தலைவர் செர்கெய்கிர்ரோவ் படுகொலை செய்யப் பட்டது, அதைத் தொடர்ந்து அவரை ஆதரித்த லட்சக்கணக்கான பொதுமக்கள் படுகொலை செய் யப்பட்டது, பல லட்சம்பேர் அடிமைக் கொட்டடிக் குக் கொண்டு போகப்பட்டது அனைத்திற்கும் கார ணம் ஸ்டாலினே. மேலும் சிறிய நாடுகளை மிரட்டி இணைத்துக் கொண்டவரும் ஸ்டாலினே. அவரை நல்லவர் என்று எப்படிக் கூறுகிறீர்கள். இட்லருக்கு இணையாக மக்களைப் படுகொலை புரிந்த ஸ்டா லினை எப்படித் தலைவராக நினைத்துக் கொண் டாட முடியும். அவர் செய்த செயல்களுக்குத் தங்க ளால் விளக்கம் அளிக்க இயலுமா?*

★ இதே அடிப்படையிலான கேள்விக்கு முன்பே சில முறை நாம் பதிலளித்துள்ளோம். ஸ்டாலின் அளவுக்கு அவதூறுப் பிரச்சா ரத்துக்கும் குணக் கொலைக்கும் இலக்கானவர் உலகில் வேறொருவ ரும் இருக்கமுடியாது. முக்கால் நூற்றாண்டுக்கும் மேலாக இது நடக் கிறது. இருந்தபோதும் உலகப் பிற்போக்காளர்களின் சிம்ம சொப்ப னமாக விளங்கும் ஸ்டாலினது புகழை அவர்களால் அழித்துவிட முடியவில்லை.

ருசியாவில் சோசலிசம் நீடித்திருக்க முடியாது என்கிற தமது சித்தாந்தத்தை நிருபிக்கும் வகையில் டிராட்ஸ்கி - ஜினோவிவ் தலை மையிலான எதிர்ப் புரட்சி துரோகக் கும்பல் இயங்கிவந்ததும், ஸ்டா லினுக்கு அடுத்த நிலையில் இருந்த தோழர் பெரியாவை அக்கும்பல் படுகொலை செய்ததையும், அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் கட்சி யையும் அரசையும் கைப்பற்ற அது முயன்றதையும் பகிரங்கமாகவே

## பாலுறவுக் கல்வி தேவையா? ''சுபமங்களா'' இடதுசாரியா? ஸ்டாலினை ஆதரிப்பதா?

நடத்தப்பட்ட ''மாஸ்கோ சதி வழக்கு'' அம்பலப்படுத்தியது. அது முற்றிலும் உண்மை என்பதை எவ்விதத் தடையுமின்றி ருசியாவில் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும், அறிஞர் களுமே எழுதியுள்ளனர். மேலும் ஸ்டாலினது பெயரால் நடந்த கொலைகள் அனைத்தும் கட்சிக்குள் ஊடுருவியிருந்த ஏகாதிபத்திய உளவாளிகளுடைய நாசவேலைகளுள் அடங்கும் என்பதை ''ஸ்டா லின் சகாப்தம்'' என்கிற அன்னா லூயிஸ் ஸ்ட்ராவ் எழுதிய நூல் ஆதாரபூர்வமாகச் சொல்கிறது. இவர் ருசியாவில் குடியேறிய பிர பல அமெரிக்கப் பெண் பத்திரிகையாளர்; இந்நூல் சென்னை புத்தக நிலையத்தாரால் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது. இன்னொரு நூலாகிய 'மாபெரும் சதி'யை விரைவிலேயே நாம் வெளியிட உள் ளோம்.

அதுமட்டுமல்ல, ருசியாவில் சோசலிசத்தை வீழ்த்தி முதலாளித் துவத்தை மீட்டதில் முழு வெற்றி கண்டுவிட்ட பிற்போக்குக் கும்பல் மேற்கண்ட நாசவேலைகளில் தாம் அப்போதே ஈடுபட்டிருந்ததாகப் பகிரங்கமாகவே இப்போது ஒப்புக்கொள்கின்றனர். ''நாஜி இட்லரது படை ருசியாவுக்குள் புகுந்தது கம்யூனிஸ்டுகளை அழிப்பதற்குத் தானே தவிர, மக்களைக் கொல்வதற்கு அல்ல. சித்திரவதை, படுகொ லைகள், கற்பழிப்புகள் எதிலும் ஜெர்மானிய நாஜிப் படை ஈடுபட வில்லை. கம்யூனிஸ்டுகளை ஒழிக்கும் அதன் பணிக்கு நாங்கள் இரக சியமாக உதவினோம். அதனுடன் சேர்ந்து உளவு மற்றும் நாசவே லைகளில்கூட ஈடுபட்டோம். எப்படியாவது ஸ்டாலின் தலைமையி லான செஞ்சேனை உலகப் போரில் தோற்றுவிட வேண்டும் என்பதற் காக நாங்கள் பாடுபட்டோம்'' என்று இப்போது பகிரங்கமாகவும் பெருமையாகவும் கூறிக் கொள்ளும் ஆவணங்களும், கட்டுரைக ளும், வாசகர் கடிதங்களும் தொடர்ந்து இன்றைய ருசியப் பத்திரிகை களில் வெளிவருகின்றன. ஆகவே ஸ்டாலினது ருசியாவில் நடந்த தாகக் கூறப்படும் கிரிமினல் குற்றங்களுக்கு யார் பொறுப்பானவர் கள் என்பதையும் எத்தகைய எதிர்ப் புரட்சி சதிகாரர்களையும் எதிர்த்து உலகின் முதலாவதும் ஒன்றே ஒன்றுமான சோசலிச நாட் டைக் காத்தார் என்பதையும் இது காட்டுகிறது. அதோடு, தூரக்கி ழக்கே உள்ள தென் கொரியாவில் இருந்து மேற்குக் கோடியிலுள்ள லாஸ் ஏஞ்செல்ஸ் வரை பாசிச மிருக வெறியோடு மனித உரிமைக ளைக் காலில் போட்டு மிதிக்கும் ஏகாதிபத்தியவாதிகள்தாம் ஸ்டா லின்மீது இத்தகைய அவதூறுகளை இடைவிடாது பரப்புகின்றனர்.

● *''மேலைச்சூழலில் கருவெடுத்துக் கிழக்கு நோக்கிப் பயணம் கட்டிய மார்க்சியத்தை 'மார்க்சி ய' முக்காடு போட்ட வறட்டியம் கொச்சைப்படுத்தி வருகிறது. தமிழகத்தில் தேசியப் புரட்சி வராமல் தடுத்துக் கொண்டிருக்கிற எதிர்ப்புரட்சி வேலை யைச் செய்து வருகிறது. இன்றைய சூழலில் இந்த வறட்டியம் தமிழினத்தின் மிகப்பெரும் பகையெனக் கருத வேண்டும்'' என்று அனைத்திந்திய அளவிலான பொதுவுடமை இயக்கங்கள் அதாவது இந்தியப் பொதுவுடமைக் கட்சிகள் (குறிப்பாகத் தங்களைப் போன்ற மா-லெ குழுக்கள்) மீது 'தமிழக ஆய்வரண்'-பெங்களூர் வைத்துள்ள விமர்சனம் பற்றித் தங்க ளின் கருத்தென்ன?*

***— இரா. வைத்தீசுவரன், நெல்லிக்குப்பம்***

★ வாசகர் குறிப்பிடும் விமர்சனத்தை நேராக நாம் இன்னும் பார்க்கவில்லை. எனினும் வாசகர் மேற்கோள் குறியிட்டு எழுதியி ருப்பதாலும், இத்தகையக் கருத்தில் 'தமிழக ஆய்வரண்'காரர்கள் இருப்பதை நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம் என்பதாலும் இதை ஆதாரபூர்வமாகக் கருதிப் பதிலளிக்கிறோம்.

'தமிழக ஆய்வரண்'காரர்களின் கருத்துப்படி அனைத்திந்தியப் பொதுவுடமை இயக்கங்கள் அனைத்துமே 'மார்க்சிய' முக்காடு போட்ட வறட்டியமாக இருக்கட்டும்! ஆனால் இதுதான் தமிழினத் தின் மிகப் பெரும் பகையெனவும், இதுதான் தமிழகத்தில் தேசியப் புரட்சி வராமல் தடுத்துக் கொண்டிருப்பதாகவும் கருதுகிறார்களே; அதன் மூலம் பார்ப்பன - பனியா பாசிசம் தமிழினத்தின் மிகப் பெரும் பகையெனவும், அதுதான் தமிழகத்தில் தேசியப் புரட்சி வரா மல் தடுத்துக் கொண்டிருக்கிறதெனவும் கருத வேண்டியதில்லை என் கிறார்களே - இது எந்த வகை வறட்டியம் என்று பாருங்கள். மார்க்சி யம், பெரியாரியம், அம்பேத்காரியம் ஆகியவற்றை வெவ்வேறு அளவுகளில் ஏற்றுக்கொண்டு, 'தமிழ் தேசியப் புரட்சி'யை நோக்க மாக அறிவித்துள்ள 'தமிழக ஆய்வரண்' உட்பட நூற்றுக்கணக்கான அமைப்புகள் உள்ளன. இந்திய, தமிழகச் சூழலின் ''விதிவிலக்கு''க் கோட்பாட்டை முன்வைத்து 'மார்க்சிய' முக்காடு போட்ட வறட்டி யத்தைச் சாடுவதில் மட்டுமே ஒன்றுபட்டு நிற்கும் இந்தக் குழுக்கள் குறைந்தது 'தமிழ் தேசியப் புரட்சி'க்குக் கூட இணைந்து செயல்பட முடியாமல் தடுத்துக் கொண்டிருப்பது எந்த வகை வறட்டியம். இத் தனை குழுக்களின் அயரா உழைப்பினால் மொத்தம் ஒரு ஆயிரம் தமிழர்களைக்கூட திரட்ட முடியாமல் இருப்பது எந்த வகை வறட்டி யம். இத்தகைய இனவாத வறட்டியத்தின் மறைமுக, சமூக ஆதர வின்றி தமிழினத்தின் மிகப் பெரிய பகையான பார்ப்பன - பனியா பாசிசம் தமிழ்த் தேசியப் புரட்சி வராமல் தடுத்துக் கொண்டிருக்க முடியாது என்பதுதான் உண்மை!

இந்த இனவாத வறட்டியம், கையாலாகாத்தனம், தன்னலப் பிழைப்புவாதம் ஆகியவை காரணமாக வைக்கப்படுவதுதான், பொதுவுடமை இயக்கங்கள் அனைத்துமே 'மார்க்சிய' முக்காடு போட்ட வறட்டியத்தால் மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்துவதாகக் கூறும் அவதூறாகும். ஏனெனில் இந்த இன வாதக் குழுக்கள் தோன்றி இப்படிப்பட்ட விமர்சனத்தைக் 'கண்டுபிடிப்பத 'ற்கு முன்பாகவே மா-லெ குழுக்கள் தேசிய இனத் தன்னுரிமை, சாதி யம் போன்ற அதிகாரபூர்வப் போலிப் பொதுவுடமைக் கட்சிகள் புறக்கணித்த பிரச்சினைகளில் சரியான கவனஞ் செலுத்தி தகுந்த நிலைப்பாடுகள் எடுத்துவிட்டன; இன்றும் சாதியத்துக்கு எதிராகவும் தமிழினத் தன்னுரிமைக்குமான இயக்கத்தை முன்னெடுப்பதில் தமி ழினவாதக் குழுக்களைவிட உறுதியாகவும் சரியாகவும் நிற்பவை மா-லெ குழுக்கள்தாம் என்பது மீண்டும் மீண்டும் நிரூபனமாகிவரு கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிந்திய
# தி.மு.க-வின் எதிர்மறை அரசியல்

*தி.மு.க-வின் அரசியல் என்பது எதிர்மறை அரசியல் (Negative Politics) ஆகிவிட்டது. அதனிடம் சுய முயற்சியும், ஆக்கபூர்வமான திசையும் கிடையாது.*

உட்கட்சித் தேர்தல்களை நடத்தி முடித்த கையோடு மாபெரும் போராட்டத் திட்டங்களைத் தி.மு.க. அறிவித்துள்ளது. இதைப் பார்த்தால் அக்கழகத்திற்குப் புதுத் தெம்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. உட்கட்சி தேர்தல்களின்போது நடந்த குத்து வெட்டு, கொலைகளையும் சமாளித்து கருணாநிதிக்குப் பிரம்மாண்டமான பிறந்த நாள் விழா நடத்தி வெற்றிகரமாக முடிந்தும் விட்டது ஆட்சிக் கவிழ்ப்பு, தேர்தல் தோல்வி, அப்புறம் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் அடக்குமுறை - பழி வாங்கும் வெறியாட்டம் - இவற்றால் ஏற்பட்ட அதிர்ச்சி, பின்னடைவு, பீதி, சோர்வு ஆகியவற்றை உதறி எறிந்துவிட்டு புதிய நம்பிக்கையுடன் புறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பிறந்த நாள் விழாவின் இறுதியில் பேசிய தி.மு.க. தலைவர், ''இனிமேல் நீங்கள் சும்மா இருக்கக் கூடாது. ஆங்காங்கே போராட்டங்களில் இறங்க வேண்டும். போராட்டம் நடத்த அனுமதி கேட்டுத் தலைமைக் கழகத்துக்கு லெட்டர் போட வேண்டிய அவசியமெல்லாம் இல்லை. நீங்கள் கடிதம் போட்டு, நாங்கள் அதைப்படித்து, அனுமதி தநது நீங்கள் போராட்டத்தில் இறங்கும் வரை மக்கள் காத்திருக்கமாட்டார்கள். எனவே, நீங்கள் போராட்டம் நடத்திவிட்டு, அதன் பின்னர் அதைத் தலைமைக் கழகததுக்கு அறிவித்தால் போதும்; ஆனால் அவசியம் அறிவிக்க வேண்டும்'' என்றார்.

கருணாநிதி இப்படிச் சொல்வதற்கு இரண்டு காரணங்கள் உண்டு: ராஜீவ் கொலையைத் தொடர்ந்து வந்த நாட்களில் பார்ப்பன - பாசிச ஜெயலலிதாவின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்ப்பதிலும், ஈழத்தமிழர் மீதான அடக்குமுறையை எதிர்ப்பதிலும் புரட்சிகர, ஜனநாயக சக்திகளே முன்முயற்சியுடன் செயல்படுகின்றன; பல பிரச்சினைகளிலும் மக்கள் தன்னெழுச்சியான போராட்டங்களில் ஈடுபடுவது அதிகரித்து வருகின்றன; இதனால் தி.மு.க.-வின் செயலூக்கமில்லாத நிலை கழக உடன் பிறப்புகளிடையே அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டங்களில் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைந்தால் தலைமைதான் நட்ட ஈடு கட்ட வேண்டும், தண்டனையும் உண்டு என்கிற ஜெயலலிதா அரசின் பாசிச சட்டத்துக்குப் பயந்துவிட்ட கருணாநிதி போராட்டங்களுக்கான பொறுப்பை உள்ளூர் உடன் பிறப்புகளின் மீது சுமத்துவதற்கு முயலுகிறார். தன்னெழுச்சியாக அணிகளே நடத்திய போராட்டம் எனத் தலைமையின் பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் குறுக்குவழி தேடுகிறார். இப்படி வேறு காரணங்கள் ஒருபுறம் இருந்தாலும், இப்போது கழக உடன் பிறப்புகளுக்கு முழுமையான போராட்டச் சுதந்திரம் வழங்கியுள்ளார்.

தி.மு.க.-வுக்கு ஏற்பட்டிருக்கும் இத்தகைய புதுத் தெம்பு, புது நம்பிக்கைக்கு செயல் வடிவம் கொடுக்கவும், வழி நடத்தவும் அதனிடம் ஆக்கபூர்வமான அரசியல் திட்டம், முழக்கம் ஏதாவது இருக்கிறதா? அதன் அரசியல் எல்லாம் எதிரியின் பலவீனங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவையாவன:

எப்படியும் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா அரசு மக்கள் விரோத, ஜனநாயக விரோத குற்றங் குறைகளைச் செய்யும்; அதனால் மக்களிடம் இருந்து அம்பலப்பட்டுத் தனிமைப்படும். ஜெயலலிதாவுக்கு ஆட்சியையும், கட்சியையும் கொண்டு செல்லும் திறமை கிடையாது; ஆகவே நெருக்கடியும் பிளவும் ஏற்படும். ஜெயலலிதாவின் சர்வாதிகாரப் போக்கைப் பேராசைபிடித்த காங்கிரசின் மத்திய அரசால் நீண்டகாலம் சகித்துக் கொள்ள முடியாது; எனவே ஆளும் அ.தி.மு.க- காங்கிரசு கூட்டு முறிந்து ஆட்சி கவிழ்ந்து விடும்.

— இந்த நம்பிக்கையில் காய்கனிந்து, தானே மடியில் விழும் என்று மடியை விரித்து வைத்துக் கொண்டு காத்திருப்பது தான், தி.மு.க. அரசியல் என்றாகிவிட்டது.

**மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்க கருணாநிதிக்கு மலர்க் கிரீடம் சூட்டிப் பெரு விழா.**



முன்பு ஆட்சியை இழந்து 13 ஆண்டு வனவாசத்தின் போதும் இதே அரசியல் உத்தியைத்தான் தி.மு.க கடைப்பிடித்தது. ஏதாவது ஒரு காரணமாக எம்.ஜி.ஆர் ஆட்சி விழும், மீண்டும் அரியணை ஏறலாம் என்று எதிர்பாத்திருந்தது. ஆனால், எம்.ஜி.ஆரின் சாவுதான் மீண்டும் ஆட்சிக்கு வர வாய்ப்பளித்தது. அதேபோல, ஜெயலலிதா ஆட்சி நீடிக்காது எப்படியும் வீழ்ந்துவிடும் என்கிற நம்பிக்கைதான் அதனிடம் உள்ளது.

இவ்வாறு எதிரியின் பலவீனங்கள், குறைபாடுகளை மட்டுமல்ல, எதிரிக்கு ஓட்டளித்து ஆட்சிக்குக் கொண்டுவந்த மக்களைப் பழி தீர்க்கும் எதிர்மறை அரசியலையும் தி.மு.க அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

தி.மு.க-வின் அதிகாரபூர்வக் குரல்தரும் பொறுப்பில் உள்ளவர் ஆலடி அருணா. இவர், கருணாநிதி பிறந்த நாள் விழாவில் நேரடியாகவே இதைச் சொன்னார், ''திருந்த வேண்டியது தி.மு.க இல்லை... தமிழக மக்கள்தான்.'' என்றார்.

தி.மு.க-வின் அதிகாரபூர்வ ஏடான முரசொலியின் கருத்துப்படங்களும் கேலிச் சித்திரங்களும் ஜெயலலிதாவுக்கு வாக்களித்த தமிழக மக்கள், குறிப்பாக பெண்கள் அதன் பலனை அனுபவித்தே தீரவேண்டும்; எல்லாம் அதனால்தான் வந்தது; முட்டாள்தனம் செய்துவிட்டார்கள் என்கிற தோரணையில்தான் உள்ளன.

பொதுக் கூட்டங்களில் பேசுபவர்கள் எல்லாம் ஜெயலலிதா ஆட்சியைத் தேர்ந்தெடுத்தற்காகத் தமிழக மக்களை ஏசுவதில் இருந்து, சாபம் விடுவதுவரை தமது வெறுப்பை வெளியிடுகிறார்கள். விலைவாசி ஏற்றம், சமூக விரோத - கிரிமினல் குற்ற அதிகரிப்பு, லஞ்ச ஊழல் பெருகுவது போன்ற பிரச்சினைகள் பற்றி பொது இடங்களில் எப்போது மக்கள் தமது அதிருப்தியை தெரிவித்தாலும், உடனே அங்கிருக்கும் தி.மு.க. உடன் பிறப்பு அவர்களைப் பழித்துப் பேசத் தொடங்கிவிடுகிறார். ''நீங்க தானே ஓட்டுப் போட்டீங்க, நல்லா படுங்க; அப்பத்தான் புத்தி வரும்'' என்று கூறி வசை மாறிப் பேசத் தொடங்கிவிடுகிறார்.

மொத்தத்தில், தி.மு.க-வின் அரசியல் என்பது எதிர்மறை அரசியல் (Negative Politics) ஆகிவிட்டது. அதனிடம் சுய முயற்சியும், ஆக்கபூர்வமான திசையும் கிடையாது.

படிப்பகம்

www.padippakam.com

திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்ட தில் இருந்தே தி.மு.க இந்த நிலையை எட்டி விட்டது. ஆனால் அதைக்கூட பழங்கதை என்று விட்டுவிடலாம்.

தி.மு.க. ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் இரண்டாண்டுகளுக்கு முன்பு ஜெயலலிதா இறங்கிய பிறகாவது தி.மு.க மேற்கொண்ட அரசியல் ஆக்கபூர்வமானதாக, நேர்மறை அரசியலாக (Positive Politice) மாறியதா? இல்லை. சந்திரசேகர் ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டு, தி.மு.க மீது புலி ஆதரவு, பிரிவினைவாத, துப்பாக்கிக் கலாச்சாரக் குற்றச்சாட்டுக்களை வைத்து ஜெயா - ராஜீவ் கும்பல் தாக்கத் தொடங்கிய தில் இருந்தே தி.மு.க-வைத் தோல்வி மனப்பான்மை கவ்விக் கொண்டுவிட்டது.

ஆக்கபூர்வமான, நேர்மறை அரசியல் என்று நாம் எதைச் சொல்கிறோம்? தி.மு.க-விடம் புரட்சிகர, முற்றிலும் ஜனநாயகபூர்வமான நிலைப்பாடுகளை நாம் எதிர்பார்க்க வில்லை. அது ஏற்றுக் கொண்டுள்ள, அறிவித்துள்ள அரசியல் கொள்கைகளுக்காவது அது நேர்மையாக உறுதியாக இருந்து மக்களின் ஆதரவைப் பெற முயலவில்லை. தமிழ் மக்கள் ஆதரவைவிட மத்தியில் ஆளும் கட்சிகளுக்கு விசுவாசமாக இருந்து நம்பிக்கையைப் பெற்று பதவியைத் தக்க வைத்துக் கொள்ளவே முயன்றது. இதனால், அது தன்னைத் ''தமிழினக் காவலன்'' என்று அடிக்கடி கூறிக் கொள்வதைப் போல தமிழினத்தின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற முடியவில்லை.

உதாரணமாக, ஈழப்பிரச்சினை. ஈழத்தில் ஆக்கிரமிப்புப் போர் நடத்திவிட்டுத் திரும்பிய இந்திய இராணுவத்தை தமிழக முதலமைச்சர் என்கிற முறையில்கூட வரவேற்பதற்குக் கருணாநிதி மறுத்துவிட்டார். அப்படைக்கு முன்பே ஈழத் துரோகிகளைச் சுமந்து வந்த கப்பலைத் தமிழ்நாட்டுத் துறைமுகத்துக்குள் நுழைய விடாது, அவர்களுக்குத் தஞ்சமளிக்கவும் மறுத்துவிட்டார். ஈழத் தமிழ் அகதிகளது பிள்ளைகளுக்குக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு செய்து கொடுத்தார். இவையெல்லாம் சரிதான்.

ஆனால் இவற்றை எதிர்த்து மாற்றுக் கட்சியினர் விமர்சிக்கத் துவங்கியதும் மழுப்பத் துவங்கிவிட்டார். இந்திய இராணுவத்தை அவமதிக்கவில்லை என்றும் (ஈழத் துரோகிகள் உட்பட) எல்லா ஈழப் போராளிக் குழுக்களையும் சமமாகப் பாவிப்பதாகவும் கூறினார்.

தி.மு.க. அப்போது புதிதாகப் பெற்றிருந்த அதிகாரத்தையும், பின்னர் ஆட்சிக்கு வந்த தேசிய முன்னணியில் தனக்கிருந்த செல்வாக்கையும் பயன்படுத்தி ஈழப் பிரச்சினையில் அது செய்திருக்க வேண்டிய, செய்யக்கூடிய காரியங்களைச் சாதிக்கத் தவறிவிட்டது.

ஜனதா தளம் - தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் ஈழப் பிரச்சினையில் ராஜீவ் - எம்.ஜி.ஆரின் கும்பல் இந்திய உளவுப் படையான ''ரா''வின் பங்கு, சீர்குலைவு,



அ.தி.மு.க. குண்டர்களால் தாக்கப்பட்ட தி.மு.க. பேச்சாளர் தீப்பொறி ஆறுமுகம்.

பிளவு, சதி வேலைகளை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தி, சம்பந்தப்பட்ட ''ரா'' அதிகாரிகளைத் தண்டிப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இதேபோல ஈழத்தில் அட்டூழியங்கள் - அக்கிரமங்கள் புரிந்த இந்திய இராணுவத்தினர் மீது கிரிமினல் வழக்குகள் தொடுத்து தண்டிக்க வேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் இரகசியப் பிரிவுகளை வெளிப்படுத்தி, அந்த ஒப்பந்தம் நிர்ப்பந்தம், சதி வேலைகளினால் நிறைவேற்றப்பட்ட விதத்தையும் வெளிப்படுத்தி, அது முற்றாகத் தோல்வியுற்றது, ரத்து செய்யப்பட்டது என்று அறிவிக்க வேண்டும். வி.பி.சிங் பதவியேற்றதும் முதல் அறிவிப்பிலேயே, உடனடியாகவே இந்திய இராணுவத்தை விலக்கிக் கொள்வதாக அறிவிக்க வேண்டும். ஈழத்தமிழ் அகதிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை அகதிகள் நிறுவனத்தின் அங்கீகாரம் பெறவேண்டும். ஈழத்தமிழின சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். இராணுவ தலையீடு இல்லாது,

**புரட்சிகர, ஜனநாயக சக்திகளுக்கு, தமிழினக் குழுக்களுக்கு எதிராக பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் அடக்கமுறையை ஏவிய போதும் கருணாநிதி கண்டன குரல் எழுப்பவில்லை. தனக்கெதிராக புலி ஆதரவு, பிரிவினைவாத குற்றச்சாட்டு நிரந்தரமாக ஒட்டிக் கொண்டுவிடுமோ என்று அஞ்சுகிறது தி.மு.க.**

அரசு தந்திர, தார்மீக ஆதரவு தரவேண்டும். இராணுவ ஆக்கிரமிப்புப்போர் நடத்தியதற்காக ஈட்டுத் தொகையும் தரவேண்டும்.

— இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து ஏற்கும்படி ஜனதாதள - தேசிய முன்னணி அரசையே நிர்ப்பந்தித்திருக்க வேண்டும்.

ஆனால் தி.மு.க.-வோ ஆட்சி அதிகாரம் கிட்டிய மிதப்பில் மூழ்கியிருந்தது. ஜனதா தள - தேசிய முன்னணி அரசின் கொள்கையும் ராஜீவ் கும்பலின் பிராந்திய ஆதிக்கக் கொள்கையில் இருந்து மாறுபட்டதாக இல்லை. அதிலேயே மிதவாதப் போக்கு மட்டுமே காட்டியது. இதனுடன் ஒத்துப்போகும் வகையில்தான் தி.மு.க-வின் அணுகுமுறையும் இருந்தது.

மாநில அரசுகளைக் கவிழ்க்கும் மைய அரசின் ஆதிக்கத்துக்கு அடிப்படையான 356-வது அரசியல் சட்டப்பிரிவை வி.பி. சிங் ஆட்சிக்கு வந்த உடனே அகற்றும்படி நிர்பந்தித்திருக்க வேண்டும். ஆனால் வி.பி. சிங் அரசே 356-வது சட்டத்தைப் பயன்படுத்துவதைத்தான் தி.மு.க அரசு ஆதரித்தது. அதாவது சுயநிர்ணய உரிமை கோரும் அளவுக்கு தி.மு.க-வுக்கு முதுகெலும்பு இல்லை; ஆனாலும் அது பஞ்சாபின் அகாலிகளைப் போன்ற மாநில சுயாட்சியாவது கோரி அனந்தபூர் சாகிப் தீர்மான அடிப்படையில் ஒரு தாக்குதல் தன்மையுடைய நேர்மறை அரசியல் (Offensive Positive Politics) நிலை எடுக்கத் தி.மு.க. தவறிவிட்டது.

அதனாலேயே பின்னர் ராஜீவ் - ஜெயா கும்பல் அரசியல் அவதூறு தாக்குதல் தொடுத்தபோது தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டதோடு தி.மு.க-விடம் தோல்வி மனப்பான்மையும் தொற்றிக் கொண்டது. புலிகளுக்கு எதிராக தி.மு.க. அரசு எடுத்த போலீசு நடவடிக்கைகளைக் கருணாநிதி பட்டியலிட்டபோதே இது துவங்கிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com

அதன்பிறகு, என்னதான் விளக்கம் சொன்னாலும், எதிர்வரும் சட்டமன்ற அவமானங்களை உத்தேசித்து எம்.எல்.ஏ. பதவியில் இருந்து விலகிய ஒன்றுதான் கருணாநிதி செய்த சரியான காரியம். மற்றபடி அவர் தானே அவ்வப்போது கூறியவற்றைக்கூட கடைபிடிக்கவில்லை.

ஆட்சியைக் கலைத்ததும் "இப்படிச் செய்தால், இனிமேலும் தேர்தல்களில் போட்டியிடுவதே சரிதானா, அவசியந்தானா என்று -பார்க்க வேண்டும்" என்று சொன்னார். ஆனால் அதுபற்றிப் பரிசீலிக்கவே இல்லை.

தேர்தல் விதிமுறைகளை எல்லாம் மீறி அவதூறுகள் செய்து, ராஜீவ் கொலைப் பழி போட்டு, தேர்தல் அலுவலகங்கள் - சாதனங்களைத் தாக்கி ஜெயா - வாழப்பாடி கும்பல் அராஜகவெறியாட்டம் போட்ட போதாவது தேர்தல் புறக்கணிப்பு முடிவு எடுத்திருக்க வேண்டும். அரசியல் ராஜ தந்திரத்தில் வல்லவர் என உடன் பிறப்புகளால் போற்றப்படும் கருணாநிதியின் அரசியல் கணிப்புகள் தவறிப்போயின; அல்லது சட்டமன்ற அமைப்பின் மீதுள்ள பேராசையைக் கைவிட முடியவில்லை.

ராஜீவ் கொலையைச் சாக்கு வைத்து நடந்த அராஜகத்தை எதிர்த்து குறைந்தது என்.டி.ராமராவைப் போல உண்ணாவிரதம் போன்ற போராட்டத்தைக்கூட நடத்தவில்லை. ராஜீவ் கொலைப் பழியை எதிர்த்தும், தேர்தல் விதிமுறைகளை மீறுவதை எதிர்த்தும் சட்டபூர்வ நடவடிக்கைகள் கூட எடுக்காது அரசியல் பக்கவாத நோய் பிடித்த நிலைக்குத் தி.மு.க. போய்விட்டது.

தேர்தலின்போது, "இப்போது அண்ணாவின் வழியைப் பின்பற்றுகிறோம்; தேர்தல் முடிவு எதிராகப் போனால் பெரியாரின் வழியைப் பின்பற்றுவோம்" என்றார், கருணாநிதி. இது பார்ப்பனருக்கு எதிரான மிரட்டல் என்று எதிரிகள் அவதூறு செய்தபோது "ஆமாம்! பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகத்தான் இருக்கும்" என்று கூறவில்லை. "அண்ணா வழி என்பது அரசியல் வழி; பெரியார் வழி என்பது சமுதாயப் பணி" என்று கூறி மழுப்பினார்.

தேர்தல் தோல்வி அதிர்ச்சியூட்டும் வகையில் வந்ததும் "திராவிட மறுமலர்ச்சி மன்றம்" நிறுவி இளைஞர்களுக்குத் திராவிட இயக்கக் கல்வியளிக்கும் திட்டத்தை அறிவித்து, துவக்க நடவடிக்கைகளிலும், பொறுப்பாளர்கள் நியமனமும், ஆள்சேர்ப்பும் கூட நடத்தினார்கள். ஆனால் இதுவும் பார்ப்பன எதிர்ப்பு நடவடிக்கைதான் என எதிரிகள் சாடியபோது அரைகுறை நிலையில் கிடப்பில் போட்டு விட்டார்கள்.

புலிகள் ஆதரவு, துப்பாக்கிக் கலாச்சாரம், ராஜீவ் கொலை பழி என அடுத்தடுத்த அவதூறுகளினால் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்ட கருணாநிதி பெரும்பாலும்' தன்னிலை விளக்கம் தருவதிலேயே தள்ளப்பட்டார். ராஜீவ் கொலை வழக்கு விசாரணை என்கிற பெயரில் நடந்த அட்டூழியங்களை கண்டிக்கும் .திராணியற்றுப் போனார். "ஆதாரம் இருந்தால் பிரபாகரனை நடுத்தெருவில் வைத்துத் தூக்கிலிடுவதையும் ஆதரிப்பதாக" பிதற்றும் அளவு போனார்.

ராஜீவ் கொலை, பத்மநாபா கொலை விசாரணை தி.மு.க அணிகளை, வை.கோவின் தம்பி ரவிச்சந்திரனைக் கைது செய்வதாக நெருங்கி வந்தபோது கூட அவற்றை எதிர்க்கத் தி.மு.க துணியவில்லை. கருணாநிதியின் விசுவாசி என்று நம்பப்பட்ட முன்னாள் உள்துறை செயலாளர் நாகராஜனைக் கைது செய்தபோதுதான் கருணாநிதிக்கு "விழிப்பு"த் தட்டியது.

பிறகுதான் தி.மு.க-வின் "தடா" எதிர்ப்பு துவங்கியது. அதிலும் அப்ரூவராகிவிட்ட நாகராஜன் மீது இன்னும் நம்பிக்கை வைத்து பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலை முழுமையாக எதிர்க்காமல் விட்டது; இதன் காரணமாக தி.மு.க. சட்டத்துறை செயலாளர் கணபதி கட்சியில் இருந்தே விலக நேர்ந்தது. தற்காப்பு நிலையில் முடக்கப்பட்ட தி.மு.க, ஜெயலலிதா கும்பலின் பல்வேறு மக்கள் விரோத, ஜனநாயக விரோத, பார்ப்பன மீட்புவாத நடவடிக்கைகளை கடுமையாக எதிர்க்கத் துணிவின்றி வெறும் கண்டன் அறிக்கைகள், பொதுக் கூட்டங்கள் என்றாகிவிட்டது. தி.மு.க. மேடைப் பேச்சாளர்கள் மீது வழக்குகள், தாக்குதல்கள் என்று வந்தபோதும் பதிலடி கொடுக்க முடியாமல் போனது.

*தற்காப்பு நிலையில் முடக்கப்பட்ட தி.மு.க., ஜெயலலிதா கும்பலின் பல்வேறு மக்கள் விரோத ஜனநாயக விரோத, பார்ப்பன மீட்புவாத நடவடிக்கைகளை கடுமையாக எதிர்க்கத் துணிவின்றி வெறும் கண்டன அறிக்கைகள், பொதுக்கூட்டங்கள் என்றாகிவிட்டது. தி.மு.க. மேடைப் பேச்சாளர்கள் மீது வழக்குகள், தாக்குதல்கள் என்று வந்தபோதும் பதிலடி கொடுக்க முடியாமல் போனது.*

புரட்சிகர, ஜனநாயக சக்திகளுக்கு, தமிழினக் குழுக்களுக்கு எதிராக பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் அடக்குமுறை ஏவியபோதும் கருணாநிதி கண்டனக் குரல் எழுப்பிடவில்லை. தனக்கு எதிரான புலி ஆதரவு, பிரிவினைவாத குற்றச்சாட்டு நிரந்தரமாக ஒட்டிக் கொண்டு விடுமோவென்று அஞ்சுகிறது. தி.மு.க. இந்நிலையில் "தமிழினக் காவலன்" என்று கூறிக் கொள்ளும் தி.மு.க. கர்நாடகாவில் தமிழர் தாக்கப்படுவதை எதிர்த்து ஒரு திடீர் பேரணி மட்டுமே நடத்திவிட்டு ஜெயாவுடன் அறிக்கைப் போரோடு நிறுத்திக் கொண்டது. வேறு உருப்படியாக எதுவும் செய்யவில்லை. மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து தேசிய முன்னணி - 'இடதுசாரி' கூட்டணி நடத்தும் பொது வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்களில் கூட அரைகுறை மனத்துடன்தான் தி.மு.க. கலந்துக் கொண்டது. தேசிய முன்னணியும் செயலிழந்துபோன நிலையில் தி.மு.க தேடிக் கொண்டிருந்த "அகில இந்திய தேசிய" ஆதரவையும் பெற முடியவில்லை. மேலும் எல்லா "அகில இந்தியக் கட்சிக"ளுமே ஈழ எதிர்ப்பு, ஈழப் போராளிகள் மீதான ஒடுக்குமுறை ஆதரவு நிலையில்தான் உள்ளன.

இறுதியில், ராஜீவ் கொலை வழக்கு குற்றப் பத்திரிக்கையிலும், தமிழ்நாடு பிரிவினை சதி வழக்கு முதல் தகவல் அறிக்கையிலும் தி.மு.க-வினர் எவரது பெயரும் இல்லை என்கிற செய்தியோடு புலி அமைப்புத் தடையும் வந்தது. "போதும்! இதோடு ஈழப் பிரச்சினை பிரிவினை புகாரில் தனக்குத் தொடர்பில்லை!" என்று உதறிவிடலாம் என்கிற நிம்மதியோடு புலி அமைப்பு மீதான தடையைக் கூட நேரடியாக எதிர்க்கத் துணியாது மழுப்புகிறது, தி.மு.க.

கவனத்தைத் திருப்பி, அண்ணாமலை நகர் போலீசு காவல் நிலையக் கொலை - கற்பழிப்பு, இலவச மின்சாரத் திட்டம் ரத்து ஆகிய பிரச்சினைகளிலும், ஜூன்-16 பொது வேலை நிறுத்தம் என்றும் வேகம் காட்டி வருகிறது. இவற்றைவிட தான் சும்மா இருந்தாலே ஜெயலலிதாவின் மக்கள் விரோத ஜனநாயக விரோதத் தவறுகளால் ஏற்படும் மக்கள் வெறுப்பு தனக்கு ஆதரவாகத் திரும்பும் என்று தி.மு.க எண்ணுகிறது. அந்த ஆதரவைத் தனக்குள்ள அமைப்புப் பலத்தைக் கொண்டு வாக்குகளாக மாற்றி ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்று கனவு காண்கிறது.

ஆனால் இந்தக் கனவு ஈடேறாது. ஜெயலலிதா கும்பலின் பார்ப்பன - பாசிச ஆதிக்கத்தை எதிர்ப்பது; காங்கிரசு - பாரதீய ஜனதா கட்சிகளின் நாட்டை மறு அடகு வைக்கும் போக்கு போன்றவற்றுக்கு எதிராகவும் ஈழ ஆதரவு, தேசிய இன சுயநிர்ணய உரிமை உட்பட ஜனநாயகத்துக்காகவும் தெளிவான, உறுதியான ஆக்கபூர்வமான, நேர்மறை அரசியல் வழிகாட்டுதல் இல்லாத எந்தவொரு இயக்கமும் இனி இங்கே தலையெடுக்க முடியாது.

இந்தப் பிரச்சினைகளைக் கையில் எடுத்துப் போராட புரட்சிகர, ஜனநாயக சக்திகளும் தமிழினக் குழுக்களும் முன்முயற்சி எடுத்துள்ளன. இந்நிலையில் தி.மு.க-வின் மிதவாத, சட்டவாத, சமரச அரசியல் அசாமில் அசாம் கன பரிசத்தையும், பஞ்சாபில் அகாலி குழுக்களையும், காஷ்மீரில் தேசிய மாநாடு கட்சியையும ஓரங்கட்டிவிட்டதைப் போல செய்துவிடும் என்பது நிச்சயம்.

○ ஆர்.கே.

படிப்பகம்

www.padippakam.com

### மித்தல் விவகாரம்: இந்தியா - பாக்

# தூதர்களே உளவாளிகளாக... பகைமையே வரலாறாக...

**அண்டை நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதும், தூதர்களையே உளவாளிகளாகப் பாவிப்பதும், தூதரக அதிகாரிகளை சித்திரவதை செய்து வெளியேற்றுவதும் இந்திய - பாக் வரலாற்றில் புதியதல்ல. கடந்த 45 ஆண்டுகளாத் தொடரும் பகைமையின் ஓர் அங்கம்தான் மித்தல் விவகாரம்.**

அண்டை நாடான பாகிஸ்தானில் இந்தியத் தூதரக அதிகாரி ராஜேஷ் மித்தல் கடந்த மே மாத இறுதியில் தாக்கப்பட்ட விவகாரத்தைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையிலான பகைமை மேலும் தீவிரமடைந்துள்ளது. இரு நாட்டுப் பத்திரிகைகளும் பிரச்சார சாதனங்களும் மதவெறிக் கட்சிகளும் பகைமையையும் தேசியவெறியையும் கிளறிவிட்டு ஆத்திரமூட்டி வருகின்றன.

இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய தூதரகத்தில் பணியாற்றி வந்த உயர் போலீசு அதிகாரியான ராஜேஷ் மித்தல் மே 24-ந் தேதியன்று அவரது இல்லத்திலிருந்து பாக். உளவுப் படையினரால் இழுத்துச் செல்லப்பட்டார். இரகசியமான இடத்திற்கு கண்களைக் கட்டி கொண்டு செல்லப்பட்ட அவர், உளவுப் படையினரால் சித்திரவதை செய்யப்பட்டு அடுத்த நாள் விடுவிக்கப்பட்டார். சர்வதேச விதிமுறைகளை மீறி தூதரக அதிகாரியைக் கடத்திச் சென்று மின்சார அதிர்ச்சி கொடுத்து சித்திரவதை செய்த பாகிஸ்தான் அரசு மீது கடும் எதிர்ப்பு தெரிவித்த இந்திய அரசு, அனுப்பிய எல்லைப் பாதுகாப்புப் படை விமானத்துக்கு அனுமதி மறுக்கவே, சிவிலியன் விமானத்தை அனுப்பி உடனடியாக மித்தலை இந்தியாவிற்குக் கொண்டு வந்தது. காங்கிரசும், இந்துவெறி பாரதீய ஜனதா, சிவசேனா ஆகிய கட்சிகளும் பாகிஸ்தான் மீது வெறுப்பைக் கக்கின. அதைத் தொடர்ந்து, பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவிலிருந்து இரு பாக். தூதரக அதிகாரிகள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். இரு நாடுகளின் வெளியுறவுத் துறை செயலர்கள் மட்டத்தில் நடைபெறவிருந்த 6-வது சுற்று பேச்சுவார்த்தை நிறுத்தி வைக்கப்பட்டது.

ஆனால் பாக். அதிகாரிகளோ, தூதரக அதிகாரி என்ற பெயரில் மித்தல் இந்திய உளவுப் படையான "ரா"வின் ஏஜெண்டாகச் செயல்பட்டதாகவும், தனது காரின் எண் தகட்டை மாற்றி அவர் ரகசியமாகப் பயணம் செய்ததாகவும், பாகிஸ்தானிலுள்ள கைக்கூலிகளிடமிருந்து ரகசிய ஆவணங்களைப் பெற்றதாகவும் இவற்றுக்குப் புகைப்பட ஆதாரங்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர். இந்திய தூதரக அதிகாரிகள் உளவாளிகளாகச் செயல்பட்டு, பாகிஸ்தானைச் சீர்குலைக்க தொடர்ந்து சதி வேலைகளில் ஈடுபட்டு வருவதாக பாக். அதிகாரிகள் குற்றம் சாட்டுகின்றனர். இவற்றுக்கு இந்திய அரசோ, "ரா" உளவு நிறுவனமோ இதுவரை விளக்கமளிக்கவில்லை. தூதரக அதிகாரியையே காட்டுமிராண்டித்தனமாக தாக்கிய பாகிஸ்தானுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை என்கிறது, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம்.

அண்டை நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவதும், தூதர்களையே உளவாளிகளாகப் பாவிப்பதும், தூதரக அதிகாரிகளை சித்திரவதை செய்து வெளியேற்றுவதும் இந்திய - பாக் வரலாற்றில் புதியதல்ல. கடந்த 45 ஆண்டுகளாகத் தொடரும் பகைமையின் ஓர் அங்கம்தான் மித்தல் விவகாரம். கடந்த 1988 நவம்பர் முதலாக 10-க்கும் மேற்பட்ட சம்பவங்களில் பாக். தூதர்களையும் அதிகாரிகளையும் சித்திரவதை செய்து இந்திய அரசு வெளியேற்றியிருக்கிறது. கடைசியாக, ஏப்ரல் 15-ந் தேதியன்று அர்ஷத் அலி என்ற பாக். தூதரக அதிகாரி உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறி அவரைக் கைது செய்து, பின்னர் இந்திய அரசு வெளியேற்றியது. அதன் பிறகு பஞ்சாபை ஒட்டிய எல்லைப் பகுதியில் 4 பாக். ராணுவத்தினரைப் பிடித்து அவர்கள் சீக்கிய பயங்கரவாதிகளுடன் சேர்ந்து சதி நடவடிக்கையில் ஈடுபட்டதாக சிறையிலடைத்தது.

அதேபோல, கடந்த ஆண்டு இறுதியில் இந்திய தூதரக அதிகாரியின் மனைவியையும் குழந்தைகளையும் பாக். உளவுப் படையினர் கடத்திச் சென்று விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்து விடுவித்தனர். மித்தல் விவகாரத்திற்குப் பிறகு, கடந்த மே 8-ம் தேதியன்று கராச்சியிலுள்ள இந்திய தூதரக அதிகாரி உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாக வெளியேற்றப்பட்டார்.

இரு நாடுகளுக்குமிடையே தொடர்ந்துவரும் பகைமையின் காரணமாக, பஞ்சாப் - காஷ்மீர் விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிட்டு ரகசிய ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்துவருகிறது. அதே போல இந்திய அரசு பாகிஸ்தானின் சிந்து, பலுசிஸ்தான் விவகாரங்களில் ரகசியமாகத் தலையிட்டு அங்கு தொடரும் தேசிய இனப் போராட்டத்தை உசுப்பிவிடுகிறது. "எல்லை காந்தி" எனப்படும் கான் அப்துல் காபார்கானின் மகனும் பலுசிஸ்தான் தேசிய இனத் தலைவருமான வாலிகானை "ரா" வெளிப்படையாகவே ஆதரிக்கிறது. இரு நாடுகளுமே எல்லைப்புற மாநிலங்களில் நடக்கும் போராட்டங்களை அண்டை நாட்டின் சீர்குலைவு முயற்சியாகச் சித்தரித்து, அரசு பயங்கரவாத அடக்குமுறையை ஏவி வருகின்றன.

இப்போது பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் தொடரும் இன உரிமைப் போராட்டத்தையடுத்து, இந்திய - சிந்து மாகான எல்லையை பாக். அரசு மூடியதோடு, பெருமளவில் ராணுவத்தைக் குவித்து அரசு பயங்கரவாத அடக்குமுறையை ஏவிவருகிறது. பாகிஸ்தானைச் சீர்குலைக்க சிந்து மாகா

பாக். உளவுப் படையினரால் தாக்கப்பட்ட இந்தியத் தூதர் ராஜேஷ் மித்தல்.



பஞ்சாப் எல்லையில் உளவுப் பார்த்ததாக இந்திய அரசால் கைது செய்து சித்திரவதை செய்யப்பட்ட பாக். இராணுவத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

ணத்தில் ஊடுருவி சதி செய்வதாக இந்தியா மீது குற்றம் சாட்டும் பாக். அரசு, பெருமளவில் எதிர்க் கட்சித் தலைவர்களையும், இந்துக்களையும் சிறையிலடைத்து சித்திரவதை செய்து வருகிறது. சிந்து தேசிய ஜனநாயகக் கட்சியை இந்தியாவின் கைக்கூலியாக சித்தரித்து அதை கடுமையாக ஒடுக்குவதோடு, அண்மையில் அப்பாவி விவசாயிகள் 9 பேரைச் சுட்டுக் கொன்று அவர்கள் நாட்டைச் சீர்குலைக்க இந்தியாவுடன் சேர்ந்து சதி செய்ததாக கதை கட்டியது. இதே போல கடந்த சில ஆண்டுகளாக பஞ்சாப், காஷ்மீரின் அப்பாவி விவசாயிகளைச் சுட்டுக் கொன்று அவர்கள் பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற பயங்கரவாதிகள் என்று இந்திய அரசு இங்கே கதை கட்டுகிறது.

இப்போது மித்தல் விவகாரத்தைத் தொடர்ந்து இந்துவெறி பாரதீய ஜனதாவும் சிவசேனாவும் பாக். எதிர்ப்பைத் தீவிரமாக்கி தேசபக்தி கூத்தாடுகின்றன. ஏற்கனவே காஷ்மீர் விவகாரத்தில் தலையிடுவதாகக் கூறி அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்திய - பாக். கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை சிவசேனா தடுத்தது. பம்பாய் வான்ஹீட் விளையாட்டரங்கத்தை நாசப்படுத்தியும், கடையடைப்புப் போராட்டம் நடத்தியும் பாக். விளையாட்டு வீரர்களைத் தாக்கப் போவதாகவும், இந்துவெறி பாசிசத்தைக் கக்கியது. இப்போது டெல்லியில் பாக். பிரதமரின் கொடும்பாவியை எரித்ததோடு, பாகிஸ்தான் நடிகர்களோ, பாடகர்களோ இந்தியாவுக்குள் நுழைய அனுமதிகக மாட்டோம்; பாக். திரைப் படங்களையும் பாடல் காசட்டுகளையும் கொளுத்துவோம் என்று சிவசேனா கொக்கரிக்கிறது. அதன் பங்காளியான பாரதீய ஜனதா, ''நீங்கள் நாட்டுப் பற்று கொண்டவர்களாயிருந்தால், ஏன் இந்தியத் தூதரக அதிகாரி தாக்கப்பட்டதைக் கண்டிக்கவில்லை?'' என்று கேட்டு முஸ்லிம்களை தேசவிரோதிகளாக - பாக். கைக்கூலிகளாக அவதூறு செய்து வருகிறது. இத்தகைய இந்துவெறி பாசிசக் கூத்துக்களையே தேசபக்தியாக அங்கீகரித்து, சிறுபான்மை காங்கிரசு அரசு ஆதரித்து வருகிறது.

இவ்வாறு அண்டை நாட்டுக்கு எதிராக குறுகிய தேசிய வெறியூட்டி ஆதிக்கம் செலுத்துவதன் மூலமோ, ஒரு நாட்டின் அழிவில்தான் தீர்வு உள்ளது என்ற அளவுக்குப் பகைமையை வளர்ப்பதன் மூலமோ ஏழை நாடுகளான இந்தியாவும் பாகிஸ்தானும் ஒருபோதும் மேம்பாடு அடைய முடியாது. அண்டை நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதும், தூதர்களையே உளவாளிகளாகப் பாவிப்பதும், ஆத்திரமூட்டும் பிரச்சாரம் செய்வதும், பகைமையை வளர்த்து போர்த்தளவாடங்களை கோடிக்கணக்கில் வாங்கிக் குவிப்பதும் இருநாட்டு மக்களுக்கும் பேரழிவைத்தான் கொண்டுவரும். எனவே இம் மக்கள் விரோத ஆட்சியாளர்களின், மதவெறிக் கட்சிகளின் குறுகிய தேசிய வெறி - ஆத்திரமூட்டலுக்குப் பலியாகிவிடாமல் இருநாட்டு உழைக்கும் மக்களும் விழிப்புடனிருந்து இவற்றை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். ● பாலன்

# ரௌடி (போலி) சாமியார் ஆசிரியர் மீது தாக்குதல்

**சி**த்து வேலைகள் மூலம் சிவகங்கை வட்டார மக்களை ஏமாற்றி, பல கோடிகளுக்கு அதிபதியான முத்துக் காமாட்சி சுவாமிகள் எனப்படும் அய்யாத்துரை, தன்னை மிகப் பெரிய குண்டர் படைத் தளபதி என்பதை இப்போது நிரூபித்துக் கொண்டுள்ளான். கீழ்க்கண்டனூரில் உள்ள சீதையம்மாள் பாலிடெக்னிக்கும், மானாமதுரை காமாட்சி அம்மாள் பாலிடெக்னிக்கும் இவனது பினாமிகள் நடத்தும் சுயநிதிக் கல்லூரிகள். சீதையம்மாள் பாலிடெக்னிக் 1984-ல் துவக்கப்பட்டபோது அதில் வேலைக்குச் சேர்ந்த ஆசிரியர்களிடம் டெபாசிட் தொகையாக ரூ.5 ஆயிரம், 10 ஆயிரம் என பிடுங்கப்பட்ட அதே சமயம் அவர்களுக்கு ரூ.600 மட்டுமே சம்பளமாகத் தரப்பட்டது. இதற்கெதிராக குமுறிக் கொண்டிருந்த ஆசிரியர்கள் 1991-ல் அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்புகளின் ஆதரவோடு ஊதிய உயர்வு கோரி மிகப் பெரிய போராட்டத்தை நடத்தினர். மாவட்ட ஆட்சியாளரின் உத்திரவின்



போலி சாமியார் முத்துக் காமாட்சி

பேரில், வட்டார வளர்ச்சி அதிகாரி முன்னிலையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடந்தது. அதில் அரசுக் கல்லூரிகளுக்கு இணையான ஊதியத்தை வழங்க வேண்டும் என்றும், ஆசிரியர்களிடம் பெற்ற டெபாசிட் தொகையை திருப்பித்தர வேண்டும் என்றும் முடிவானது.

ஆனால் நிர்வாகமோ டெபாசிட் தொகையைத் திருப்பித் தராததோடு ஆசிரியர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கியது. கடந்த ஆண்டு தமிழகத்தில் உள்ள பல்வேறு தனியார் பாலிடெக்னிக்குகளிலிருந்து 70 ஆசிரியர்கள் திடீரென வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இதை எதிர்த்து தமிழ்நாடு சுயநிதி பாலிடெக்னிக் ஆசிரியர் சங்கம் நடத்திய போராட்டத்தில் சீதையம்மாள் பாலிடெக்னிக்கைச் சேர்ந்த 24 ஆசிரியர்கள் பங்கேற்றனர். இதனால் இவர்களது நடவடிக்கை சரியில்லை என்று காரணம் காட்டி கடந்த மே 2-ந் தேதியன்று நிர்வாகம் அவர்களை பணி நீக்கம் செய்தது. இதை ரத்துசெய்யக் கோரியும் டெபாசிட் தொகையை திருப்பித் தரக் கோரியும் ஆசிரியர்கள் போராடி வந்தனர்.

இந் நிலையில் கடந்த ஜூன் 14-ந் தேதியன்று நிர்வாகம், டெபாசிட் தொகையைத் திருப்பித் தருவதாகவும் கையெழுத்திட்டு பெற்றுக் கொள்ளுமாறும் ஆசிரியர்களை அழைத்தது. ஆசிரியர்கள் உள்ளே சென்றதும், மோசடி சாமியார் முத்துக் காமாட்சி, சீதையம்மாள் பாலிடெக்னிக் முதல்வர் பாலாமணி, மானாமதுரை காமாட்சி அம்மாள் பாலிடெக்னிக் நிர்வாகி காத்தமுத்து, சிவகங்கை துணிக்கடை உரிமையாளர் சுகர்ணோ ஆகியோர் சூழ்ந்துகொண்டு, டெபாசிட் பணம் வேண்டுமென்றால், பணி நீக்கம் செய்யப்பட்டதை ஏற்றுக் கொள்கிறேன் என்று எழுதப்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு மிரட்டியுள்ளனர். ஆசிரியர்கள் இதற்கு உடன்பட மறுக்கவே, ஆத்திரமடைந்து ஆபாசமாகப் பேசிய முத்துக் காமாட்சி, பக்கத்து அறையில் தயாராக வைத்திருந்த தனது அடியாட்களை ஏவிவிட்டான். உருட்டுக் கட்டை, இரும்புத் தடியுடன் பாய்ந்த அந்த கும்பல் ஆசிரியர்களை மிருகத்தனமாகத் தாக்கியது. அலறியடித்துக் கொண்டு சிதறி ஓடிய ஆசிரியர்களை அடியாட்கள் பிடித்து வந்து முத்துக் காமாட்சியிடம் நிறுத்தியதும், அவன் தனது கைத்துப்பாக்கியைக் காட்டி, எல்லோரும் மரியாதையாக கையெழுத்துப் போடுங்கள்; இல்லையேல் சுட்டு விடுவேன் என்று மிரட்டியுள்ளான். முத்துக் காமாட்சியை எதிர்த்துப் பேசிய பாண்டி என்ற ஆசிரியரை பலர் முன்னிலையில் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி, அவரது கையை முறித்துள்ளான். பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தபிறகு முத்துக் காமாட்சி கும்பல் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த ரௌடிக் கும்பல் ஓட்டுக் கட்சிப் பிரமுகர்களின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு பிணையில் வெளிவந்துள்ளது.

சாமியார் போர்வையில் கல்விக் கொள்ளையை நடத்தும் கயவாளிக்கு ஓர் உதாரணம்தான் முத்துக் காமாட்சி. இன்னும் கிருபானந்த வாரியாரின் விநாயகா மருத்துவக் கல்லூரி, மேல் மருவத்தூர் பங்காரு பண்டாரத்தின் ஆதிபராசக்தி இன்ஜினியரிங் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக், 'முற்றும் துறந்த முனிவர்' சங்கராச்சாரியின் பாலிடெக்னிக், 'ஏசு அழைக்கிறார்' தினகரனின் இன்ஜினியரிங் கல்லூரி என தமிழகமெங்கும் சாமியார்களும் தேவதூதர்களும் கல்வி வியாபாரத்தில் புகுந்து கொள்ளையடிக்க கிளம்பியுள்ளனர். உழைக்கும் மக்களின் உறுதியான போராட்டத்தின் மூலமே இம் மோசடிப் பேர்வழிகளின் முகத்திரையைக் கிழித்தெறிய முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா மீது அமெரிக்கா தடை:
# ஏகாதிபத்திய அடாவடி

இனி கழிப்பறைக்குச் செல்வதற்குக்கூட அமெரிக்காவிடம் அனுமதி கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏற்கனவே "சூப்பர் 301" என்கிற தனது வர்த்தக தடைச் சட்டத்தைக் காட்டி இந்தியாவை மிரட்டிவரும் அமெரிக்கா, இப்பேது இந்திய வானியல் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு (ISRO) இரண்டாண்டுகள் தடைவிதித்து கருப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது. அதோடு இந்தியாவைக் கண்காணிக்குமாறு தனது கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வை ஏவி விட்டுள்ளது. மேலும் அவசியம் ஏற்பட்டால் இந்தியா மீது போர்த் தாக்குதல் நடத்தவும் வேண்டும் என்று தனது இராணுவத் தலைமையக ஆண்டறிக்கையில் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. அண்மையில் இரண்டாவது "அக்னி" ஏவுகணையை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி பூரித்துப் போன விஞ்ஞானிகளும் ஆட்சியாளர்களும், அமெரிக்காவின் புதிய அச்சுறுத்தலைக் கண்டு கையைப் பிசைந்து கொண்டிருக்கிறார்கள்.

ஏவுகணை தொழில் நுட்பத்துக்காக அமெரிக்காவைச் சார்ந்திருந்த இந்தியா, இப்போது சற்றே குறைவான விலையில் ரஷியா அதை அளிக்க முன்வந்ததும் அதனுடன் கடந்த ஆண்டின் துவக்கத்தில் ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொண்டது. குறிப்பாக, செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்கு அவசியமான "கிரியோஜெனிக்" என்ஜின்களை ரஷியாவில் கூட்டாகத் தயாரிக்கவும், அத்தொழில் நுட்பப் பயிற்சியின் மூலம் பின்னர் சுயமாக இந்தியாவில் தயாரித்துக் கொள்ளவும் ரூ.235 கோடிக்கு ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. இதன் மூலம் அடுத்த ஐந்தாண்டுகளில் வேறு அந்நிய நாடுகளின் உதவியின்றி இந்தியா சுயமாக செயற்கைக் கோள்களையும் ஏவுகணைகளையும் விண்ணில் செலுத்த முடியும்.

தன்னைச் சார்ந்திராமல் ஒரு ஏழைநாடு ஏவுகணை தொழில் நுட்பத்தில் முன்னேறுவது அமெரிக்க வல்லரசின் அகராதியில் குற்றமல்லவா? எனவே ஆத்திரமடைந்த அமெரிக்கா, அணு ஆயுதப் பரவல் தடுப்புச் சட்டத்தையும், ஏவுகணை விரிவாக்க கட்டுப்பாட்டுச் சட்டத்தையும் இந்தியா மீறிவிட்டதாகக்கூறி இந்தியா, ரஷியா ஆகிய இரு நாடுகளின் வானியல் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஈராண்டுகால தடை விதித்துள்ளது. அதாவது, இந்திய வானியல் ஆராய்ச்சிக்குத் தேவையான கணிப்பொறிகள், தொலை நோக்கிக் கண்ணாடிகள் முதலானவற்றையும், இவற்றுக்கரன தொழில் நுட்ப உதவியையும் அமெரிக்கா வழங்காது. இதன் விளைவாக குறிப்பாக, தற்போது இந்தியாவைச் சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைக் கோள்கள் பழுதடைந்துவிட்டால் புதிய செயற்கைக்கோள் தயாரித்து இந்தியா அதனை விண்ணில் செலுத்த முடியாமல் போகும். இதனால் இந்தியாவின் தொலைக் காட்சி ஒளிபரப்பு, செய்தித் தொடர்பு, வானிலை மாற்றம் போன்ற தகவல் அறிவது முதலானவை கடுமையாக பாதிப்படையும்.

அமெரிக்காவின் இந்தத் தடை அநியாயமானது மட்டுமல்ல. எதேச்சதிகாரமானது. ஏனெனில், தமது ஆதிக்க நலன்களுக்காக அமெரிக்கா மற்றும் 6 ஏகாதிபத்திய நாடுகளும் கூட்டாக ஏவுகணை கட்டுப்பாடு சட்டத்தை (MTCR) போட்டுள்ளனவே தவிர, அமெரிக்கா மட்டுமல்ல; இந்தியா மீது தடை விதிப்பதாய் இருந்தால் 7 நாடுகளும் கூட்டாக தடை விதித்திருக்க வேண்டும். ஆனால் அமெரிக்காவோ தன்னிச்சையாக தடை விதித்துவிட்டு மற்ற 6 நாடுகளையும் தன்னை ஆதரிக்க கோருகிறது. மேலும் 7 நாடுகளின் ஏவுகணை தடுப்பு விதிப்படி, 500 கிலோ எடையும் 300 கி.மீ. தூரத்திற்கு மேற்பட்ட அனைத்து ஏவுகணைகளையும் தடை செய்ய வேண்டும். ஆனால் இந்தியா இதுவரை செலுத்திய ஏவுகணைகள் அனைத்தும் இந்த வரம்பைத் தாண்டியவை. அப்போதெல்லாம் வாய் திறக்காத அமெரிக்கா இப்போது திடீரென கூச்சல் போட்டு தடை விதிக்கிறது. அடுத்து "கிரியோஜெனிக்" என்ஜின்கள் ஏவுகணைகளுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. இவை செயற்கைக் கோள்களை உரிய சுழற்சிப் பாதையில் செலுத்த விண் ஊர்திகளின் இறுதிக்கட்டத்தில் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. இவற்றையெல்லாம் அறிந்திருந்த போதிலும், ரஷியாவிடமிருந்து ஏவுகணைத் தொழில் நுட்பத்தைப் பெற்று, அணு ஆயுதப் போருக்கான ஏவுகணை தயாரிக்கும் முயற்சியல் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா அடாவடித்தனமாக குற்றம் சாட்டுகிறது.

தனது விசுவாசியாக இருந்தாலும், ஏற்கனவே ரஷிய சார்பு நாடாக இந்தியா நீண்ட காலமாக இருந்ததாலும், அணு ஆயுத தயாரிப்புக்கான ஆற்றல் பெற்ற நாடாக இருப்பதாலும் தனது கட்டுப்பாட்டை மீறிச் சென்று விடுமோ என்று அமெரிக்கா அஞ்சுகிறது. அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் அறிக்கைப்படி, இந்தியாவைவிட பாகிஸ்தானையே அது நம்பகமான கூட்டாளியாகக் கருதுகிறது. மேலும் புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் இந்திய ஆட்சியாளர்கள் நாட்டை மறு அடகுவைத்த போதிலும், இன்னமும் தென்கொரியா, தைவானைப் போல சுதந்திரக் கொள்ளைக்கு கதவை அகலத் திறக்காமல் பெயரளவிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு, போலி சோசலிசம் மற்றும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பதைக் கூட அமெரிக்கா கடுமையாக எதிர்க்கிறது. எனவே "சூப்பர் 301" எனும் தனது வர்த்தக தடைச் சட்டத்தைக் காட்டி மிரட்டியும், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு நிர்பந்தித்தும், இந்திய ஏற்றுமதியில் 1% கூட இல்லாத மருந்துப் பொருட்களுக்கு திடீரென காப்பு வரி விதிப்பைக் கூட்டியும், இப்போது வானியல் ஆராய்ச்சி நிறுவனத்துக்குத்




தடை விதித்தும் பலவகையிலும் அச்சுறுத்தி வருகிறது அமெரிக்க வல்லரசு.

அமெரிக்காவின் அடாவடித்தனத்தை எதிர்த்து நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சிகள் கூச்சலிட்டதோடு நின்றுவிட்டன. பத்திரிகைகளும் முதலாளித்துவ மூதறிஞர்களும் அமெரிக்கா இப்படி கையை முறுக்கி காரியத்தை சாதிக்கிறதே என்று புலம்புகிறார்கள். ஆனால் இதே பத்திரிகைகளும் அறிவுஜீவிகளும்தான் நாட்டை மறு அடகு வைக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையைப் புகழ்ந்து பாராட்டினார்கள். புதிய சகாப்தமும் புதிய புரட்சியும் இந்தியாவில் மலர்ந்துவிட்டது என்று கொண்டாடினார்கள். இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கங்களுக்கு அமெரிக்காவின் தடை ஓர் இடையூறாகி விடுமோ என்ற பீதியினாலேயே இப்போது எதிர்ப்புக் காட்டி முணுமுணுக்கிறார்கள். ஆனால் இந்திய ஆட்சியாளர்களோ, அமெரிக்காவின் நிர்பந்தங்களுக்கு மேலும் பணிந்து போவதன் மூலம், இத்தடைகளை நீக்கிவிட முடியும் என்று கருதுகிறார்கள்.

இத்துரோகிகள் அதிகாரத்தில் உள்ளவரை, உலக பேட்டை ரௌடியாக அமெரிக்கா ஆட்டம் போடுவதையும், அதன் ஒற்றைத் துருவ உலக ஒழுங்கமைப்பிற்கு இந்தியா மறு காலனியாக்கப்படுவதையும் தடுத்துவிட முடியாது. தேசவிரோத, மக்கள் விரோத காங்கிரசுக்கும் அதன் எஜமானர்களான அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக சக்திவாய்ந்த மக்கள்திரள் புரட்சிப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லாமல் நாடும் மக்களும் விடுதலையடைந்துவிட முடியாது.

○ குமார்


படிப்பகம்

www.padippakam.com




இதோ ஓர் அப்பாவி இளைஞன் மீது ஆவேசமாக பாய்ந்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் என விரட்டியடிக்கிறது போலீசு! நடைபாதை வியாபாரிகள், நடைபாதை பிச்சைக்காரர்கள், நடைபாதையில் குடித்தனங்கள் என சென்னை மாநகர தெருவோரங்கள் நிரம்பி வழிவது உண்மைதான். இந்நிலைக்கு பொறுப்பாளிகள் யார்? காரணகர்த்தாக்கள் யார்? இவர்களை ஒட்டச் சுரண்டி வீதியில் நிர்க்கதியாய் வீசியவர்கள் யார்? காலங்காலமாய் இவர்களை ஏய்த்து ஆட்சி செய்தவர்களல்லவா? பெரும் பணக்காரர்களல்லவா? அவர்களது கார்களுக்கு சலாம் போட்டு நடைபாதையில் ஒதுங்க வழியமைத்துக் கொடுக்கும் இக்காக்கிச் சட்டைகளுக்கு ஏழைகள் என்றால் இளக்காரம்! தமது கையரிப்பிற்கு நடைபாதை வியாபாரிகளிடமும் லஞ்சம் வாங்கும் இந்தக் காக்கி சட்டைகள் மேலிடத்து நிர்பந்தங்கள், காசுள்ளவனின் புகார்கள் வந்தால் அவ்வப்போது ஓடோடி வந்து நாய்களைப் போல் இவர்களை அடித்து துரத்தும்.

இதோ நடைபாதையை மட்டுமல்ல கால்வாசி ரோட்டையே ஆக்கிரமித்துக் கொண்டு கம்புகள் கொட்டிக் கிடக்கின்றனவே இவை அப்போலீசின் கண்களை உறுத்தாது. ஏனெனில் இது ஆளுங் கட்சிகாரர்களின் அதுவும் மேலிடத்து விவகாரம்! ஜெயலலிதாவின் 'கட் - அவுட்'டிற்காக கொட்டிக் கிடக்கும் கம்புகள். பள்ளி, வங்கி, குடியிருப்புகள் நிறைந்த சென்னை நகரத்தின் முக்கிய சாலை இது. காலை மாலை முக்கிய நேரங்களில் நெரிசல் ஏற்பட்டு பள்ளிக் குழந்தைகள் தடுக்கி விழுவதால் அகற்ற கோரி பல புகார்கள் கொடுக்கப்பட்டும் போலீசு கண்டு கொள்ளவே இல்லை. ஜெயலலிதா போயஸ் தோட்டத்தை விட்டு வெளியே வருகிறார் என்றாலே முக்கியமான நான்கைந்து வழித்தடங்களில் முழு போக்குவரத்தே நிறுத்தப்படுகிறது. ஜெயலலிதா செல்வது ஒரு பாதையானாலும் கடைசி நேரத்தில் அவர் வெளியே வருவது ரத்து ஆனாலும் பல மணி நேரம் மக்கள் காத்துக் கொண்டு தவிக்கிறார்கள். போலீசே இதை முன்னின்று செய்து மக்களுக்கு தொல்லை கொடுக்கும்போது இந்த கால்வாசி சாலை ஆக்கிரமிப்பு போலீசுக்கு மிகச்சாதாரணம்! ஆள்பவர்கள் என்றால், அதிகாரமுள்ளவர்கள் என்றால் அவர்களுக்கு சாலையும் சொந்தம்; சாமானிய மக்கள் என்றால் அவர்கள் நடைபாதையிலும் உயிர் வாழக்கூடாது என்கிற அக்கிரமத்தை எத்தனை நாள்தான் பார்த்துக் கொண்டிருப்பது?



# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்